


கல்கி
சிறுகதைச் சிறப்பிதழ்
KALKI
30-8-1970
40 காசு



கீலோபர் 3 மாதங்களில் நீந்த ஆரம்பித்தாள். 4 மாதங்களில் அவளுடைய பிறப்புஎடை இரட்டிப்பாகியது! வாளிப்பான அவளுடைய அழகிய கைகளையும் கால்களையும் தாய்மார்கள் நின்று ரசித்தார்கள். இந்த மோகினியின் பெரிய இரகசியம்: ஒரு விசேஷமான குழந்தை உணவு.





அறிமுகப்படுத்திய இரண்டாண்டுகளுக்குள் அமுல்ஸ்ப்ரே இந்தியாவிலேயே உச்ச விற்பனையுள்ள குழந்தை உணவாகி விட்டது. விசேஷமான ஊட்டத்தை அளிப்பதற்காக, அது ஒரு விசேஷ செய்முறைப்படி, விசேஷமான ஆக்கமுறையில்(ஸ்ப்ரே டிரையிங்) தயாரிக்கப் படுகிறது. ஆம், உங்களுடைய அருமைக் குழந்தைக்காக. சீரணிக்க எளிதான அமுல்ஸ்ப்ரே சமச்சீர்த்த ஊட்டச் சத்தை வாரி வழங்குகிறது: அவசியமான வைட்டமின்களும் கனிப் பொருள்களும்; மூளையும் உடலும் நன்கு வளர. அதிகமான தரம் மிகுந்த புரதம்.

அமுல்ஸ்ப்ரே

தாய்ப் பாலுக்குப் பதிலாகப் புகட்டச் சிறந்தது.

கல்கி பொருளடக்கம்

சாதாரண, ஆவணி 14 : 1970, ஆகஸ்டு 30

சிறுகதைச் சிறப்பிதழ்

சந்தா விவரம்	ஒருவருடம்	ஆறுமாதம்
இந்தியா	ரூ. 20-00	ரூ. 10-00
இலங்கை (இலங்கை நாணயம்)	ரூ. 21-00	ரூ. 10-50
இதர நாடுகள்	ரூ. 40-00	ரூ. 20-00

எம்.எஸ்.சுப்புலட்சுமி பாடியுள்ள பஜகோவிந்தம், விஷ்ணு ஸஹஸ்ரநாமம் புதிய LP இசைத்தட்டு



உள்ளத்தை உருக்கும் வண்ணம் பாடப் பெற்றுள்ள இப் பக்திப் பாடல்களைக் கேட்டு மகிழுங்கள். இந்த இசைத் தட்டை வாங்கிச் செல்லுங்கள். ஏனெனில் அதனைத் திரும்பத் திரும்பக் கேட்டு மகிழ விரும்புவீர்கள். தேர்ந்தெடுத்த இசைத்தட்டுகளுக்கு அருகாமையில் உள்ள எச். எம். வி. விற்பனையாளரை அணுகுங்கள்.

எம். எஸ். சுப்புலட்சுமி பாடிய இதர இணையற்ற LP இசைத்தட்டுகள்:

ஐ. நா.வில் எம். எஸ். (3 LP செட்)

மீரா பஜன் (ஹிந்தி)

வேங்கடேசசுப்ரபாதம்

பஜகோவிந்தம் :

ஞானம், பக்தி ஆகியவற்றின் இணைபிரியா மார்க்கங்களைப் பற்றி ஆதி சங்கராச்சாரியார் அருளிய மிகப் புகழ் வாய்ந்த பக்திப் பாடல். 10 ஸ்லோகங்கள் - ஒவ்வொன்றும் வெவ்வேறு ராகங்களில்.

விஷ்ணு ஸஹஸ்ரநாமம் :

வியாசர் அருளிய மகா பாரதம் ஹிந்து மத நூல்களிலேயே மிகவும் போற்றப்படுவது அதன் மகத்தான அம்சமாக விளங்கும் இந்த உயரிய பக்திப் பாடலைச் சிறப்பாகப் பாடியுள்ளார் ஸ்ரீமதி சுப்புலட்சுமி.

EMI

திகிராமபோன் கம்பெனி ஆஃப் இந்தியா லிமிடெட்
எச். எம். வி., கொலம்பியா
அசோசியேஷன் ஆஃப்
ஸ்தர்ன் இந்தியா ஆகியவற்றுடன்
இணைந்து செயல்படுவது.

GC-6149

மலர் 30

இதழ் 5



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

கயிறும் பாம்பும்

தனி மனிதப் பண்புகளைப் புறக்கணிக்க எவ்வளவோ முயற்சி செய்யலாம். எனினும் 'தனிமனிதன்' என்பவன் ஓர் அழுத்தம் திருத்தமான யதார்த்த உண்மையாக இருந்தே வருகிறான். இதே போல் தனிமனிதனுக்கும் தாய் நாட்டுக்கும் இடையே உள்ள சமூகப் பிரிவுகளும் இந்தியாவில் யதார்த்த உண்மையாக உள்ளன. இந்த இடை வகுப்புக்களை அகற்ற வேண்டுமென நாம் எவ்வளவுதான் சொன்னாலும், அதற்காக எவ்வளவுதான் காரியம் செய்தாலும், அவை பிரத்தியட்சத்தில் இருக்கவே செய்கின்றன. இந்தப் பிரத்தியட்ச நிலவரத்தை அலட்சியப்படுத்தி, கற்பிதமான இலட்சியக் கனவு காண்பது தோல்வியிலும் ஆசாபங்கத்திலும்தான் முடியும். 'ஸத்யமேவ ஜயதே' என்ற உபநிஷத வாசகம்—நமது தேசியப் பிரமாண வாசகம்—வாய்மை, செயல் நேர்மை ஆகிய சத்தியங்களை மட்டும் குறிப்பிடவில்லை. 'யதார்த்த உண்மையே வெல்லும்' என்ற மகத்தான சத்தியத்தையும் அவ்வாசகம்உட்கிடையாக உணர்த்துகிறது.

கெட்டியான பூமியின் மீதுதான் இருப்புப் பாதை போட முடியும். அவ்வாறே உறுதிப்பட்டுவிட்ட பிரத்யட்ச நிலவரத்தின் மீதுதான் அரசியலை அமைக்க வேண்டும். இப்படிப்பட்ட ஓர் அழுத்தமான பிரத்தியட்ச உண்மை நம் நாட்டிலுள்ள பல சமூகப் பிரிவுகள். இவற்றை ஒப்புக்கொள்வதால் 'வகுப்புவாதம்' செய்வதாகக் கெட்ட பெயர் சூட்ட வேண்டியதில்லை.

ஒவ்வொருவரும் தம்மையே விரும்புகின்றனர். தம் முன்னேற்றத்திலேயே ஈடுபட்டுள்ளனர். இதனால் அவர்கள் மற்றவர்களிடம் பொறாமைப்படுவதாகவோ, பிறருக்குக் குந்தகம் விளைவிப்பதாகவோ பொருளாகாது அல்லவா? இவ்வாறே நம் நாட்டில் தேசத்துக்கும் தனி மனிதனுக்கும் இடையே உள்ள சமூகப் பிரிவுகளின் மீது அந்தந்த வகுப்பு மக்களுக்கு உள்ள பற்றுதலைப் பிற பிரிவுகளுக்குக் கெடுதல் செய்யாத வகையில் ஒழுங்குபடுத்த முடியும். அந்தந்தப் பிரிவும் பிற பிரிவுகளைப் பாதிக்காமல் தங்கள் முன்னேற்றத்துக்கு முயலச் செய்து, மொத்தத்தில் தேசம் முழுவதற்கும் நல்ல விளைவு உண்டாகுமாறு செய்ய முடியும்.

ரயில் நிலையத்தில் பல ரயில்கள் பல்வேறு இருப்புப் பாதைகளில் வருகின்றன. இவை யாவும் ஒழுங்காகக் கட்டுப்படுத்தப் பெறும்போது விபத்துக்கள் ஏற்படுவதில்லை; போக்குவரத்து என்ற பொது நலனே வளர்க்கப்படுகிறது. இவ்விதமே மக்களுக்குத் தத்தம் சமூகப் பிரிவிடம் உள்ள பற்றுதலைக் கட்டுப்படுத்தி, தேசிய நலன் விளையுமாறு ஒழுங்குபடுத்த இயலும். ஒவ்வொரு சமூகத்திலும் தலைமையில் உள்ளவர்கள் சர்க்காரைச் சார்ந்திராமல் அதனை நன்கு கண்காணித்துப் பேணுவாராயின், மொத்தத்தில் தேசம் முழுவதற்கும் நலன் ஏற்படுமேயன்றி, 'வகுப்புவாதம்' என்று சொல்லப்படும் தீமை உண்டாகாது. ஒரு தாய் தன் குழந்தைகளிடம் தீவிர அன்பு காட்டுவதால் அவள் பிற குழந்தைகளுக்குத் தீங்கு இழைப்பதில்லை. இதை அனைவரும் ஒப்புக் கொள்வர். குடும்பப் பற்றுதலை ஒப்புவதுபோலவே, குடும்பப் பற்றுக்கும் தேசப் பற்றுக்கும் இடை நிலையில் வகுப்புப் பற்றையும் ஒப்புக் கொள்ளலாம். சமூகப் பிரிவுகளிடம் மக்களுக்குள்ள பற்றுதல் தவிர்க்க முடியாத பிரத்தியட்ச உண்மையாக இருக்கையில்—இந்தப் பற்றைத் தேச நலனுக்குச் சாதகமாக்க முடியும்போது—இதனை ஏன் அழிக்க முயல வேண்டும்? வகுப்புப் பற்று என்றாலே பயம் கொள்வதைத் தவிர்ப்போமாக. பல்வேறு இழைகளை ஓர் அழகிய துணியாக நெசவு செய்வது போல், அவரவருக்கும் தத்தம் பிரிவிடம் உள்ள பற்றுக்களையெல்லாம் இசைவாக நெசவு செய்து தேச நலன் என்ற துணியை உற்பத்தி செய்வோம். நம் உடலில் உள்ள ஒவ்வொரு சிறிய நரம்பும், திசுவும் தம்மை மட்டும் பேணிப் பாதுகாத்துக் கொள்கின்றன; ஆயினும் இதனால் அவற்

ருக்குள் உரசல் இன்றி மொத்தத்தில் தேகம் முழுதும் ஆரோக்கியமாகக் காக்கப்படுகிறது. தேகத்துக்குப் பொருந்துவது தேசத்துக்கும் பொருந்தும். மகத்தான சக்தி பொருந்திய நமது சமூகப் பற்றுதல்களிடை அவ்வப்போது உரசல் ஏற்படலாம். ஆனால் இவற்றைக் கண்டிப்புக் காட்டிக் கட்டுப்படுத்திவிட முடியும். உரசலுக்குத் தோது உள்ளதால், பற்றுக்களையே அடியோடு களைந்து விட வேண்டும் என்பதும் இதற்காகச் சர்க்காரைக் கொண்டு நிர்ப்பந்தம் செய்வதும் நியாயமல்ல.

தனிமனிதரின் சொந்த ஈடுபாடு தொழிலூக்கத்தைத் தருவதால் அதனை வளர்க்க வேண்டும். எனினும் சொந்த ஈடுபாடு தேச நலனைக் கெடுக்காதவாறு, சுய நலனைத் தியாகம் செய்யவும் வேண்டியுள்ளது. தேச நலனுக்காக ஒருவரின் சுயநலனைத் தியாகம் செய்யத் தூண்டுவது சிரமம். அதற்கு முதற்படியாக அவரவர் இயற்கையாகப் பற்று வைத்துள்ள சமூகத்துக்காகச் சொந்த நலத்தைத் தியாகம் புரியத் தூண்டலாம். இதிலிருந்து தேசத்துக்காகத் தியாகம் புரியும் பான்மையை வளர்க்கலாம்.

கயிற்றைப் பாம்பாக எண்ணிப் பயப்பட வேண்டாம். பாம்பைக் கயிறாக எண்ணி, ஏமாறவும் வேண்டாம். வகுப்பு உணர்ச்சி கயிறுதான். பாம்பல்ல. கம்யூனிஸம்தான் உண்மையில் பாம்பு. அது நம் சாஸன உரிமைகளையே அழிக்க முற்படுகிறது. அந்தப் பாம்பை வெறும் கயிறாகக் கருதக் கூடாது. பாம்பை வெறுமே விட்டு வைத்துவிட்டு அதற்குப் பதில் வகுப்புப் பற்று என்ற கயிற்றைப் பாம்பாகக் கருதி அதனுடன் யுத்தம் தொடுக்கலாகாது.

முதற்கண் ஒருவருக்குத் தம்மிடமும் தம் சுற்றத்தாரிடமும் உள்ள பற்றுதலை ஒப்புக்கொண்டு, இதனையே படிப்படியாக விரிவுபடுத்தி, தேசப்பற்றாகவும், இறுதியில் உயிரினம் அனைத்திடம் வைக்கும் பற்றாகவும் மாற்ற வேண்டும். இதுவே குறளாசிரியர் கூறும் 'சுற்றம் தழால்' என்ற தத்துவத்தின் பொருள். 'சுற்றம்' என்பதில் உறவினரை மட்டுமின்றி, சுற்றியுள்ள அனைவரையும் சேர்த்துக்கொண்டால், சமூகத்துக்கே சந்தோஷம் உண்டாகிறது. ஒரு சிறிய பிரிவுக்குள் உள்ளவர்கள் பரஸ்பரம் உதவிக்கொள்வதில் இன்பம் காண்கிறார்கள். பொதுவான ஆபத்தை எதிர்த்து பரஸ்பரம் காத்துக்கொள்வதில் மகிழ்ச்சி காண்கிறார்கள். இந்த உணர்வை விரிவாக்கி, அனைத்தும் தழுவுமாறு வளர்க்க வேண்டும்.

காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்ன நீரார்க்கே உள. —குறள்

காக்கை உறவு கலந்து உண்ணக் கண்டீர்
— தாயுமானவர்

("ஸ்வராஜ்யா"வில் ராஜாஜி எழுதியது.)

ராஜாஜியின் கருத்துக்கள்

ராஜ்யங்கள் தனிக் கொடி வைத்துக் கொள்ள அனுமதி தந்தால் தவறு ஜாபிதாவில் இன்னொன்றைச் சேர்த்ததாகும். ராஜ்யங்களிடை எல்லை குறித்தும், நதி நீர்ப் பங்கீடு குறித்தும் தகராறு எழும்போதெல்லாம் இந்தக் கொடிகள் உயர்த்தப்பட்டு, போர்க் கோலம் பூண்டிருப்பது போலவே ஆகிவிடும். வெளி ராஜ்யத்தில் உள்ளவர் அங்கங்கு தமது தாய் ராஜ்யத்தின் கொடியை ஏற்ற முற்படுவர். இதனும் பலவிதச் சண்டைகளுக்கு ஊக்கம் தந்ததாகும். கொடியைச் சிலர் ஏற்றுவதும், வேறு சிலர் அதை இறக்குவதுமாகச் சர்ச்சைகள் உண்டாகி, இந்தச் சர்ச்சைகள் பெரிய சண்டையாகவே உருவாகும். முன்பே நான் என் கருத்தைத் தெரிவித்திருந்தபடி தேசியக் கொடி ஒன்றைத் தவிர நம் நாட்டு அரசியல் கட்சிகளுக்கே கூடத் தனித் தனிக் கொடி இருக்க வேண்டியது இல்லை. மற்றச் சங்கங்களைப் போல் அவற்றுக்கும் வெவ்வேறுவித அடையாளமே போதும்.

இன்றையச் சூழ்நிலையில் என் ஆட்சேபனை மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. ராஜ்யங்களிடை பல முரண்பாடுகள் இருக்கையில், தனிக்கொடிகள்வைத்துக்கொண்டு,இவற்றின் பின் சிவசேனையும், சாமுண்டி சேனையும், திராவிட சேனையும் நிற்குமாயின் என்னவாகும்?


★

நம் நாட்டு மக்களுக்கு உழைப்பு மனப்பான்மையை ஊட்ட வேண்டியது உற்பத்திப் பெருக்குக்கு அத்தியாவசியமாகும். ஆனால் இப்படிச் செய்யப்படவில்லை. போதாததற்குச் சமீப காலமாக, மக்களின் உழைப்பு மனப்பான்மையை மேலும் நலிவு செய்யும் லாட்டரித் திட்டங்கள் வலுத்து வருகின்றன. மத்திய சர்க்கார் அனுமதியுடன், வெறி வேகத்துடன், வெட்கமே இல்லாமல் ராஜ்ய அரசாங்கங்கள் லாட்டரி வியாபாரத்துக்குப் பிரமாதமாக விளம்பரம் செய்து வருகின்றன.


இந்தப் பெரும் மடமையில் உச்சிஸ்தானம் வகிப்பது தமிழ்நாடு. லாட்டரி மூலம் அது பதினொரு கோடி ரூபாய் வசூலித்து, பரிசு-கமிஷன் — விளம்பரம் இவற்றுக்காக ஐந்து கோடி ரூபாய் செலவிட்டு, மீதத்தை லாபமாக அடைந்திருக்கிறது. இந்த ஆறு கோடி லாபத்துக்கு எதிராக லட்சோப லட்சம் மக்களின் உழைப்பு மனப்பான்மை நலிந்து, அவர்களுக்கு அதிருஷ்டப் பரிசில் ஏற்பட்டுள்ள மோகத்தை வைத்துப் பார்க்க வேண்டும். இந்த ஓயாத பிரமை, கஞ்சாவையும் அபினியையும் போலவே மோசமான போதைப் பொருளாகும். சில முறை சீட்டு வாங்கி, பரிசு விழாமல் இருந்தால் தானாகவே இந்தப் போதை விலகும். ஆனால் அப்படி விலக முடியாதவாறு, பெரிய பெரிய விளம்பரங்கள் மீண்டும் மக்களைப் பிரமையில் ஆழ்த்துகின்றன — தேசிய விரோதமான, உழைப்பு நெறிக்கு விரோதமான மனப்பான்மையை மீண்டும் உண்டாக்குகின்றன.


சுதந்திரக் கட்சி மகாநாடு

சென்னை, ஜில்லா சுதந்திரக் கட்சியின் இரண்டாவது மகாநாடு சென்ற 15, 16ம் தேதிகளில் தர்மபிரகாஷ் மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. வெளி மாவட்டங்களிலிருந்தும் ஏராளமான பிரதிநிதிகள் வந்திருந்தனர். மகா நாட்டுக்கு ராஜஸ்தானத்தைச் சேர்ந்த திரு எம். கே. மோத்தா எம். பி. தலைமை வகித்தார். டாக்டர் சந்தோஷம் எம். பி. வரவேற்புரை நிகழ்த்தினர்.










திரு சா. கணேசன் எம். எல். ஸி. மகா நாட்டைத் தொடங்கி வைத்தார். திரு சித்ரா நாராயணசாமி அவர்கள் மகா நாட்டு மலரை வெளியிட்டார். சுதந்திரக் கட்சியின் தலைவர் திரு எம். ஆர். மசானி மகாநாட்டில் பங்கெடுத்துக் கொண்டு சிறப்புரை ஆற்றினர். ராஜாஜி கலந்து கொண்டு அறவுரை பகர்ந்தார். திரு எஸ். எஸ். மாரிசாமி, டாக்டர் ஹண்டே, திரு வெங்கட்ராவ், திரு வி. ஆர். நரசிம்மன் முதலியோர் பேசினர்கள். பல முக்கியமான தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. மகாநாட்டின் பல காட்சிகளை இப்பக்கத்தில் காணலாம்.





அற்புதச் சிற்பங் கொள் விற்பனர் விவேகர்



பூமிக்கடியே புதைந்து கிடக்கிறது வித்து. ஆழ்ந்த மோனத்தில். விண்ணிலிருந்து இறங்கும் மழை மண்ணில் ஊறி அந்த வித்துக்குள் பொசிந்து, அதன் மோனத்தைக் கலைக்கிறது. அந்தக் குளிர்ந்த காருண்ய ஸ்பரிசம் பட்டவுடன் வித்து தன் செயலற்ற நிலையிலிருந்து கலைந்து, சிலிர்த்துக் கொண்டு ஒரேயடியாகச் செயற்பெருக்கில் ஈடுபடுகிறது. அப்புறம் என்ன? வித்து முளையாகிறது, முளை செடியாகிறது, செடி மரமாகிறது, மரம் பழுக்கிறது; அண்டியோருக்கெல்லாம் நிழல் தருகிறது.

சாக்ஷாத் லோக மாதா, தான் மாதாவாயினும் கன்னிமை குலையாமல் தனக்குள் உறையும் சிவத்தைத் தியானித்து நின்றாள், கன்னிக் குமரிக் கடலில் உள்ள ஒரு கருங்கற் பாறையில். ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்குப்பின், காளி மாதாவின் செல்வக் குமாரர் விவேகாநந்தர் இதே பாறையில், மற்றொரு பாறையாகத் தியானத்தில் மூழ்கிவிட்டார். மண்ணில் புதைந்த வித்தானார். அந்த வித்தினுள் வந்து புகுந்தது தேவியின் காருண்யத் துளி— அப்புறம் என்ன? ஒரே செயல் மயம்தான். விவேகாநந்தர் தமது பிறவிப் பணியை உணர்ந்து, அதை ஆற்றுவதற்கான திவ்விய ஆதேசமும் ஆவேசமும் பெற்றார்; மேல்நாடுகளிலும் தாய்நாட்டிலும் அற்புதமான வேதாந்தப் பிரசாரப் பணியைப் புரிந்தார். க்ஷீணித்துக் கிடந்த வேதாந்த தர்மத்தை மீண்டும் சர்வதேச அரங்கில் கொழுந்துவிட்டெரியச் செய்தார்.


கன்யாகுமரியில் உள்ள அந்தக் கடற்பாறை வேதாந்த சமய மறுமலர்ச்சியின் பிறப்பிடம் எனலாம்.

இப்புனித ஸ்தலத்தில், ஸ்வாமி விவேகாநந்தரின் நூற்றாண்டை ஒட்டி, 1962ல் மகத்தான நினைவாலயத் திட்டம் தொடங்கப்பட்டது. 'மகத்தான' என்ற பதம் முற்றிலும் பொருந்தும் மகோன்னதத் திட்டம் அது. ஸ்வாமிஜியின் பெரிய உருவச் சிலை, விசாலமான சபா மண்டபம், தியான மண்டபம், கன்யா குமரி தேவியின் பாதம் பதிந்த 'ஸ்ரீபாத'த்தைச் சுற்றிப் புராதன கலைப் பாணியில் கற்கோவில் முதலியன நிர்மாணிக்கப்பட்டன. தொள்ளாயிரம் கல்தச்சர்கள் தங்கள் கலைத் திறனையெல்லாம் காட்டி உருவாக்கிய அற்புத ஞாபகார்த்தம் இது. நவீன கொந்தளிப்புக்களிடையும் சலனமற்று ஸ்திரமாக நிற்கும் சநாதன தர்மத்தின் மூர்த்தியாக, கொந்தளிக்கும் கடலிடை நிற்கும் கலைக் கோயில் இது. ஆயிரத்து அறுநூறு அடிகள் கடல் நீரில் கற்களைக் கொண்டு வந்ததும், குடிநீருக்கு ஏற்பாடு செய்ததும், மின்சாரம் வழங்கியதும் குறிப்பிடத்தக்கவை.

எண்ணற்கரிய இப்பணி எண்பது லட்சம் ரூபாய் செலவில் உருவானது. பல ராஜ்ய அரசாங்கங்கள் — குறிப்பாக தமிழக அரசாங்கம் — இதற்காக நன்கொடை அள்ளி வழங்கின. நாடெங்கிலும் நிதி திரட்டப்பட்டது.

தேசம் முழுவதிலும் பல குழுக்கள் நிறுவப்பட்டு, இவற்றில் தேசப் பிரமுகர் அனைவரும் இடம் கொண்டு இப்பணியில் ஈடுபட்டனர்.

ஸ்வாமிஜிக்கு நாடு செலுத்தும் அஞ்சலியின் புனித உருவாக விளங்கும் இந்த ஞாபகார்த்தம் நிறைவு கண்டு, இப்போது செப்டம்பர் 2ந் தேதி பாரத ராஷ்டிரபதி டாக்டர் வி. வி. கிரி அவர்களால் திறந்து வைக்கப்படுகிறது. இது ஒரு மகோத்சவமாகும். ஸ்வாமிஜி சிகாகோ சர்வமத மகா சபையில் பிரசங்கம் நிகழ்த்திய மங்கள தினத்தின் திதி செப்டம்பர் 2-ந் தேதி நிகழுவதால் இத்தினத்தில் விழா நடக்கிறது.



ஞாபகார்த்தம் 'நிறைவு' கண்டதாகச் சொன்னாலும், இனி மேல்தான் அது தொடங்குகிறது என்றும் சொல்லலாம், நினைவாலயக் கமிட்டியார் இட்டபிட்

டுள்ளபடி இனி ஓர் அகில இந்திய ஆன்மிக தொண்டர் படை திரட்டப்பட்டு அது நமது வேதாந்த உண்மைகளைப் பரப்ப வேண்டும். 'மனிதனை முதற்கண் உண்மை மனிதனுக்க வேண்டும். அதன் பின் அம்மனிதனைத் தேவனுக்க வேண்டும்' என்பது ஸ்வாமிஜி விடுத்த அறைகூவல். நாட்டிலுள்ள யுவர்களையும் யுவதிகளையும் திரட்டிக் கன்யாகுமரியில் அறுபது ஏக்கரில் நிறுவவிருக்கும் ஒரு பயிற்சி சாலையில் அவர்களை ஆன்மிகத் தூதர்களாக உருவாக்கி, உலகெங்கும் வேதாந்தப் பிரசாரமும், சமூகப் பணியும் புரிவதற்காக அனுப்பிவைக்க உத்தேசித்துள்ளனர். இத்திட்டத்தின் அங்குரார்ப்பணமாக செப்டம்பர் 2ந் தேதி ஒரு நினைவு மலர் வெளியிடப்படுகிறது. உலக நாடுகள் அனைத்திலும் பாரதத்தின் சமய, தத்துவ, கலாசார அம்சங்கள் எப்படிப் பரவியுள்ளன என்பதைப் பல நாட்டு அறிஞர்கள் இம்மலரில் விளக்கியுள்ளனர்.

நினைவாலயத் திறப்புவிழாவை ஒட்டிப் பல கருத்தரங்குகள் நடைபெறும். இவற்றில் பேரறிஞர்கள் பங்கு கொள்வர்.

ஞாபகார்த்தக் குழுவினரின் சிறந்த இலட்சியங்கள் கைகூட ஸ்வாமிஜியையும், ஸ்ரீ பரமஹம்ஸ தேவரையும், கன்னிக் குமரியையும் பிரார்த்திக்கிறோம்.

கோடாமல் நாட்டின் கரங்களால் முந்தமுந்த
கோடிக் கரையிற்கண் கூர்ந்தமைத்த — ஈடில்லா
ஞானி விவேகானந்தர் நாமமுறு மண்டபம்
ஊனிற்சேர் நல்லுணர்வாய் ஓது.

பக்தியாய்ச் சிற்பிகள் போற்றிப் பகலிரவாய்
தக்க முறையிற் சமைத்திட்ட — மிக்குயர்ந்த
வேந்தர் விவேகானந்தர் மண்டபம் இந்துமத
விந்தை உயர்வாய் விளம்பு.

அண்டரும் போற்றுகின்ற ஆனந்தர் நாமமுறு
மண்டபம் நாட்டும் வனப்பெல்லாங் — கண்டு
அழகலையின் புன்சிரிப்பில் அற்புத நோக்கில்
குழைந்தலைகள் ஆடுங்கை கோத்து.


சிற்பங் கொலுவிருக்கும் ஸ்ரீபாதப் பாறையில்
விற்பனச் சிங்கம் விவேகானந்தர் — அற்புதமாய்
விண்டுரைத்த புத்துரைகள் விண்ணதிர ஆண்டொலிக்கும்
மண்ணதிரக் கேட்கலா மே.

முக்கடல் கூடுமூர் மூதறிஞன் ஆனந்தர்
எக்காலும் யோகத்தில் நிற்குமூர் — புக்கவரின்
பாவத்தைப் போக்குமூர் பூரணி மேவுமூர்
தேவருந் தாழவரும் ஊர்.

வண்ணமெழக் கல்லில் வடித்த வனப்பெல்லாம்
எண்ணியெண்ணிச் சிற்பி இனிதமைத்த — புண்ணியவான்
விந்தைத் துறவி விவேகானந்தர் மண்டபம்
முந்த எழுந்த முதல்.

மேதைகள் ஆய்ந்தசின்னம் விண்ணுலகுங் காணுசின்னம்
மோதலைகள் சூழ்கடலில் வாய்த்த சின்னம்—போதனைகள்
தந்தானந்தர் சின்னம் தவத்துறையிற் கண்ட சின்னம்
வந்தனைக் கேற்ற சின்னமாம்.

வித்துவான் க. உமைதாணு



ராமாயணம்



ராஜாஜி



61. வானரர்கள் தேடிச் சென்றார்கள்

''இதோ, பார்! ராமனே, இந்தக் கோடிக்கணக்கான வானரர்கள் அடங்கிய சேனை முழுதும் உன்னுடைய சேனை. இந்த அபூர்வ பலம் கொண்ட வானரர்கள் அனைவரும் உன்னுடைய ஆட்கள். உன் பணியைக் குறைவறச் செய்யும் ஆசையும் பலமும் பெற்றவர்கள்; நீ இடும் ஆணையைச் செய்து முடிப்பார்கள். இந்தப் பெருஞ் சேனையை உன் பொருளாகவே கருதி என்ன வேண்டுமோ அதைச் செய்ய உத்தரவிடுவாய்'' என்றான் சுக்ரீவன்.

இதைக் கேட்ட ராமன் மகிழ்ச்சிப் பரவசனாகி சுக்ரீவனை அணைத்துக் கட்டிக் கொண்டான்.

''முதலில் கண்டறிய வேண்டியது சீதை உயிரோடு இருக்கிறாளா, எங்கே இருக்கிறாள், ராவணன் எங்கே இருக்கிறான் என்பதை. பிறகு செய்ய வேண்டியதைச் செய்வோம். இந்தச் சேனைக்கு உத்தரவு இட வேண்டியவன் நீதான். நானாவது லக்ஷ்மணனாவது அல்ல. அரசன் 'நீ. தவிர நீதான் எல்லாம் அறிந்து செய்ய வேண்டியதைச் செய்யத் தெரிந்தவன். உன்னைப் போன்ற ஒரு நண்பன் தம்பி லக்ஷ்மணனோடு எனக்குக் கிடைத்த பாக்கியத்தை நான் என்னவென்று சொல்வேன்!'' என்றான்.

பிறகு சுக்ரீவன் தன் சேனாதிபதிகளுக்குக் கண்டிப்பான ஆணையிட்டான். நான்கு திக்குகளுக்கும் தன் பெருஞ் சேனையையும் தலைவர்களையும் பிரித்து ஓர் இடம் விடாமல் நன்றாகப் பார்த்துச் சீதையைத் தேடும்படி கடுமையான உத்தரவிட்டு அனுப்பினான்.

வானரத் தலைவர்கள் அனைவரையும் பல திசைகளுக்கு அனுப்பித்

தேடச் சொன்னபின், ஹனுமானைத் தனியாகக் கூப்பிட்டு சுக்ரீவன் சொன்னான் :

''வாயு குமாரனே ! நீயே இந்தக் காரியத்தை முடித்துக் கொடுக்கக்கூடியவன். உன் தந்தையின் வேகமும் தேஜஸும் நீ பெற்றிருக்கிறாய். உனக்குச் சமமாக வேறு யாரும் உலகில் இல்லை. உன்னைத்தான் நான் இந்தப் பெருங் காரியத்தில் நம்பியிருக்கிறேன். பலம், புத்தி, பராக்கிரமம், உபாயம், அறிவு அனைத்தும் உன்னிடம் இருக்கிறது. உனதே இந்தப் பொறுப்பு'' என்றான்.

ஹனுமானால் காரியம் சித்தியாகும் என்று ராமசந்திரனும் உணர்ந்தான். எந்த இடையூறு நேர்ந்தாலும் அவன் அதற்குப் பரிகாரம் கண்டு செய்ய வேண்டியதைச் செய்து முடிப்பான் என்று உணர்ந்தான். தன் சொந்த மோதிரத்தை ஹனுமானிடம் தந்து, ''இதை வைத்துக் கொள்வாய். உன்னால் சீதை கண்டுபிடிக்கப்படுவாள். அவளுக்கு இதைக் காட்டினாயானால் என் தூதன் என்று அவளுக்கு உறுதியாகும். சீதையை நான் மறுபடியும் அடையும்படி செய்வாயாக !'' என்று அன்போடும் பூரண நம்பிக்கையுடனும் ராமன் ஹனுமானைக் கேட்டுக் கொண்டான். சீதைக்



காக வாடித் துயருற்ற ராமன் ஆஞ்சனேயனுக்கு மோதிரத்தைத் தந்த காட்சியை யாரே எழுதிக்காட்ட முடியும்? பூரண நம்பிக்கையுடன் தந்தான். வாயு புத்திரனும் மோதிரத்தைப் பக்தியுடன் வாங்கிக்கொண்டு ராமசந்திரனை வணங்கி விடைபெற்றுக் கொண்டு சென்றான்.

சுக்ரீவன் தன் வானரப் படைக்கு மிகக் கண்டிப்பான ஆணை இட்டான். "எப்படியாவது சீதையைக் கண்டு பிடிக்க வேண்டும். எங்கே ஒளித்து வைக்கப்பட்டிருந்தாலும் உங்களால் கண்டுபிடிக்க முடியும். ஒரு மாதத்துக்குள் கட்டாயம் திரும்பி வந்து என்னிடம் செய்தி சொல்ல வேண்டும்" என்று ஆணையிட்டு அனுப்பினான். அவர்களும் புற்றிலிருந்து ஈசல் கிளம்புவது போல் கிளம்பி நான்கு திக்கிலும் சென்று விட்டார்கள்.

சதபலி என்கிற வானர வீரன் தன் சேனையுடன் வடக்கே சென்றான். விநதன் அவ்வாறே கிழக்கு நோக்கிச் சென்றான். சுஷேணன் மேற்கே தேடப் போனான். ஆஞ்சநேயன், அங்கதன், தாரன் தெற்கு நோக்கிச் சென்றார்கள்.

எல்லாரும் மிக உற்சாகமாகச் சென்றார்கள். எங்கிருந்தாலும் இந்தத் திருடன் ராவணனைக் கொன்று சீதையை மீட்டுக் கொண்டு வருவோம் என்று ஒருவரையொருவர் முந்திக் கொண்டு உற்சாகமாகக் கோஷம் செய்து கொண்டு சென்றார்கள்.

* * *

"இந்தப் பூமி முழுதும் நேரில் கண்டபடி ஒவ்வொரு திக்கிலிருக்கும் பிரதேசத்தையும் நீ உன் படைவீரர்களுக்கு விளக்கிச் சொன்னாயே! இவ்வளவையும் நீ எப்படிக் கண்டாய்? எப்போது கண்டாய்?" என்று ராமன் வானரர் தலைவன் சுக்ரீவனைக் கேட்டான்.

"ஐயனே! நான் வாலியால் திரும்பத் திரும்பத் துரத்தி யடிக்கப்பட்டேனல்லவா? நான் எங்கே சென்றாலும் அவன் என்னைத் துரத்திக் கொண்டு வருவான். உலகம் முழுதும் நான் இப்படி அலைந்தேனல்லவா? அந்தக் காரணத்தால் எனக்கு இந்தப் பூமண்டலத்தில் ஒவ்வொரு பாகமும் நேரில் காணச் சந்தர்ப்பம் ஏற்பட்டது. பிறகு இந்த மதங்க ரிஷி ஆசிரம பூமியைப் பற்றி அறிந்தேன். இந்தப் பிரதேசத்துக்குள் வாலி நுழைந்தானானால் ரிஷியின் சாபத்தால் அவன் தலை வெடித்துப் போகும். அந்தக் காரணத்தால் அவன் இந்த இடம் வரமாட்டான். வந்தாலும் எனக்கு அபாயமில்லை என்றறிந்ததும் இவ்விடம் மறைந்து பிழைத்தேன்" என்றான்.

* * *

வானரப் படைகளில் வடக்கும் கிழக்கும் மேற்கும் போனவர்கள் ஒரு மாதம் தேடிப் பார்த்துவிட்டு, சீதையைக் காணாமல் திரும்பி வந்து வானர ராஜனிடம் விஷயத்தைச் சொல்லி வணங்கினார்கள்.

"காடுகள், மலைகள், ஆறுகள், நகரங்கள் எல்லாம் ஜாக்கிரதையாகத் தேடிப் பார்த்து விட்டோம். எங்கும் காணவில்லை. ஜானகியின் இருப்பிடத்தைக் கண்டுபிடித்துத் திரும்பி வர எங்களுக்குப் பாக்கியமில்லாமல் தெற்கே போயிருக்கும் ஹனுமானுக்கே அந்த அதிர்ஷ்டம் போலிருக்கிறது. அரக்கன் சீதையைத் தூக்கிப் போனதும் தென்திசை நோக்கியே அல்லவா? ஹனுமான் இன்னும் திரும்பி வரவில்லை" என்றார்கள்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த ராமன் வானரர்கள் செய்து வந்த முயற்சிகளைப் பற்றித் திருப்தி அடைந்தான்.

(தொடரும்)

எஃகு நகரில் ஏகதந்தன் ஆலயம்

விநாயக சதுர்த்தி வருகிறதல்லவா? ஆஸ்திக அன்பர்களுக்கு ஒரு நல்ல திருப்பணியை அறிவிக்கிறோம். எஃகு நகரமாகிய பிலாயில் பொன்னான பணி செய்து வரும் பிலாய் தமிழ் மன்றத்தினர் விநாயகப் பெருமானுக்கு ஓர் ஆலயம் எழுப்பி வருகிறார்கள். நாலரை லட்சம் ரூபாய் செலவில், தென்னாட்டுப் பாணியில் நல்ல கற்கோவிலாகவே நிர்மாணித்துச் சம்பிரதாயப்படி வழிபாடு நடத்தத் திட்டமிட்டிருக்கின்றனர்.

விநாயகர் பாலாலயத்தில் குடிகொண்டு அருள்பாலித்து வருகிறார். விரைவிலேயே ஆலயம் பூர்த்தியாகி விநாயகப் பெருமான் அங்கு ஸ்திரமாகப் பிரதிஷ்டையாவதற்கு அன்பர்களின் கைங்கரியம் கோரப்படுகிறது. நன்கொடை அனுப்ப வேண்டிய முகவரி: Bhilai Tamil Manram, 5A/Street 21/Sector 10, Bhilai-1 (M.P.)

இவருக்கு இதுவும் தெரியும்

கலையில் மிதக்கும் நிலை



பார்க்கப்போனால் 'இவருக்கு இதுவும் தெரியும்' என்ற தலைப்பு திரு மா. அனந்தநாராயணனைப் பொறுத்தவரை சரியல்லதான். இவருக்கு **இவையும்** தெரியும் என்றே கூற வேண்டும்.

தமிழில் நாவல் இலக்கியம் தோன்றத் தொடங்கியபோது மூன்று புத்தகங்கள் வெளியாயின. பி. ஆர். ராஜமய்யரின் 'கமலாம்பாள் சரித்திரம், மாதவய்யாவின் 'பத்மாவதி சரித்திரம், வேதநாயகம் பிள்ளையின் 'பிரதாப முதலியார் சரித்திரம்.' இவற்றுள் பத்மாவதி சரித்திரம் எழுதியவரும் திருநெல்வேலிச் சீமையைச் சேர்ந்தவருமான அமரர் மாதவையாவின் புதல்வர்களில் ஒருவர் திரு மா. அனந்தநாராயணன்.

சென்னை மாநிலக் கல்லூரியில் முதல் மாணவராக வந்தவருக்கு, டாட்டா ஸ்காலர்ஷிப் கிடைத்தது. அதன் மூலம் லண்டன் சென்று கேம்பிரிட்ஜில் படித்து, மீண்டும் இந்தியா திரும்பி வரும்போது ஐ. ஸி. எஸ். பட்டமும் அவர் பெயருடன் இணைந்திருந்தது!

1930ல் குண்டூரில் உதவி கலெக்டரானார். ஆந்திராவில் இருந்ததால் தெலுங்கு மொழியைச் சரளமாகப் பேசக் கற்க முடிந்தது. தெலுங்கு கற்றுக் கொண்டதானது பிற்காலத்தில் தஞ்சையில் ஜில்லா நீதிபதி பதவி வகிக்கும்போது தியாகப்பிரும்மத்தின் கிருதிகளை நன்கு புரிந்துகொள்ள உதவிற்று.

சென்னை உயர்நீதி மன்றத்தில் தலைமை நீதிபதியாகப் பதவி வகித்து ஓய்வு பெற்றிருக்கும் திரு அனந்தநாராயணன் அவர்கள், பல கலைகளும் கற்றவராகத் திகழ்கிறார்!

இசை ஞானம் மிகுந்தவர். தமிழிலும் தெலுங்கிலும் நாற்பது கீர்த்தனங்களை இயற்றியிருக்கிறார். ஐந்து வர்ணங்கள் இயற்றியுள்ளார் இவர். இவரது நாவல், 'தி சில்வர் பில்கிரிமேஜ்' (The Silver Pilgrimage) அமெரிக்காவில் பிரசுரமாகி யிருக்கிறது.

ஆங்கில மொழியில் இருக்கும் சட்டங்களைத் தமிழாக்கத் தொடங்கியபோது அதற்கெனப் பணியாற்றிய அறிஞர்களுடன் அனந்தநாராயணனும் ஒத்துழைத்து உதவினார்.

இவர் 'ஆயில் பெயிண்டிங்'கில் எட்டு ஆண்டுகள் பயிற்சி பெற்றுப் பல ஓவியங்களைத் தீட்டியுள்ளார்.

எழும்பூர், தேசியக் கலைக் கூடத்தில், இவர் தீட்டிய ஏகநாதரின் ஓவியம் இடம் பெற்றிருப்பதைக் காணலாம். (படம்)

வீட்டின் வரவேற்பு அறையில் தமது ஓவியங்கள் சிலவற்றை மாட்டி வைத்திருக்கிறார். புராதனக் கட்டிடம் ஒன்று; இன்னொன்று அழகிய பூஞ்சோலை; மற்றொன்று இயற்கைக் காட்சி.

''இந்திய முறை ஓவியங்கள் வளர்ச்சிபெற வேண்டும். ஆக்கமும் ஊக்கமும் பெறவேண்டும். வாழ்வில் உபயோகப்படும் பொருள்கள் யாவும் கலைக் கண்ணோட்டத்துடன் தயாரிக்கப்பட்டவையாய் இருக்க வேண்டும்!'' என்று ஆசைப்படுகிறார் இவர்.

சிறிய அளவிலே, அழகான ஓவியங்கள் பெருமளவில் தோன்ற வேண்டும் என்பதும் இவரது ஆசை. ''இன்று சிறிய வீடுகளில், சிறிய அறைகளில் வாழ்கிறார்கள். அவர்கள் வீட்டில் அழகான சித்திரம் மாட்ட வேண்டும். மிகப் பெரிய ஓவியத்தைச் சுவரில் மாட்ட இடம் இருக்காது. ஆகவே, சிறிய சிறிய அளவில் ஒன்று அல்லது ஒன்றரை அடிக்குள் சித்திரங்களை எழுதி மாட்டலாம்'' என்கிறார்.

திரு அனந்தநாராயணனிடம் இன்னொரு விசேஷத் திறமையும் குடிகொண்டிருக்கிறது. அச்சுக் கலைப் பிரிவுகளுள் ஒன்று 'கிராபிக் பிரிண்டிங்' (Graphic Printing). அச்சுக் கோப்பதோ, பிளாக்குகள் தயார் செய்வதோ இன்றி, துத்தநாகத் தகடுகளில் அச்சடிக்க வேண்டியதைப் பொறிக்க வேண்டும். இந்தக் கலையினையும் முறையாகத் திரு அனந்தநாராயணன் கற்றிருக்கிறார்.

வாழ்க்கையைக் கலை உள்ளத்தோடு அணுகும் திரு அனந்தநாராயணன் தம் வீட்டில் வீணையை வைக்கும் 'ஸ்டாண்ட்'டைக் கூட இரு ஜோடி நாகப் பாம்புகள் படமெடுப்பது போன்று அழகிய வேலைப்பாடுடையதாக அமைத்திருக்கிறார்!

—ஏ. சுவாமிநாதன்



பஞ்சாபி

எஸ். எஸ். கல்லூரியில் வருடாந்தரப் பட்டிமன்றம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. மாணவர்களும் அழைப்பிதழ் பெற்று வந்தவர்களும் ஒரு கூடத்தில் நிரம்பி யிருந்தனர். முதல்வர் விருந்தினரை வரவேற்பதில் முனைந்தார். எல்லாரும் அமர்ந்தானதும் பட்டிமன்றம் வழக்கம்போல் வரவேற்புரையுடன் ஆரம்பமாயிற்று.

சிறந்த சொற்பொழிவாளர் என்பதற்கான பரிசை இந்தத் தடவையும் தட்டிக்கொண்டு போனவள் கன்வல்ஜித். பரிசளிப்பு முடிந்ததும் அவளது திறமை கண்டு வியப்போர் அவளைச் சுற்றிச் சூழ்ந்து மொய்த்தனர்.

பி. ஏ. இறுதியாண்டில் படித்துக்கொண்டிருந்த கன்வல்ஜித் சகல கலைகளிலும் வல்லவளாக இருந்தாள். கல்லூரியின் ஆண்டு மலருக்கு அவள்தான் ஆசிரியை. கல்லூரியின் சிறந்த விளையாட்டு வீராங்கனையும் அவளே. படிப்பிலும் அவள் மற்ற எல்லோரையும்விட ஒரு படி மேலேதான். அந்தக் கல்லூரியின் உயிர்நாடி அவள்தான் என்றால் அது மிகையாகாது; முற்றிலும் உண்மை.

அவள் தந்தை லாலா பிஷம்பர் தயாள் பிரசித்தி பெற்ற புத்தக வியாபாரி. சௌக்கியமாகச் சகல வசதிகளுடனும் வாழ்வதில் நம்பிக்கை கொண்டவர். டில்லியின் ஆடம்பரப் பகுதியான கால்ஃப் லிங்க்ஸில் அவருக்குக் 'குல்மார்க்' என்ற பெயரில் சொந்த வீடு இருந்தது. இதில் ஒரு பகுதி கன்வலுக்கென்றே ஒதுக்கப்பட்டிருந்தது. இதைத் தவிர அழகிய தோட்டம், விசாலமான விளையாடும் இடம் ஆகியவையும் இருந்தன. காலை முதல் இரவு வரை விளையாடுவது, படிப்பது, நண்பர்களுடன் பொழுதுபோக்காக வெளியே செல்வது என்று அவளுக்குச் சதா ஏதாவது காரியம் இருந்துகொண்டே யிருந்தது. அவளது செயல்கள் ஒவ்வொன்றையும் பார்த்து அவளது பெற்றோர் பாசத்துடன் வியந்தனர்.


பத்தொன்பது வயதான கன்வலுக்கு ரோஜா நிறத்தில் நீள்வட்ட முகம். உணர்ச்சிகளை நன்கு வெளியிடும் ஆழமான கண்கள். எடுப்பாக அமைந்த அழுத்தமான உதடுகள். குதிரை வால்போல் கேசத்தைக் கட்டிக்கொள்வது அவளுக்குப் பிடிக்கும். கவலையற்ற சந்தோஷமான வாழ்க்கை. வாய் எப்போதும் சூயிங்-கம்மை மென்று கொண்டிருக்கும். ஒரு ''டில்லிப் பெண்'' எப்படி இருக்கவேண்டுமோ அப்படி இருந்தாள் அவள்!

அவளது கவிதைகள் அடிக்கடி கல்லூரி மலரில் வெளியாகும். இளம் உள்ளங்களின் ஏக்கங்களைப் பளிச்சென்று வெளியிடும் கவிதைகள். அந்த ஏக்கங்கள் காதலுக்காகவும் இன்னும் மேம்பட்ட வாழ்க்கைக்காகவுமே. கனவுகளின் அழகில் அவள் தன் ஆசைகளின் நிறைவைத் தேடினாள்.

பட்டி மன்றத்தின்போது பேராசிரியர் ஹரிராம் குப்தாவின் கண்களும் காதுகளும் மேடையில் நிலைக்குத்தி யிருந்தன. கன்வல்ஜித் உதிர்த்த ஒவ்வொரு வார்த்தையும் அவரிடத்தில் பரபரப்பைத் தோற்றுவித்தது. அவளது ஒவ்வொரு பாவனையின் மீதும்—அங்க அசைவின் மீதும் — பிரேமை கொண்டார் அவர்.

அந்தக் கல்லூரியில் அவர் சரித்திரப் பேராசிரியர். அவரது பல புத்தகங்கள் எத்தனையோ பல்கலைக் கழகங்களில் பாடப் புத்தகங்களாக வைக்கப்பட்டுள்ளன. இது தவிர அவருக்குக் கவிதை உணர்வும் இருந்தது. நிறைய ஆராய்ச்சிகள் புரிந்திருந்தார். இந்திய சரித்திரப் பேரவை கூடியபோது ஏராளமான பாராட்டுக்களைச் சம்பாதித்துக் கொண்டிருந்தார். சென்ற ஆண்டு டாக்டர் பட்டம் பெற அவர் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரையானது அமெரிக்காவில் பிரசுரமாகவிருந்தது. இதே துறையில் ஈடுபட்டிருந்த அவரது சகாக்கள் தங்கள் திறமை உணர்ந்து மதிக்கப்பட வேண்டும் என்பதற்காக இன்னமும் போராடிக் கொண்டிருந்தார்கள். அவர்களைப் போலன்றி இவர் வெகு இளம் வயதிலேயே — முப்பத்திநாலு — ரொம்பப் பிரபலமாகிவிட்டிருந்தார்.

ஆனால் இந்த வெள்ளித்திரைக்குப் பின்னால் எல்லாமே பிரகாசமாக இருக்கவில்லை. மத்தியதரக் குடும்பம் ஒன்றில் பிறந்த அவர் வாழ்க்கையில் ரொம்பவும் சிரமப்பட வேண்டியிருந்தது. இது அவரது உள்ளத்தில் அழுத்தமான வடுக்களை ஏற்படுத்தி யிருந்தது. அவரது தேக ஆரோக்கியமும் இதனால் பாதிக்கப்பட்டிருந்தது. இரண்டு பெண்களுடன் அவர் மேலோட்டமாகப் பழகி யிருந்தார். ஆழமில்லாத இந்த நட்புறவு அதிக நாட்கள் நீடிக்கவில்லை. அவர் இன்னும் பிரமச்சாரியாகவே இருந்தார். ஆனால் இப்படித் தனிமனிதனாக வாழ்க்கை நடத்துவது அவருக்குப் போதும் போதுமென்றாகி விட்டது. கல்யாணம் செய்து கொண்டு ஓரிடத்தில் நிலைத்திருக்க விரும்பினார் அவர்.



நல்லாளும் தமக்கு ஏற்றவளுமான ஒரு மணப் பெண் கிடைப்பாளா என்று பார்த்துக் கொண்டிருந்தார். அவர் தொடர்பு கொள்ள நேர்ந்த பெண்கள் அனைவரிலும் கன்வல் ஒருத்தியிடம் தான் அவர் தீவிரமாகக் கவர்ந்திழுக்கப்பட்டார். அவளுடன் மேம் போக்கான முறையில் சல்லாபமாகப் பேச

அவர் விரும்பவில்லை. ஏனெனில் அவள்தான் நமக்குச் சரியான துணைவியாக அமைய முடியும் என்று சத்தியமாக நம்பினர். ஆகவே அவளருகே இருக்க ஒரு சின்னச் சந்தர்ப்பம் கிடைத்தாலும் விடக் கூடாது என்று அவர் நோட்டம் பார்த்துக் கொண்டிருந்தார். அவளை மென்மையான ஒரு மலராகவும் தம்மை அதன் பாதுகாவலராகவும் கருதினர். அவளுக்குக் கவனிப்பும் காப்பும் தேவைதான். வாழ்க்கையில் அவள் அடி படாமல் கேடயம்போல் தாம் விளங்க விரும்பினர்.

ஒரு நாள். அப்போதுதான் மழை பெய்து ஓய்ந்திருந்தது. கன்வல், கல்லூரியின் முன்னுல் புல்வெளியில் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தாள். ஒரு கவிதையாகத் தான் தொகுக்க விரும்பிய சில அடிகளை அவள் வாய் முணுமுணுத்துக் கொண்டிருந்தது. இம்மாதிரியான கொந்தளிப்பான மனநிலையில் அவள் இருப்பதைப் பார்த்த டாக்டர் குப்தா அவளை நோக்கி நடந்து அருகில் நின்ருர். அவரை அவள் கவனிக்கவில்லை. ஏதோ ஞாபகமாக அவள் அவர் இருந்த பக்கமாக நடந்தபோது கிட்டத்தட்ட அவர்மீது மோதிக்கொள்ளும் அளவுக்கு வந்து விட்டாள். கன்வலின் தோள் அவர்மீது இலேசாகப் பட்டதுமே அவரது மனத்திலும் உடலிலும் சிலிர்ப்பு அலைகள் பாய்ந்தன.

அவர் சொன்னர்: ''கன்வல்! உன் எண்ணங்களுக்குச் சரியான சொல் வடிவத்தைத் தேடிக் கொண்டிருக்கிருயா? இன்றைய சிந்தோஷ்ண நிலை உண்மையில் மன எழுச்சிக்குத் துணை புரிவதாகத்தான் இருக்கிறது. உன்னைப் போன்ற சாமர்த்தியம் மிக்கவர்களுக்கு அதனுல் ஏற்படும் பயன் இன்னும் அதிகமாகவே இருக்கும்.''

இந்தப் பாராட்டு மொழிகள் அவளுக்குச் சந்தோஷத்தை அளித்தன. அவள் சொன்னள்: ''இல்லை ஸார்! விநாடி நேரம்தோன்றிச் சட்டென்று மறைந்து விடுகிற சில எண்ணங்களைப்



பாதுகாவலர்கள்

குருமுக் சிங் ஜீத்

பிடித்து வைத்துக் கொள்ளப் பார்க்கிறேன், அவ்வளவுதான்.''

அவர் மேலும் தொடர்ந்தார்: ''நீ மிக நன்றாக எழுதுகிறாய். கடைசியாக நீ எழுதிய கவிதை — கல்லூரி மலரில் வெளிவந்ததே அது — அதைப் போன்ற கவிதையை எழுதிய எந்தக் கவியும் பெருமைப்பட்டுக்கொள்ளலாம்.''

''ரொம்ப நன்றி ஸார்!'' என்றாள் கன்வல், அவர் அதிகமாகப் புகழ்ந்ததால் சங்கடப்பட்டுக் கொண்டே. ''நீங்களும்தான் எவ்வளவோ திறமைசாலி. உங்கள் அளவுக்கு உயர யாரால் முடியும்?''

இதற்குள் அவர்கள் அந்தப் புல்வெளியின் மறுமுனைக்குச் சென்றுவிட்டிருந்தார்கள். தன்னந் தனியாக அவ்விருவரும் நின்றார்கள். டாக்டர் குப்தா ஒரு 'பெஞ்ச்'சில் கன்வலை உட்காருமாறு கேட்டுக் கொண்டார். அவர் தேடிக் கொண்டிருந்த சந்தர்ப்பம் இதோ கிடைத்து விட்டது. அதை விடாமல் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார்.

''கன்வல் ஜீத்! கவிதையே ஓர் உருவாகி வந்தது போல் நீ விளங்குகிறாய்! உண்மையைச் சொல்ல வேணுமானால் என்னுடைய ஆராய்ச்சிகளுக்கெல்லாம் ஜீவன் அளித்தது நீதான். நீ இந்தக் கல்லூரியில் முதல் ஆண்டில் எப்போது சேர்ந்தாயோ, அப்போது முதலே நான் உன்னிடமிருந்துதான் மன ஊக்கத்தைப் பெற்று வந்திருக்கிறேன். இப்போது என்னை அமெரிக்காவுக்கு விஜயம் செய்யுமாறு அழைத்திருக்கிறார்கள். மிசிகன் பல்கலைக் கழகத்தில் சிறிது காலம் பேராசிரியராகப் பணியாற்றப் போகிறேன். என் துணைவியாக நீ அங்கே இருக்கக் கூடுமானால்... நான் எவ்வளவு அதிர்ஷ்டசாலி என்பதைச் சொல்லி முடியாது!''

கன்வல் இத்தகைய வார்த்தைகளை எதிர்பார்க்கவேயில்லை. அவற்றைக் கேட்டதும் அவளது காவிய எண்ணங்கள் காற்றிலே கரைந்து போயின. அதிகமாகப் பேசுவதைத் தவிர்த்து அவள் சொன்னாள்: ''என்னை மன்னித்துவிடுங்கள், ஸார்! நான் போக வேண்டும்; வகுப்புக்கு நேரமாகி விட்டது.''

டாக்டர் குப்தாவுக்குத் தம்மை அவள் அலட்சியப்படுத்திப் பேசியதாகத் தோன்றியது. அவர் முகத்தைத் தூக்கிக் கொண்டு அங்கேயே உட்கார்ந்து விட்டார்.

இப்போது பட்டிமன்ற நிகழ்ச்சியில் கன்வல் முதற்பரிசைப் பெற்றதற்காக டாக்டர் குப்தா அவளை வாழ்த்தியபோதும் அவள் அவரைப் பராமுகமாகப் போய்விட்டாள். அவளை வேறு எத்தனையோ அபிமானிகள் சுற்றிச் சூழ்ந்திருந்தனர். அவள் காரில் ஏறிச் செல்லும்வரை அவர் கண்கள் அவளையே தொடர்ந்தன. அவள் போவதைப் பார்த்ததும் முன்பொரு தடவை அவள் தம்மை அவமதித்தது அவர் நினைவுக்கு வந்தது. குதிகால்களைப் பூமியில் பலமாக அழுத்தி, பற்களைக் கடித்துக் கொண்டு கோபத்தில் முகத்தைச் சுளுக்கிக் கொண்டார்.

கன்வலின் தகப்பனுடன் அவர் சிநேகம் செய்து கொண்டார். எப்போதாவது அவர் கடைக்குப் போய் வயதான அந்த மனிதரிடம் பேசுவார். லாலா பிஷம்பர் தயாளுக்குச் சரித்திரம், கவிதை இரண்டும் பிடிக்கும். டாக்டர் குப்தா தமது கவிதைகளில் சிலவற்றை அவருக்கு அடிக்கடி படித்துக் காட்டினார். ஒரு நாள் பிஷம்பர் தயாள், டாக்டர் குப்தாவைப் போன்ற ஒரு கணவரை அடைய ஒரு பெண் கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்று பேச்சுவாக்கில் சொன்னார். டாக்டர் குப்தா தாம் ஒரு பிரம்மச்சாரி என்று அறிவித்தபோது லாலா பிஷம்பர் தயாள் மனநிம்மதி அடைந்தார். அவர் கேட்க விரும்பியதும் இதையேதான். 'நீங்கள் ஏன் கல்யாணம் செய்து கொள்ளவில்லை?' என்று லாலா வினவினார். இதற்குப் பதிலாக டாக்டர் குப்தா, 'வாழ்க்கையில் செய்ய வேண்டிய காரியங்கள் எத்தனையோ இருக்கின்றன. கல்யாணம் காத்திருக்கலாம்' என்று சொல்வதாக அமைந்த ஒரு கவிதையை மொழிந்தார்.

பி. ஏ. பரீட்சை முடிவுகள் வெளிவந்து விட்டன. கன்வல்ஜித் பல்கலைக் கழகத்திலே மூன்றாவது இடத்தைப் பெற்றிருந்தாள். ஒரு நாள் தந்தை மகளை அழைத்துக் கேட்டார்:

''குழந்தாய்! கல்லூரிப் படிப்பெல்லாம் உன்வரையில் முடிந்து விட்டதல்லவா?''

''ஆமாம்'' என்றாள் அவள் கையிலிருந்த சஞ்சிகையைப் புரட்டிக் கொண்டே.

''நீ கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்பது என் கருத்து. உன் பேராசிரியர் டாக்டர் ஹரிராம் குப்தாவைத்தான் உனக்குத் தெரியுமே. அவர் உனக்கு ஏற்றவர். அவருடன் அன்யோன்யமாகப் பழகியிருக்கிறேன். சிரமப்பட்டு உழைப்பவர்; சத்திய சந்தர்.''

''........''

''ஆனால் நீ உன் சம்மதத்தையும் தெரிவிக்க வேண்டும். அவரை எனக்குப் பிடித்திருந்த போதிலும் உன்னைக் கலந்து ஆலோசியாமல் நான் எதுவும் செய்ய விரும்பவில்லை.''

கன்வல்ஜித்தின் முகம் வெளிறியது. அவள் உலர்ந்துபோன உதடுகளை நாவினால் தடவிக் கொண்டாள்.

''இப்போது என்ன அவசரம் அப்பா? கொஞ்ச காலம் போகட்டுமே!''

அவள் தகப்பனார் அவளை வற்புறுத்த முயன்றபோது அவள் அழ ஆரம்பித்துவிட்டாள். ''என்னை ஒரு புத்தகக் கட்டுக்குக் கல்யாணம் செய்து கொடுத்துவிட நீங்கள் நிச்சயம் ஆசைப்பட மாட்டீர்கள் என்று நினைக்கிறேன்!'' இப்படிச் சொன்ன அவள் அந்த அறையைவிட்டு விருட்டென்று எழுந்து போய் விட்டாள்.

அடுத்த தடவை லாலா பிஷம்பர் தயாள் டாக்டர் குப்தாவைச் சந்தித்தபோது ரொம்பவும் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். ஏனெனில் அவர்களுடைய நட்பு ஆரம்பமானபோதிலிருந்தே டாக்டர் குப்தா கல்யாணம் செய்து கொள்வதில் சிரத்தை காட்டவில்லை; லாலா பிஷம்பர் தயாள்தான் அவரைச் சிரமப்பட்டு வழிக்குக் கொணர்ந்திருந்தார்.

டாக்டர் குப்தா புத்தகக் கடையை விட்டு வெளியே வந்ததும் இப்போது, இரண்டாவது தடவையாக, பூமியைத் தோண்டுவதுபோல் குதிகாலை அழுத்தமாகப் பதித்தார்; பற்களைக்



அரசியல் சாஸ்திரத்தில் எம். ஏ. பட்டம் பெற்ற குருமுக் சிங் ஸீத் மேற்குப் பஞ்சாபைச் சேர்ந்த மிதாரஞ்சா என்னும் கிராமத்தில் 2-11-1922ல் பிறந்தவர். பஞ்சாபி சாஹித்ய அகடெமி நிர்வாகக் குழு அங்கத்தினராகப் பல ஆண்டுகள் பணியாற்றியுள்ள இவர், நாவல், சிறுகதை, விமர்சனம், கட்டுரை, மொழிபெயர்ப்பு முதலிய பல துறைகளிலும் சிறப்பாகப் பணியாற்றி யுள்ளார். பஞ்சாபி, ஹிந்தி இரு மொழிகளிலும் எழுதி வருகிறார்.

கடித்துக் கொண்டார்; மனக் கசப்புடன் எச்சிலைக் கூட்டித் துப்பினார்.

* * *

''அப்படியா! இதுதான் உன்னுடைய கன்வல்ஜித்தின் கதையா?'' என்று டாக்டர் லாம்பா கேட்டார். கையிலிருந்த மதுவை உறிஞ்சி விட்டுத் தொடர்ந்தார்; ''எனக்குக்கூட ஒரு கன்வல்ஜித்தைத் தெரியும். அவளுடைய கதையை — அவளுடைய வாய் மொழியாகவே. அதாவது அவளுடைய டயரியிலிருந்து தெரிந்து கொண்டதைச் சொல்கிறேன்.''

* * *

என் தகப்பனார் என் எண்ணங்களுக்கு மதிப்பு அளித்தார். டாக்டர் குப்தாவைப் பற்றி அவர் மறுபடியும் என்னிடம் பேசவேயில்லை. இதற்கிடையில் நான் எம். ஏ. படித்துத் தேறினேன். தொடர்ந்து கவிதைகள் எழுதிப் பலரும் என்னைப் பற்றிப் பேசும்படியான ஒரு சூழலை ஏற்படுத்திக் கொண்டேன். என் ரசிகர்கள் — தெரிந்தவர்களும் தெரியாதவர்களும் — அதிகமாகிக் கொண்டே வந்தனர். அவர்களில் சிலர் என்னைத் திருமணம் செய்து கொள்ள விரும்புவதாகச் சுற்றி வளைத்துத் தெரியப்படுத்தினர். நான் சஞ்சல புத்தியுடன் எதையும் தீர்மானிக்க முடியாத நிலையில் இருந்தேன். என்னைப் பற்றியே எனக்கு உறுதியாக ஏதும் தெரியவில்லை. என் எதிர் காலத்தைப் பற்றித் தெளிவாகச் சிந்திக்க முடியவில்லை.

இம்மாதிரியான ஊசலாடும் மன நிலையில் இரண்டு வருஷங்கள் சென்று விட்டன. என் அப்பாவுக்குக் கவலையாகப் போய்விட்டது. கடைசியில் என்னை ஒரு டாக்டருக்குக் கல்யாணம் செய்து கொடுத்து விட்டார். அவர் என் அப்பாவிடம் தாம் கவிதைகளில் ஈடுபாடு கொண்டவர்போலவும் அக்கறை கொண்டுள்ளவர் போலவும் காட்டிக் கொண்டார்.

என் கணவர் ஜலந்தரில் சொந்தத்தில் ஒரு வைத்திய விடுதியை நடத்தி வருகிறார். உயரமாகவும், அழகாகவும் சாந்த சுபாவம் உள்ளவராயும் இருக்கிறார். தம்மிடம் வரும் நோயாளிகளிடம் ரொம்பவும் மென்மையாக நடந்து கொள்கிறார். அவருக்கு ஒரு தடவை அறிமுகமாகி விட்டவர்கள் பிறகு அவரைக் கிட்டத்தட்ட வழிபடும் நிலைக்கே வந்து விடுகிறார்கள். பண வருவாயை எடுத்துக் கொண்டாலும் அவருக்குக் குறையில்லை; சௌகரியமாகவே யிருக்கிறார்.

ஆனால் என் இல்லறம் எப்படி இருக்கிறது என்பதை வர்ணிப்பது வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டது. என் நாவில் ஏதோ கசப்பு உணர்ச்சிதான் இருக்கிறது. மற்ற எல்லா உணர்வுகளும் மடிந்து விட்டன போல் தோன்றுகிறது.

என் கணவர் கவிதைகளில் நாட்டம் கொண்டவர் என்று என் அப்பா என்னிடம் சொல்லி யிருந்தார். ஆரம்பத்தில் நானும் அப்படித்தான் நினைத்தேன். ஆனால் அவர் என் கவிதைகளைக் கேட்பதை ஒரு தொணதொணப்பாகக் கருதினார். அவர் எப்போதாவது எழுதுவதில் நாட்டம் உள்ளவராக இருந்திருக்கலாம். ஆனால் இப்போது அதை அடியோடு மறந்து விட்டார் என்பது நிச்சயம். நான் எழுதினாலும் அவர் சண்டைக்கு வருகிறார். கடந்த காலத்தில் நான் எழுதினேன் என்ற நினைப்பு; கல்லூரியின் பல இலக்கிய நடவடிக்கைகளில் பங்கு பற்றிப் பரிசுகள் பெற்றேன் என்ற எண்ணம் — எல்லாமே அவரால் தாங்க முடியாததாக இருக்கிறது. நான் எப்போதாவது ஒரு விஷயம் பற்றி ஏதேனும் தர்க்கம் செய்ய முற்பட்டால் கல்லூரி நாட்களில் பட்டிமன்றங்களில் நான் கலந்து கொண்டதன் விளைவுதான் அது என்று சொல்லி என் கல்வியையே பழிக்கிறார். என் கவிதைகளை அவர் வெறுக்கிறார்; பாராட்டுமுகமாக ஒரு வார்த்தை கூடச் சொல்வதில்லை.

அவர் எப்போதாவது கவிஞராக இருந்திருப்பாரா என்பதே எனக்குச் சந்தேகமாயிருக்கிறது. ஏனெனில், கவிஞருக்குரிய நுண்ணிய உணர்வுகள் அவருக்கு இருக்குமானால் நான் படும் துயரத்தால் பாதிக்கப்படாத மரக்கட்டையாக அவர் இருக்கமாட்டார். அவருக்கு எப்படி இலக்கியத்தில் நாட்டம் இருக்க முடியும்? வீட்டை விட்டு அதிகாலையில் கிளம்பினால் மத்தியானம் சாப்பாட்டுக்கு வருகிறார்; மறுபடியும் மருத்துவ விடுதிக்குச் சென்றால் இரவு வெகுநேரம் கழித்துத்தான் திரும்புகிறார். இலக்கியம் என்ற மென்மையான விஷயத்துக்கு அவருக்கு நேரமில்லை. புத்தகங்கள், — அவை நோயாளிகளைப் போன்றவையா என்ன!

என்னுடைய நண்பர்கள் என்னைப் பார்க்க வருவது அவருக்குப் பிடிக்கவில்லை. என்னைச் சந்தேகிக்கிறார். அதனால் நானும் யாரையும் போய்ப் பார்த்துவர முடியாது. அவரது அனுமதியின்றி நான் எங்கேயாவது போய் வந்து, அது அவருக்குத் தெரிந்து விட்டால் வீடு நரகமாகி விடுகிறது. இப்போது என்னை 'நல்லவ'ளாக்கிச் சரியான பாதையில் என்னைத் திருப்பி விடும் கடமையை அவர் தாமாகவே ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

என்னுடைய புத்தகங்களையெல்லாம் பூட்டி வைத்திருக்கிறார். நான் சிரமிந்து

புலி பிறந்தது !

புலிக்கு ஆங்கிலத்தில் டைகர் என்று பெயர். அது ஆங்கிலச் சொல் அல்ல. பாரசீகச் சொல். டைகர் என்பது அம்பின் பெயர். அம்பு, நாணேற்றி விடுங்கால் வேகமாகச் செல்கிறது. புலி அதே மாதிரி வேகமாகப் பாய்வதால் அதற்கு அப்பெயர் இடப்பட்டதாம். நகலவி: பி. வி. கிரி

ஆதாரம்: ''புக் ஆப் ஜெனரல் நாலெட்ஜ்''

போனதற்கு அவைதாம் காரணம் என்கிறார். நான் என் அப்பாவைப் போய்ப் பார்க்க அனுமதிக்கப்படுவதில்லை. ஏனெனில், நான் அங்கு என் நண்பர்களைச் சந்திக்கத்தான் போகிறேன் என்று நினைக்கிறார். நான் தனியாக எங்கேயும் போக முடியாது. அவர் வீட்டில் இல்லாத சமயம் என்னை யாரும் வந்து பார்க்கவும் கூடாது. பழக்கப்பட்ட முகம் எதையும் பாராமலே நாட்கள் செல்கின்றன; சில சமயங்களில் நான் எதிர்பாராத தருணத்தில் அவர் வீட்டுக்கு வருகிறார் ; — வேண்டாத நண்பர் யாரையேனும் நான் வரவேற்று உபசரித்துக் கொண்டிருக்கிறேனா என்று நோட்டம் பார்ப்பதற்காகவே அப்படி வருகிறார் !

அவரைக் கல்யாணம் செய்து கொண்டு ஐந்து ஆண்டுகள் ஆகிவிட்டன. இரண்டு குழந்தைகள் பிறந்து விட்டன. ஆயினும் இன்னமும் நான் அவரது நம்பிக்கைக்கு உகந்தவளாக விசுவாசத்துடன் நடந்து கொள்வேனா என்பது பற்றி அவருக்குச் சந்தேகம்!

எனக்குப் பாக்கி யிருந்த ஒரே உரிமை டெலிபோன்தான். தனிமை ஏக்கம் என்னைப் பீடிக்கும்போதெல்லாம் நான் நண்பர்களுடன் பேசவாவது முடியும். ஒரு நாள் நண்பர் ஒருவர் ஃபோன் செய்த போது அவர் வீட்டில் இருந்தார். டெலிபோனை அவர் எடுத்தார். என் பெயரைக் கேட்டதும் ஃபோனை அறைவது போல் வைத்தார். அதன் பிறகு டெலிபோனைப் பூட்டி வைக்கத் தொடங்கினார்.

ஒரு நாள் நான் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு எழுத்தாளர்கள் கூட்டம் ஒன்றுக்குப் போனேன். நிரந்தரமான ஒரு பயத்துக்குக் கீழ் வாழ்வது எனக்கு அலுத்துவிட்டது. இந்த என் நடவடிக்கையின் விளைவு என்னவாக இருக்கும் என்பதை முற்றிலும் உணர்ந்துதான் இருந்தேன். என்றாலும் பலனை — அது நரக வேதனையாயினும்—அநுபவிக்கத் தயாராக இருந்தேன்.

கூட்டத்தில் ஒரு பழைய நண்பரைச் சந்தித்தேன். மகிழ்ச்சி நிறைந்த கடந்த காலத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்தோம். அவர் என் கவிதைகளைப் புகழ்ந்தார். கடைசியாக நான் எழுதிய கவிதையைப் பற்றிக் கேட்டார்.

நான் பலவீனமான ஒரு புன்னகையை உதிர்த்தேன். என் கையாலாகாத்தனத்தைக் குறிப்பது போல் தோள்களைக் குலுக்கினேன். அவர் என்னை நம்பவேயில்லை என்று தோன்றியது. ஆகவே, நான் சொன்னேன்: ''நான் கடைசியாக எழுதிய கவிதை பற்றிக் கேட்கிறீர்கள். நான் எப்போதாவது கவிதை எழுதினேனா என்பதே எனக்குச் சந்தேகமாயிருக்கிறது.''

நான் மனக் கசப்புடன் பேசுவதை அவர் கவனித்தார். இருந்தாலும் என்னைக் குஷிப்படுத்த விரும்பிக் கூறினார் : ''உங்கள் திறமையை உங்கள் கணவர் போற்றுகிறார் இல்லையா ? உங்களுக்கு அவர் ஊக்கமளிப்பார் என்பதும் நிச்சயம்.''

''ஹூம்.... அவர் ஒரு டாக்டர். டாக்டர்களுக்கு எலும்புகள் மீதுதான் நாட்டம் ; கவிதைகள் மீதல்ல'' என்று நான் செயற்கையாகச் சிரித்துக் கொண்டே சொன்னேன்.

அவர் என் ஏமாற்றத்தைக் கண்டு கொண்டார். பேசாதிருந்து விட்டார்.

என் கணவர் என்னிடம் ரொம்பப் பரிவு காட்டுவதாகத்தான் நினைக்கிறார். என்னை ஒரு மலர் போல் நடத்துகிறார். மலர்கள் மென்மையானவை என்பதோடு கவர்ச்சி மிக்கவை என்று நம்புகிறார். அவற்றை ஜாக்கிரதையாகப் பாதுகாக்கா விட்டால் வழிப்போக்கர்கள் அவற்றைக் கொய்து விடுவார்கள்; அல்லது அவற்றை மிதித்துக் கொண்டு போவார்கள். ஒருவேளை வழிபோடு போகிறவர்கள் பார்வையில் இவை படாவிட்டாலும் மலர்கள் தாங்கள் கவனிக்கப்படுவதை விரும்பி வரவேற்கின்றன....

* * *

அன்று காலை கேலார்ட் ஹோட்டலில் டாக்டர் லாம்பா யதேச்சையாக டாக்டர் ஹரிராம் குப்தாவைச் சந்தித்தார். சில தினங்களுக்கு முன்னர்தான் அவர் அமெரிக்காவிலிருந்து திரும்பியிருந்தார். இருவரும் தங்கள் தங்கள் வாழ்க்கை குறிப்புக்களைப் பரிமாறிக் கொண்டார்கள். டாக்டர் குப்தா காதலில் தமக்கு வெகுசீக்கிரமே ஏமாற்றம் ஏற்பட்டு விட்டதைச் சொன்னார். டாக்டர் லாம்பா தமது மனைவி நடத்தைகெட்டவளாகிவிடக் கூடாதே என்பதற்காகத் தாம் படும் சிரமத்தை எடுத்துக் கூறினார். இருவரும் ஒரே கன்வலேப் பற்றித்தான் பேசிக் கொண்டிருக்கிறோம் என்று உணர்ந்தனர்.

டாக்டர் குப்தா மேஜையின் மீது ஒரு குத்துவிட்டு விட்டுக் கூவினார்: ''ஜமாய்த்து விட்டாயே, லாம்பா! போராட்டத்தில் நீ ஜெயித்து விட்டாய். கன்வல்ஜித்தை நீ கல்யாணம் செய்து கொண்டாய் என்பது எனக்குத் தெரியாது. சொல்லப் போனால் அவள் அப்போதே ஒரு மாதிரியானவள் தான். அவளை நீ ஜாக்கிரதையாகக் கவனித்துக்கொள்கிறாய் என்பதில் எனக்கு ரொம்பத் திருப்தி.'' அவர் தம் மனத்தில் அடக்கி வைத்திருந்த பழி வாங்கும் உணர்ச்சியை வெளியே கொட்டிக் கொண்டிருந்தாரோ?

''அது சமூகத்துக்கு நான் ஆற்ற வேண்டிய கடமையாயிற்றே'' என்றார் டாக்டர் லாம்பா பதில் கூறும் முகமாக. ஒவ்வொரு தடவையும் அவர்கள் கன்வலின் பெயரைச் சொல்லும்போது அது ஏதோ கசப்பான பொருள் போல முகத்தைச் சுளித்தனர். டாக்டர் குப்தா இன்னொரு பாட்டில் பீர் கொண்டு வருமாறு உத்தரவிட்டார்.

ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம்: **குமரன்**



பதினெட்டாம் அத்தியாயம்

அம்பு பாய்ந்தது

ஓடைக் கரையில் ஒரு மரத்தின் பின்னால் பாதி மறைந்தும் மறையாமலும் நின்ற ஊமை ராணியைப் பூங்குழலி பார்த்தாள். எதிர்பாராத சமயத்தில் எதிர்பாராத இடத்தில் அவளைக் கண்டதினால் பூங்குழலிக்குச் சிறிது திகைப்பு உண்டாயிற்று. அயல் மனிதர்களைப் பார்ப்பதில் ஊமை ராணிக்குப் பிரியம் இல்லை என்பது அவளுக்குத் தெரிந்திருந்தது. படகில் சேந்தன் அமுதன் இருக்கிறானே, அவனைக் கண்டு ஒருவேளை அத்தை ஓடி விடுவாளோ? — என்ற எண்ணம் அவள் மனத்தில் தோன்றிய அந்தக் கணமே அவளுடைய அத்தை ஓடத் தொடங்கி விட்டாள். பூங்குழலி சட்டென்று ஓடத்திலிருந்து ஓடைக் கரையில் குதித்து மேட்டில் ஏறிப் பார்த்தாள். அத்தை சற்றுத் தூரத்தில் அடர்ந்த காட்டுக்குள் மறைந்ததைக் கவனித்தாள்.

இதற்குள் சேந்தன் அமுதனும் கரையில் குதித்து மேட்டில் ஏறிப் பூங்குழலி நின்ற இடத்துக்கு வந்து சேர்ந்தான்.

''பூங்குழலி! பூங்குழலி! சற்று முன்னால் இங்கே நின்றது யார்?'' என்று கேட்டான்.

''உனக்குத் தெரியவில்லையா, அமுதா?''

''நிச்சயமாய்ச் சொல்லத் தெரியவில்லை; ஒரு வேளை....''

''ஆமாம்; என் அத்தைதான்! நீ செத்துப் போனதாக நினைத்துக் கொண்டிருந்த உன் பெரியம்மாதான்!''

''ஆமாம்; அம்மாவின் ஜாடை கொஞ்சம் இருந்ததுபோல் தோன்றியது.''

''வெறுமனே ஏதாவது சொல்லாதே! சின்ன அத்தைக்கும் பெரிய அத்தைக்கும் உருவ ஒற்றுமை ஒன்றுமில்லை. குணத்தில் ஒற்றுமையும் இல்லை. வீட்டில் கட்டிப் போட்டிருக்கும் பசு எங்கே? காட்டில் எதேச்சையாகத் திரியும் சிங்க ராணி எங்கே?''

''சரி; அப்படியே இருக்கட்டும். ஏன் உன்னைப் பார்த்ததும் சிங்கராணி ஓடிப் போய் விட்டாள்?''

பூங்குழலி சிரித்துவிட்டு, ''என்னைக் கண்டு ஓடவில்லை; உன்னைப் பார்த்து விட்டுத்தான் ஓடினாள். அயல் மனிதர்களைப் பார்ப்பதற்கு அவளுக்குப் பிரியமிருப்பதில்லை'' என்றாள்.

''நான் அயல் மனிதன் அல்லவே?''

''அத்தைக்கு அது தெரியாதல்லவா? தெரிந்துகொண்டால் உன்னைப் பார்த்து விட்டு ஓடமாட்டாள். ஆனால் தெரிந்து கொள்வதற்கு முன்னால் ரொம்பவும் தயங்குவாள்.''

''பூங்குழலி! இப்போது என்ன செய்யப் போகிறாய்?''

''அத்தையைத் தேடிப் பிடிக்கப் போகிறேன்.''

''நானும் வரட்டுமா ?''

''எதற்காக ?''

''பெரியம்மாவை நேரில் பார்த்துத் தெரிந்து கொள்வதற்காகத் தான்.''



''எதற்காகப் பெரியம்மாவை நீ தெரிந்து கொள்ள வேண்டும் ?''

சேந்தன் அமுதன் தன் பெரியம்மாவின் பழைய வரலாற்றைச் சிறிது பூங்குழலியிடம் அறிந்து கொண்டிருந்தபடியால் அவளைப் பார்க்க ஆவலாயிருந்தான். அத்துடன் பெரியம்மா தன் கட்சியிலிருந்து பூங்குழலியின் மனத்தை மாற்றுவதற்கு உதவி செய்யக்கூடும் என்ற ஆசையும் அவனுக்கு இருந்தது.

''எத்தனையோ காரணங்கள் இருக்கின்றன. ஆனால் பெரியம்மாவைத் தெரிந்து கொள்ள விரும்புவதற்குக் காரணம் வேண்டுமா, என்ன?'' என்றான்.

பூங்குழலி சற்று யோசித்து விட்டு, ''சரி, வா! போகலாம். உன்னையும் அழைத்துச் சென்றால் பெரியம்மாவைப் பிடிப்பது சற்றுப் பிரயாசையாக இருக்கும். ஆனாலும் யார் விடுகிறார்கள்? படகை இங்கேயே கட்டிப் போட்டு விட்டுப் போகலாம் !'' என்றாள்.

அவ்விதமே படகை ஒரு தாழம்பூப் புதரின் அடியில் மறைவாக விட்டுக் கட்டியும் போட்டுவிட்டு இருவரும் கோடிக்கரைக் காட்டை நோக்கிச் சென்றார்கள்.

நடந்துகொண்டே சேந்தன் அமுதன், ''பூங்குழலி! பெரியம்மா இலங்கைத் தீவிலும் பூதத் தீவிலும் இருக்கிறாள் என்று சொன்னாயல்லவா?'' என்றான்.

''ஆமாம்; சில சமயம் இலங்கைத் தீவிலும் சில சமயம் பூதத் தீவிலும் இருப்பாள்.''

''இங்கே அடிக்கடி வருவதுண்டா ?''

''இல்லை; அபூர்வமாகத்தான் வருவாள். நான் வெகு நாள் அவளைப் போய்ப் பார்க்காமல் இருந்தால் வருவாள்.''

''இப்போது உன்னைப் பார்க்கத்தான் வந்திருக்கிறாளா ?''

''இந்தத் தடவை வேறு காரியமாக வந்திருக்கிறாள் என்று தோன்றுகிறது.''

''வேறு என்ன காரியம் ?''

''அவளுடைய சுவீகாரப் புதல்வன் கடலில் முழுகிப்போய்விட்டானா, தப்பிப் பிழைத்துக் கரை சேர்ந்தானா என்று தெரிந்து கொள்வதற்கு வந்திருக்கலாம். இளவரசர் கப்பலேறிப் புறப்பட்ட பிறகு கடலில் சுழிக் காற்று அடித்தது அத்தைக்குத் தெரியும் அல்லவா ?''

''அருள்வர்மர் இவளுடைய சுவீகாரப் புதல்வரா ? அப்படியானால் பெரியம்மாவின் சொந்த மகன் யார் ?''

''அதுதான் எனக்குத் தெரியவில்லை. ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் அந்த இரகசியத்தை நான் கண்டுபிடித்துத் தெரிந்துகொள்ளப் போகிறேன்.''

''சொந்த மகன் உயிரோடிருக்கிறானா, அல்லது இறந்து போய்விட்டானா ?''

''ஆம்; அவன் இறந்து போயிருக்கவும் கூடும். யாருக்குத் தெரியும் ?'' என்று சொன்னாள் பூங்குழலி.

சற்றுப் பொறுத்து, ''அமுதா ! அத்தையைப் பார்த்தாயே? உன்

அன்னையின் முகஜாடையா யிருப்பதாகச் சொன்னாய்; வேறு யாருடைய முகமாவது ஞாபகத்துக்கு வந்ததா?'' என்று கேட்டாள்.

''ஏதோ ஞாபகம் வருவது போலத் தோன்றுகிறது. தெளிவாகத் தெரியவில்லை. மேகத்



திரை போட்டு மறைத்தது போலிருக்கிறது.''

''பழுவூர் இளையராணியை நீ அடிக்கடி பார்த்ததுண்டா ?''

'' சில சமயம் பார்த்ததுண்டு. ஆமாம்! நீ சொன்ன பிறகு யாருடைய முக ஜாடை என்று தெரிகிறது. நந்தினி தேவியின் முகத் தோற்றமேதான்! ஆச்சரியமாயிருக்கிறதே! அது எப்படி ஏற்பட்டிருக்கும், பூங்குழலி? நீ எப்படி அந்த ஒற்றுமையைக் கண்டுபிடித்தாய் ?''

'' அத்தையை அடிக்கடி நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். பழுவூர் இளையராணியைச் சில தினங்களுக்கு முன்னாலேதான் இதே கோடிக்கரையில் பார்த்தேன். முகத் தோற்றத்தின் ஒற்றுமை உடனே எனக்குத் தெரிந்து போய் விட்டது....''

''காரணம் என்னவா யிருக்கும்?''

''அதையுந்தான் ஒரு நாள் கண்டு பிடிக்கப் போகிறேன். இன்றைக்கு அத்தையைப் பார்த்ததும் அதைப் பற்றிக் கேட்கலாமென்றிருக்கிறேன்.''

''அத்தைதான் ஊமையாயிற்றே ? எப்படி அவளுடன் பேசுவாய் ?''

'' நீ உன் தாயாரோடு பேசுவதில்லையா, அமுதா!''

''ஜாடையினால் பேசுவேன். பிறந்தது முதல் பழக்கம். அப்படியும் புதிய விஷயம் ஒன்றைப் பற்றிச் சொல்வதாயிருந்தால் கஷ்டந்தான் !''

''பெரிய அத்தையும் நானும் அப்படித்தான் ஜாடையினால் பேசிக் கொள்வோம். ஜாடையினால் பேசமுடியாததைச் சித்திரம் எழுதிக் காட்டிக் கொள்வோம்.....''

''ஒரே குடும்பத்தில் அக்கா, தங்கை இருவரும் ஊமையாகப் பிறந்தது எவ்வளவு கஷ்டமான விஷயம்? அவர்களைப் பெற்றவர்களுக்கு அதனால் எவ்வளவு துன்பமா யிருந்திருக்கும்?''

''அது மட்டுமல்ல. சிறு வயதில் அக்காவும் தங்கையும் ஓயாமல் சண்டை போட்டுக் கொள்வார்களாம். அதனால் தான் பாட்டனார் பெரிய அத்தையை மட்டும் அழைத்துக் கொண்டு போய்ப் பூதத் தீவில் குடியேறி வசித்து வந்தாராம். பெரிய அத்தையின் பேரில் தாத்தாவுக்கு ரொம்ப ஆசையாம். குழந்தை பிறந்தவுடன் அவளுக்கு ராணியாகும் யோகம் இருக்கிறது என்று யாரோ ஜோசியன் ஒருவன் சொன்னானாம். அதனால் குழந்தை ஊமை என்று தெரிந்ததும் அவருடைய மன வேதனை ரொம்ப அதிகமா யிருந்ததாம்....''

இப்படிப் பேசிக் கொண்டே அவர்கள் காட்டில் புகுந்தார்கள். வெகு நேரம் தேடி அலைந்தும் ஊமை ராணியைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

''அமுதா! நீ என்னுடனிருப்பதனால் தான் அத்தையைக் கண்டுபிடிக்க முடியவில்லை. உன்னைக் கண்டு வேண்டுமென்றே மறைந்து கொள்கிறாள்.''

''என் அதிர்ஷ்டம் அவ்வளவுதான், நான் நினைத்தது எதுவும் நடைபெறுவதில்லை. நான் போகட்டுமா ?''

''எப்படிப் போவாய்? இந்தக் காட்டிலிருந்து உன்னை நான்தான் வெளியிலே கொண்டு போய்விட வேண்டும்.''

இந்தச் சமயத்தில் ஓர் அதிசயமான குரலின் ஒலி காட்டுக்குள்ளேயிருந்து வந்தது. அது மனிதக் குரலாகவும் தோன்றவில்லை; மிருகங்களின் குரலாகவும் தோன்றவில்லை.

இரண்டு மூன்று தடவை அந்த ஒலி கேட்டது. அந்த ஒலி வந்த திசையை நோக்கிச் சில மான்கள் பாய்ந்து ஓடின.

பூங்குழலி சற்று நின்று யோசித்தாள். ''அமுதா! சத்தம் செய்யாமல் என்னைத் தொடர்ந்து வா!'' என்று கூறினாள்.

குரல் வந்த திக்கை நோக்கி இருவரும் மெள்ள நடந்து சென்றார்கள். சற்று நேரத்துக்கெல்லாம் அதிசயமான காட்சி ஒன்றைக் கண்டார்கள்.

ஊமை ராணி ஒரு மரத்தின் அடிப் பகுதியில் சாய்ந்து நின்று கொண்டிருந்தாள். அவளுடைய கையில் இளந் தளிர்கள் சில வைத்துக் கொண்டிருந்தாள். அவளைச் சுற்றிலும் ஏழெட்டு அழகிய மான்கள் நின்று கொண்டிருந்தன. அவள் கையிலிருந்த தளிர்களைத் தின்பதற்கு அவை போட்டியிட்டன. அவளுடைய தோளின் மீது ஒரு சிறிய மான் குட்டி உட்கார்ந்து தன் சின்னஞ் சிறிய அழகிய கண்களால் அவளுடைய முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தது.

இந்த அபூர்வமான தோற்றத்தைக் கண்டு பூங்குழலியும் அமுதனும் சிறிது நேரம் அசையாது நின்றார்கள்.

முதலில் ஊமை ராணியின் தோள் மேலிருந்த மான்குட்டிதான் அவர்களைப் பார்த்தது. பார்த்ததும் தோள் மீதிருந்து துள்ளிக் கீழே குதித்தது.

மற்ற மான்களும் அவர்களைப் பார்த்து விட்டன. எல்லா மான்களும் அவர்கள் நெருங்கி வந்தால் பாய்ந்து ஓடுவதற்கு ஆயத்தமாக நின்றன.

பின்னர் ஊமை ராணியும் அவர்களைப் பார்த்தாள். அவள் தொண்டையிலிருந்து இன்னொரு விசித்திரமான ஒலி வந்தது.

அதைக் கேட்டதும் மான்கள் எல்லாம் துள்ளிப் பாய்ந்து ஓடிப் போய் விட்டன.

''அத்தைக்கு மனிதர்களின் பாஷை மட்டுந்தான் தெரியாது. மிருகங்களின் பாஷை நன்ருய்த் தெரியும்'' என்று பூங்குழலி சொல்லிக் கொண்டே, ஊமை ராணியிடம் சமிக்ஞை செய்தாள்.

பூங்குழலி நெருங்கி வந்ததும் ஊமை ராணி அவளைக் கட்டி அணைத்துக் கொண்டு உச்சி முகந்தாள்.

சேந்தன் அமுதன் சற்றுத் தூரத்திலேயே நின்று கொண்டிருந்தான்.

அத்தையும் மருமகளும் சிறிது நேரம் மௌன பாஷையில் பேசினர்கள்.

பின்னர் பூங்குழலி அமுதனை அருகில் வரும்படி அழைத்தாள்.

ஊமை ராணி அவனை மேலும் கீழும் சில தடவை உற்றுப் பார்த்துவிட்டு அவன் தலை மீது கைவைத்து ஆசி கூறும் பாவனையில் சிறிது நேரம் இருந்தாள்.

பின்னர் கையை அவன் தலையிலிருந்து எடுத்துவிட்டுப் பூங்குழலியைக் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு போனுள்.

மூன்று பேரும் ஓடைக் கரைக்கு வந்தார்கள்.

ஊமை ராணி அங்கேயே உட்கார்ந்து கொண்டு பூங்குழலிக்குப் போய் வரும்படி சமிக்ஞை காட்டினுள்.

பூங்குழலி, ''வா! அமுதா! வீட்டுக்குப் போகலாம். அத்தை வரமாட்டாளாம். இங்கே சாப்பாடு கொண்டு வர வேண்டுமாம்'' என்ருள்.

இருவரும் கலங்கரை விளக்கை நோக்கிப் போனர்கள்.

''பூங்குழலி! எனக்கு என்ன சொல்கிருய்?'' என்று அமுதன் கேட்டான்.

''உன்னேடு தஞ்சைக்கு வரலாம் என்ற எண்ணம் எனக்கு இருந்தது. அது இப்போது சாத்தியமில்லை. அத்தைக்கு அவருடைய செல்வச் கவிகாரப் பிள்ளையைப் பார்க்க வேண்டுமாம். ஆகையால் மறுபடியும் நாகைப்பட்டினப் பிரயாணம் எனக்கு இருக்கிறது. நீயும் உடன் வந்தால் அத்தை உடனே ஓடி மறைந்தாலும் மறைந்து விடுவாள். அவளிடம் நான் தெரிந்துகொள்ள



மன்னனின் மாண்பு

பாப விமோசனம்

சந்திர வம்சத்தில் நந்தன் என்றெரு அரசன் இருந்தான். அவன் தன் பிள்ளை தர்மகுப்தனுக்கு அரசளித்து விட்டுத் தவம் புரியச் சென்ருன். தர்மகுப்தன் ஒரு நாள் காட்டில் வேட்டையாடச் சென்ருன். துஷ்ட மிருகங்களிடமிருந்து காப்பாற்றிக் கொள்ள ஒரு மரத்தின் மீது ஏறி அமர்ந்தான். சிங்கத்தினுல் துரத்தி வரப்பட்ட கரடியொன்று தன்னைக் காப்பாற்றிக் கொள்ள மரத்தின் மீது ஏறியது. ''அரசே!, அஞ்சாதே. மரத்தடியில் சிங்கம் நிற்கிறது. இவ்விரவை நாம் இருவரும் மரத்தில் கழிப்போம். முன்னிரவில் நீ தூங்கு. நான் உன்னைக் கவனித்துக் கொள்கிறேன். பின்னிரவில் நான் தூங்குகிறேன். நீ என்னைக் கண்காணித்துக் கொள்!'' என்று கரடி கேட்டுக் கொண்டது. அரசனும் உடன்பட்டான்.

அரசன் தூங்கும்போது சிங்கம் கரடியிடம், ''அரசனைத் தள்ளு. நான் நின்றுவிட்டுப் போய் விடுகிறேன்!'' என்றது.

''நம்பினேரைக் கைவிடலாகாது!'' என்று மறுதளித்தது கரடி.

அரசன் விழித்திருக்கும்போது சிங்கம் கரடியைத் தள்ளக் கோரவே தர்மகுப்தன் ஆராய்ந்தறியாது கீழே தள்ளினுன். கரடி தெய்வவசத்தால் கிளையைப் பிடித்துக் கொண்டது.

''மன்னவா! நான் தியான நிஷ்டன் என்ற மகரிஷி. வேண்டிய ரூபம் கொள்ளும் ஆற்றலுடையவன். நீ மனமறியத் தவறு இழைத்து விட்டாய். ஆகவே, பைத்தியம் பிடித்துத் திரிவாயாக!'' என்று சாபமிட்டது கரடி.


தர்மகுப்தன் பைத்தியம் பிடித்துத் திரிந்தான். அவனது நிலையைக் கேட்டறிந்த தந்தை, ஜைமினி மகரிஷியிடம் சென்று பிராயச்சித்தம் கேட்டான்.

''தனுஷ்கோடி செல். அது வேதம் கூறும் புண்ணிய ஸ்தலம். மாபாதகம் போகும். அங்கு உன் மகனை ஸ்நானம் செய்யச் சொல்!'' என்ருர் மகரிஷி ஜைமினி.

தனுஷ்கோடி புண்ணியத் தலத்தின் மகிமை, தர்மகுப்தன் பைத்தியம்தெளிந்து முன்போலானுன். ரோகமெல்லாம் போக்கும் வலிமை கொண்டது தனுஷ்கோடி தீர்த்தம்.

- ராமேசுவரம் வரலாறு

— பீ. எஸ். மணி



வேண்டிய விவரங்களையும் தெரிந்து கொள்ள முடியாது.''

சேந்தன் அமுதன் பெருமூச்சுவிட்டு, ''நான் கொடுத்து வைத்தது அவ்வளவு தான். அப்படியானால், இப்போதே உன்னிடம் விடைபெற்றுக் கொள்கிறேனே!'' என்றான்.

''இல்லை, இல்லை! வீட்டுக்கு வந்து சாப்பிட்டுவிட்டு உன் மாமன் முதலியவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு போ! இல்லாவிட்டால், என்னிடம் எல்லாரும் சண்டைக்கு வருவார்கள்!''

வழியில் இன்னோர் இடத்தில் ஒரு புதரின் மறைவில் நின்று ஒரு பெண்ணும் ஆணும் பேசிக் கொண்டிருப்பதை அவர்கள் பார்த்தார்கள்.

''ஆகா! அண்ணி ராக்கம்மாள் போலிருக்கிறது. இன்னமும் இரகசியப் பேச்சு முடிந்தபாடாக இல்லை. இப்போது வந்திருப்பவர்கள் யார்? அந்தப் பாண்டிய நாட்டு ஒற்றர்கள்தானா? வேறு யாராவதா?'' என்று பூங்குழலி தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள்.

ராக்கம்மாள் புதர் மறைவிலிருந்து வெளிப்பட்டு வந்தாள். பூங்குழலியைப் பார்த்ததும் சிறிது திடுக்கிட்டாள். ஆனால் அதை உடனே மறைத்துக் கொண்டு வேகமாக அவர்களண்டை நெருங்கி வந்தாள்.

''பூங்குழலி! இத்தனை நாள் எங்கே தொலைந்துபோயிருந்தாய்? உன் அப்பாவும் அண்ணனும் ரொம்பக் கவலைப்பட்டுப் போனார்களே!'' என்றாள்.

''எதற்காகக் கவலைப்பட வேண்டும்? நான் வீட்டை விட்டுப் போவது இது தான் முதல் தடவையா?''

''இந்தத் தடவை உன் அத்தை மகனையும் அழைத்துக் கொண்டு போய் விட்டாயல்லவா? ஒருவருக்கும் சொல்லாமல் நீங்கள் கல்யாணம் செய்து கொண்டு விடுவீர்களோ என்ற கவலை!''

''அண்ணி! இந்த மாதிரியான அசட்டுப் பேச்செல்லாம் என்னிடம் பேச வேண்டாம் என்று எத்தனை தடவை சொல்லியிருக்கிறேன்? இன்னொரு தடவை இவ்வாறு பேசினாயோ...?''

''இல்லையடி, பெண்ணே! இல்லை! நீ உன் அத்தை மகனைக் கல்யாணம் செய்து கொண்டால் எனக்கு என்ன? அரசகுமாரனைக் கல்யாணம் செய்து கொண்டால் எனக்கென்ன? இலங்கையிலிருந்து உன் பெரிய அத்தை வந்து உன்னைத் தேடிக் கொண்டிருந்தாள். அவளை நீ பார்த்து விட்டாயா?'' என்று கேட்டாள்.

''இல்லை, இன்னும் பார்க்கவில்லை!'' என்று சொன்னாள் பூங்குழலி.

வீடு சேர்வதற்குள் சேந்தன் அமுதனிடம் தனியாகப் பேசும் சந்தர்ப்பம் கிடைத்தபோது, ''அமுதா! ஜாக்கிரதை! அண்ணி பாண்டிய நாட்டுச் சதிகாரர்களோடு சேர்ந்தவள். அவள் உன் வாயைப் பிடுங்கப் பார்ப்பாள். ஒன்றுக்கும் பதில் சொல்லாதே!'' என்றாள்.

''இங்கு நான் இருக்கும் இன்னும் சிறிது நேரமும் ஊமையாகவே இருந்து விடுகிறேன்'' என்றான் சேந்தன் அமுதன்.

* * *

அன்று பிற்பகலில் பூங்குழலி மறுபடியும் நாகைப்பட்டினத்தை நோக்கித் தன் ஓடத்தைச் செலுத்தினாள். படகில் ஊமை ராணி வீற்றிருந்தாள்.

ஊமை ராணியின் அருகில் இருக்கும் போது பூங்குழலி எப்போதும் மன நிம்மதி அடைவது வழக்கம். ஒத்த உணர்ச்சியுள்ள அவர்களுடைய உள்ளங்கள் ஒன்றுக்கொன்று அவ்விதம் அமைதியை அளிப்பதுண்டு.

ஆனால் இம்முறை பூங்குழலியின் மனத்தில் அத்தகைய நிம்மதி ஏற்படவில்லை.

சில நாளைக்கு முன்பு அதே ஓடத்தில் பொன்னியின் செல்வனை உணர்வு இழந்திருந்த நிலையில் அழைத்துப் போனது அவளுக்கு அடிக்கடி நினைவு வந்தது. அந்த இராஜகுமாரனை இன்னொரு இராஜகுமாரியிடம் சேர்ப்பிப்பதற்காகவே தான் அத்தனை கஷ்டத்துக்கு உள்ளானதை எண்ணியபோது அவளுடைய இதயத்தில் 'சுருக்'கென்ற வேதனை ஏற்பட்டது.

சேந்தன் அமுதனை ''ஊருக்குப் போ!'' என்று பிடித்துத்தள்ளியதுபோல் அனுப்பி விட்டதை எண்ணியபோது அவள் உள்ளம் இரங்கியது.

இந்த எண்ணங்களைத் தவிர, அன்று அவளுடைய தந்தை தியாக விடங்கக் கரையர் செய்த எச்சரிக்கை அடிக்கடி நினைவுக்கு வந்து கொண்டிருந்தது.

''குழந்தாய்! உன்னுடைய போக்கு வரத்துக்களைக் கொஞ்சம் கட்டுப்படுத்திக்கொண்டால் நன்றாயிருக்கும். யார் யாரோ புதுப் புது மனிதர்கள் இங்கே வந்து கொண்டிருக்கிறார்கள். எதற்காக வருகிறார்கள் என்று தெரியவில்லை. இராஜ்யத்தில் ஏதேதோ சதிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அவற்றில் நீ அகப்பட்டுக் கொள்ளாதே! நம்முடைய குடும்பம் என்றென்றைக்கும் சோழ குலத்து மன்னர் குடும்பத்துக்குக் கடமைப்பட்டது! இதை மறந்து

விடாதே!'' என்று அவளுடைய தந்தை கூறினார்.

தந்தையின் எச்சரிக்கையோடு அண்ணியின் இரகசிய நடவடிக்கைகளையும் சேர்த்து எண்ணியபோது பூங்குழலிக்கு என்றுமில்லாத திகில் உண்டாயிற்று. ஒருவேளை அந்தப் புது மனிதர்கள் தன்னைத் தேடிக் கொண்டுதான் வந்திருப்பார்களோ? தன்னைத் தொடர்வதின் மூலம் பொன்னியின் செல்வன் இருக்குமிடத்தைக் கண்டுபிடிக்க முயல்வார்களா? தன்மூலமாக அது வெளிப்பட்டால் எவ்வளவு பெரிய குற்றமாக முடியும்?...

பூங்குழலியின் மனக் கலக்கத்தை அதிகமாக்கக்கூடிய விதமாக ஓடையின் கரையோரக் காடுகளில் சலசலப்புச் சத்தங்கள் கேட்டுக் கொண்டிருந்தன.

அப்போது காற்றே அடிக்கவில்லை. எட்டுத் திசைகளும் சதி செய்து கொண்டு காற்றைப் பிடித்துத் தடுத்து வைத்திருப்பது போலிருந்தது.

அப்படி இருக்கும்போது ஓடைக் கரைக் காடுகளில் சலசலப்பு ஏற்படக் காரணம் என்ன?

ஊமை ராணிக்கு இந்தத் தொந்தரவு ஒன்றுமில்லை. அவளுக்குக் காது கேட்காது. ஆகையால் சலசலப்புச் சத்தமும் காதில் விழாது. அவளிடம் அதைப் பற்றி யோசனை கேட்கவும் முடியாது.

ஆனால் ஊமை ராணிக்கு அதிசயமான வேறு சில சக்திகள் உண்டு. கண்ணால் பார்த்தும் காதால் கேட்டும் தெரிந்து கொள்ள முடியாத விஷயங்களை ஆறுவது புலனின் உதவியைக் கொண்டு அவள் கண்டு கொள்வாள். அவள் அறியாத அபாயம் ஒன்றும் தன்னை நெருங்க முடியாதல்லவா?...

இது என்ன? அத்தையும் கவலையோடு அடிக்கடி ஓடைக் கரையை அண்ணாந்து பார்த்துக் கொண்டு வருகிறாளே? உண்மையில் அபாயம் ஏதேனும் தொடர்ந்து வருகிறதோ?...

அத்தை ஓடைக் கரையை அடிக்கடி பார்ப்பதின் காரணம் சீக்கிரம் வெளியாகிவிட்டது. பூங்குழலியின் கவலையை அது போக்குவதா யிருந்தது.

ஓரிடத்தில் ஐந்தாறு மான்கள் ஓடைக் கரைப் புதர்களின் இடையில் தெரிந்தும் தெரியாமலும் நின்று படகை எட்டிப் பார்த்தன! இல்லை; படகைப் பார்க்கவில்லை! ஊமை ராணியைப் பார்த்தன!

ஆகா! மான்களைப் போன்ற அழகான பிராணிகள் உலகில் வேறு எதுவும் இல்லை! மான்களைப் படைத்த கடவுள் எதற்காக மனிதர்களையும் படைத்தாரோ, தெரியவில்லை. சண்டாள மனிதர்கள்! இவ்வளவு அழகான பிராணிகளை வேட்டையாடிக் கொல்லுகிறவர்களும் இருக்கிறார்கள் அல்லவா?...

மான்களைப் பார்த்து, அவற்றின் அழகை நினைத்து அதிசயித்த பூங்குழலியின் கரங்கள் துடுப்புப் போடுவதை நிறுத்தின. படகு நின்றது.

ஊமை ராணியின் தொண்டையிலிருந்து ஒரு விசித்திரமான ஒலி கிளம்பிற்று. அது அன்று காலையில் கேட்ட குரல் போல் இல்லை. அதில் திகிலும் எச்சரிக்கையும் கலந்திருந்தன.

அதைக் கேட்ட மான்களும் திகில் அடைந்து திரும்பி ஓடத் தொடங்கின.

அதே கணத்தில் எங்கேயோ மறைவான இடத்திலிருந்து ஓர் அம்பு விர் என்று ஒரு மானின் மீது தைத்தது.

அம்பு தைத்த மான் சோகம் நிறைந்த ஓலமிட்டது!

ஊமை ராணி படகிலிருந்து கரையில் தாவிக் குதித்துக் காயமடைந்த மானை நோக்கி ஓடினாள்.

அவள் மானின் சமீபத்தை அடைந்த அதே சமயத்தில் நாலாபுறத்துப் புதர்களிலும் சலசலப்புச் சத்தம் உண்டாயிற்று. அடுத்த விநாடியில் ஏழெட்டுப் பேர் வந்து அவளைச் சூழ்ந்துகொண்டார்கள். அவர்களில் பலர் கையில் வேலாயுதங்கள் இருந்தன. சற்றுத் தூரத்தில் அவர்களுக்கு வழி காட்டி அழைத்து வந்த ராக்கம்மாளும் காணப்பட்டாள்.

ஊமை ராணி தப்பி ஓட முயன்றாள். முடியவில்லை. தப்பி ஓடுவது இயலாத காரியம் என்று அறிந்ததும் ஊமை ராணி சும்மா நின்றுவிட்டாள்.

இரண்டு பேர் நெருங்கி வந்து அவளுடைய கைகளைக் கயிற்றினால் பிணித்துக் கட்டினார்கள்.

இவ்வளவும் பூங்குழலி பார்த்துக் கொண்டிருக்கும்போதே சில விநாடி நேரத்தில் நிகழ்ந்து விட்டன. ஊமை ராணியின் கரங்களைக் கயிற்றினால் கட்டுகிறார்கள் என்பதை அறிந்ததும் பூங்குழலி படகிலிருந்து பாய்ந்து கூச்சலிட்டுக்கொண்டு ஓடி வந்தாள். கையிலிருந்த துடுப்பை ஓங்கிக்கொண்டு வந்தாள்.

ஊமை ராணியைச் சுற்றி நின்றவர்களில் ஐந்தாறு பேர் பூங்குழலியை நோக்கி ஓடி வந்தார்கள். அவளைப் பிடித்து இழுத்துக் கொண்டு போய்ப் படகில் தூக்கிப் போட்டுக் கயிற்றினால் இறுக்கிக் கட்டிவிட்டார்கள்.

பிறகு திரும்பிச் சென்றார்கள். அவர்களுடன் சாவதானமாக வந்த ஊமை ராணியையும் அழைத்துக் கொண்டு சில விநாடி நேரத்தில் மறைந்து விட்டார்கள். (தொடரும்)

அலக்நந்தாவின் அமைதி குலைந்தது ஏன்?

சாதாரணமாக அமைதியாகவே ஓடும் அலக்நந்தா நதி. ஆனால் ஜூலை 20ந் தேதி பத்ரிநாத் ஆலயத்துக்குச் சென்று பத்ரிநாராயணரைத் தரிசித்த பரவசத்துடன் திரும்பிக் கொண்டிருந்த பக்தர்களை அலக்நந்தா நதி, சீற்றத்துடன் பொங்கி எங்கோ அடித்துச் சென்றது. அலக்நந்தா நதியின் இரு உபநதிகள் பாதாள கங்கையும், பைரால் நதியும் பெருக்கெடுத்ததால் வந்த வினை இது. ஹிமாலய மலையைச் சேர்ந்த கடுவால் பிரதேசத்தில் இருக்கும் கோஹரான ஏரியில் நிலச் சரிவு ஏற்பட்டுப் பெரும் பாறைகள் விழுந்ததால் அந்த ஏரியின் நீர் பொங்கி இரு உப நதிகளில் பாய, பெரும் வெள்ளம் ஏற்பட்டு விட்டது. கடுவாலிலுள்ள பேலாகுசி என்னுமிடத்தில் தண்ணீர் அதிவேகத்துடன் பாறைகளை அடித்துக் கொண்டு ஓடியபோது பத்து மணி நேரம் இயற்கையின் சீற்றத்தில் சிக்கி அல்லலுற்றனர் பக்தர்கள்.

பக்தர்களில் ஒருவரான கனஷ்யாம் சர்மா வெள்ளத்திலிருந்து தப்ப மலையில் ஏறும்போது ஒரு பெண்மணி கீழே தேங்கி நின்ற நீரில் நழுவி விழ இருந்ததைக் கண்டார். தாமதம் செய்யாது தமது சட்டையைக் கழற்றி அப்பெண்மணியை நோக்கித் தொங்க விட்டார் அவர். அம்மாது சட்டையைப் பிடிக்க மும்முறை முயன்று இறுதியில் சட்டையைப் பிடித்தபோது சட்டை பரிதாபமாகக் கிழிந்து விட்டது. நீரில் அப்பெண் விழுந்து மறைந்து போனார். கனஷ்யாமும் மற்றையோரும் தட்டுத் தடுமாறி ஏறி ஒரு ஜமேதாரின் குடிலை அடைந்தனராம். அக்குடிலில் அப்பொழுது தஞ்சம் புகுந்தவர் சுமார் முந்நூறு பேர்களாவது இருப்பர். ஒருவர் விடும் மூச்சு மற்றவருக்குக் கேட்டது! அழுகுரல்களாலும், கூக்குரல்களாலும் அந்தக் குடில் முழுவதும் பயங்கரம் குடிகொண்டிருந்தது. நீரின் வேகம் அப்பொழுதும் நிற்கவில்லை. சீற்றமுற்ற நதியின் நீர் மேலும், எழும்பிக் குடிலின் அருகில் வந்தபோது இயற்கையின் சீற்றத்துக்கு ஈடு கொடுக்க முடியாதவர்கள் அடித்துச் செல்லப்பட்டனர். எப்பாடுபட்டாவது தப்பிக்கும் முயற்சியில் மற்றையோர் மலையில் மேலும் மேலும் ஏறினர். கனஷ்யாமும் அவரது சகாக்கள் மூவரும் இறுதியாக ஏறி நின்ற இடம் ஒரு மலைப் பாறை. அதன் இடப்புறத்தில் கிடுகிடு பள்ளம். வலப்புறத்தில் ஆத்திரம் கொண்ட அலக்நந்தா நதி. என்ன செய்வது என்று தெரியாது சாவைத் தழுவ இவர்கள் தயாரானபோது அதிசயமாக அலக்நந்தா நதியின் நீர் மட்டம் குறையத் தொடங்கியது. ஆறு மணி நேரம் அநாதரவாக அல்லலுற்ற இவர்கள் எப்படியோ தட்டுத் தடுமாறிச் சமோலி கிராமத்தை வந்தடைந்தனர்.

ராம்நாத் எனும் டாக்ஸி டிரைவர் ஒரு சேட்ஜி தமது காரில் உட்கார்ந்திருக்கும்போது, "வெள்ளம் வரும் போலிருக்கிறது. காரைச் சீக்கிரம் கிளப்பிக் கொண்டு போக வேண்டும்" என்று எச்சரிக்கை செய்தாராம். சேட்ஜியோ மும்முரமாகத் தமது உடைமைகளைக் காப்பாற்றுவதில் முனைந்தாராம். ரூபாய் 50,000 கொண்ட சூட்கேஸைக் காப்பாற்ற ஏற்பட்ட தாமதமே காலன் அவரைக் கவருவதற்கு உரிய வாய்ப்பை நல்கிவிட்டது. காருடன் சேட்ஜியும் வெள்ளத்தில் போயே போய் விட்டார்.

உத்தரப் பிரதேசத்திலுள்ள காசியாபூர்வாசி, சந்திரிகா திவாரியின் மனைவி மலையில் ஏறும்போது கால் வழுக்கி வெள்ளத்தில் விழுந்து விட்டார். அக்காட்சியைக் கண்டு விட்டுச் சந்திரிகா திவாரி தமது மனைவியைக் காப்பாற்றவெனப் போகத் துடித்தபோது மற்றையோர் தடுத்து விட்டனர். இல்லாவிடில் அவரும் வெள்ளத்துக்கு இரையாகி யிருப்பார்.


ராஜஸ்தானத்து மங்கையொருத்தி போலீஸ் ஸ்டேஷனில் புலம்பிக் கொண்டிருந்தார். "அலக்நந்தா அம்மையே. என்னை ஏன் விட்டு விட்டாய்? அவர் இல்லாமல் நான் எப்படி உயிர் வாழ்வேன்?" என்று அரற்றி அரற்றி அழுது கொண்டிருந்தார் அவர்.

நதியின் சீற்றம் காரணமாகச் சமோலி கிராமமே நில நடுக்கத்தால் ஆடுவதுபோல் ஆடியதாம். பாறைகள் மோதுவதால் பெரும் சத்தம் காதுகள் செவிடாகும் போல் கேட்டதாம். இத்தகைய பரிதாபகரமான நிகழ்ச்சிகளுக்குக் காரணம் என்ன? அது அன்பர்களை ரட்சிக்கும் பத்ரிநாராயணனுக்குத் தான் தெரியும்.

ஆதாரம்: **செய்திப் பத்திரிகைகள்**

எழுதியவர்: **ராஜாமணி**

அலக்நந்தாவின் வெள்ளப்பெருக்கம்



நித்யா புன்சிரிப்புடன் தோளைக் குலுக்கிக் கொண்டாள்.

ஞாயிற்றுக்கிழமை காலை அவர்கள் புறப்பட்டுப் போனார்கள். அமிர்தத்துக்கு வீட்டில் இருப்புக் கொள்ளவில்லை. ஏதோ புத்தகத்தை எடுத்து மனம் போனபடி புரட்டிக் கொண்டிருந்தானே தவிர, படிக்க முடியவில்லை. ஸோனாவுக்குத் தானும் போனால் என்ன என்று அவனுக்குத் தோன்றிற்று. ஸ்கூட்டர் சர்வீசுக்குப் போயிருந்தது. டாக்ஸியில் போனால் என்ன குடி முழுகிப் போய்விட்டது. தான் இவ்வளவு செலவழித்துக் கொண்டு போவதைப் பார்த்தாவது அன்று தன்னை அவ்வளவு அலட்சியமாகப் பேசியிருக்கக் கூடாது என்று அவள் மனச்சாட்சி உறுத்தட்டும்.

ஹெலிகாப்டர்கள் கீழே இறங்கி விட்டன

இந்திரா பார்த்தசாரதி



ஸோனாவுக்கு அவன் போய்ச் சேர்ந்தபோது நித்யா கந்தக அருவியில் நீராடி விட்டுப் புதுப் புடவை கட்டிக்கொண்டு வெய்யிலில் கூந்தலை உலர்த்தியவாறு நின்றாள். அவள் பக்கத்தில் நின்று கொண்டிருந்தான், அவள் ஆபீஸைச் சேர்ந்த மகேஷ். 'டீ ஷர்ட்' போட்டுக் கொண்டு உதட்டில் சிகரெட் தள்ளாட அவளுடன் பேசிக் கொண்டிருந்தான். அவள் மயிரை நீவிவிட்டுக் கொண்டே தலையை ஒருக்களித்துப் பின்புறமாகச் சாய்த்துச் சிரித்துக் கொண்டிருந்தாள்.

''அமிர்தம்...! நீ எப்படி இங்கு வந்துசேர்ந்தே?'' என்று வியப்புடன் கேட்டான் மகேஷ்.

நித்யா திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

''வரல்லேன்னு சொல்லிட்டு.....'' என்று நித்யா சொல்லி முடிப்பதற்குள் அமிர்தம் கேட்டான்: ''நான் இடையில் புகுந்து குறுக்கிடுகிறேனே?''

நித்யாவுக்கு முகம் சிவந்தது. ''இங்கே வேவு பார்க்க வந்தீங்களா? வெட்கமா இல்லே?''

''வேவு பார்க்க நான் யாரு? என்ன உரிமை இருக்குது? நீ ஏன் இவ்வளவு கோபப்படறே?''

''அப்பொவே எங்களுடன் வருவதற்கென்ன? தனியா வருவானேன்?''

அமிர்தம் சிரித்தான்.... ''நீ ஸோனாவை விலைக்கு வாங்கி யிருக்கிறது எனக்குத் தெரியாது...''

நித்யாவின் கோபம் சற்றுத் தணிந்தது. ''நீங்க எப்படி வந்தீங்க?''

''டாக்ஸி.''

''அட, கடவுளே! எவ்வளவு ஆச்சு?''

''கவலைப்படாதே. உன்னைப் பார்க்கணும்னு ஒரு வேகம். கிளம்பி வந்து விட்டேன்....''

''க்ஷணச் சித்தம் கணப் பித்தம் என்பாங்களே அப்படியா இருப்பீங்க? ஒருநாள் இதுவே உங்களுக்கு ஏதாவது விபரீதத்தைத் தேடித் தரும்.''

அவள் சொன்னது உண்மையாகி விட்டது...

அமிர்தம் காரை நிறுத்தினான். பானர்ஜி குடியிருக்கும் அந்தப் பெரிய கட்டடம் வந்துவிட்டது.

அவன் காரைப் பூட்டிக் கொண்டு போனபோது அவன் காலடியில் ஒரு கிரிக்கெட் பந்து வந்து விழுந்தது. பளபளவென்றிருந்த அந்தப் பந்தைக் கையிலெடுத்துக் கொண்டான் அவன்.

''அங்கிள்ஜி... பால்...''

'ஸ்டம்பை' விடக் குட்டையான ஒரு சிறுவன் பந்தைக் கேட்டான்.

''தும் பௌலர் ஹை, யா பாட்ஸ்மென்?...'' என்று கேட்டான் அமிர்தம்.

''ஃபாஸ்ட் பௌலர் ஹை...'' என்றான் அந்தச் சிறுவன். அமிர்தம் அந்தப் பையன் கன்னத்தில் தட்டிக் கொடுத்து விட்டுப் பந்தைக் கொடுத்தான்.

நாலாவது மாடியில் பானர்ஜி இருந்தான். 'லிஃப்டி'ல் அவனுடன் நாலைந்து குழந்தைகள் வந்தன. அவை வெகு சகஜமாக ஆங்கிலத்தில் பேசிக்கொண்டு வந்தன. 'ஓடியனி'ல் ஓடிக்கொண்டிருந்த 007 படத்தைப் பற்றி வாதம்.



பானர்ஜி வீட்டுக்குச் சென்று காலிங் பெல்லை அழுத்தியதும், அவனுடைய சமையற்காரன் கதவைத் திறந்தான்.

'' ஆயியே சா(ஹ)ப்... பாபுஜி ஹை(ங்)...''

பானர்ஜி ஒரு பிரெஞ்சு நாவலைப் படித்துக் கொண்டிருந்தான். அவனுக்கு ஐந்தாறு ஐரோப்பிய பாஷைகள் நன்றாகத் தெரியும்.

''எப்படி இந்த நேரத்தில் இங்கு வந்தாய்?'' என்று கேட்டான் பானர்ஜி.

''பார்க்கப் போனால் நான் கேட்க வேண்டும், எப்படி இந்நேரத்தில் வீட்டில் இருக்கிறாய்?'' என்று சொல்லிக் கொண்டே சோபாவில் உட்கார்ந்தான் அமிர்தம்.

சோபாவில் சாய்ந்து கொண்டிருந்தவன் பதில் ஒன்றும் சொல்லாமல் தோளைக் குலுக்கியவாறு எழுந்து உட்கார்ந்தான்.

சுவருக்குச் சுவர் விரிக்கப்பட்டிருந்த இரத்தினக் கம்பளம், சுவரில் மாட்டப்பட்டிருந்த பானர்ஜி வரைந்த ஒரு சித்திரம் — அறையில் வேறு படங்களே இல்லை — உயரே உத்தரத்திலிருந்து தொங்கிய கண்ணாடியாலான கோயில் விளக்கு — எல்லாமாகச் சேர்ந்து அந்த அறையை விஸ்தாரமாகக் காட்டித் தனிமைச் சூழ்நிலையை உண்டாக்கின.

''இந்த அறையில் ஒரு தனிமை உணர்வு ஏற்படுகிறது'' என்றான் அமிர்தம்.

''நான் விரும்புவதும் அதுதான்... நீ இதைப் புரிந்து கொண்டது பற்றிச் சந்தோஷம்...''

''இன்னொரு விஷயம் எனக்கு இன்றுதான் புரிந்தது. என் அடி மனத்தில் உன்னிடம் பொறாமை ஏற்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன்...''

''நீ என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தவில்லை...''

''நீ ஆச்சரியப்பட வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. பொறாமை ஏன் என்று எனக்குப் புரிந்தாலும் நான் ஒரு செயலற்ற நிலையில் இருப்பதுபோல் எனக்குப் படுகிறது.''

பானர்ஜி பைப்பை எடுத்து அதில் புகையிலையை நிரப்பினான். அவன் முகத்தில் இலேசாகப் புன்னகை படர்ந்தது.

''நான் உன்னைப் 'போர்' அடிக்கிறேனா?'' என்றான் அமிர்தம்.

''இல்லை...மேலே சொல்லு...''

அவன் 'பைப்'பைப் பற்ற வைத்துக் கொண்டான்.

''மேலே சொல்ல என்ன இருக்கிறது?''


''இந்தச் சிக்கலான பேச்சுக்களும், தத்துவங்களும் வேண்டாம். உன் பிரச்னை என்ன?''

அமிர்தம் சிறிது நேரம் பேசாமல் இருந்தான். இவனிடத்தில் சொல்லலாமா? கல்யாணமே செய்து கொள்ளாதவன்,— இவனுக்குத் தன் பிரச்னையைச் சொன்னால் எங்கே புரியப் போகிறது? — பெண் இனத்தையே விஷம் என்று ஒதுக்குகிறவன், தான் சொல்வதைக் கேட்டால் சிரிக்கத்தான் போகிறான். அவன் இவ்வாறு இருப்பதற்கு ஒரு தீவிரமான காரணம் இருக்கலாம். அதை அவன் இப்பொழுது சொன்னாலும் சொல்லலாம்... தன் பிரச்னையை அவனிடத்தில் சொன்னால்தான் என்ன?

இதில் பிரச்னை எங்கே இருக்கிறது? பானுவே தன்னை வரச் சொல்லிவிட்டு வீட்டைப் பூட்டிக் கொண்டு போய் விட்டாள். நேரே வீட்டுக்குச் சென்று திலகத்துடன் நேரு பார்க்குக்குப் போய் அவளுக்குக் கார் விடக் கற்றுக் கொடுக்க வேண்டியதுதானே தன் கடமை? தன்னுள் மற்றொரு பாதி இதை ஏன் ஏற்றுக்கொள்ள மறுக்கிறது? கனவுகளை நினைத்து ஏன் அசை போடுகிறது?

''நீ என்ன 'கம்ப்யூட்டரா', பிரச்னையைக் கூறினால் விடையைத் தர?'' என்றான் அமிர்தம், பானர்ஜி தன்னைக் கூர்ந்து கவனிப்பது கண்டு.

''தான் உண்டாக்கிக் கொள்வதைத் தவிர மனிதனுக்கு வேறு பிரச்னைகளே இல்லை. மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையே நிகழும் போராட்டத்தில்



மனிதனுக்கு ஏற்படக் கூடிய பிரச்னைகள் எல்லாம் பௌதிகத் தன்மை வாய்ந்தனவாகத்தான் இருக்க முடியும். மனப் போராட்டம் என்ற வார்த்தை மனிதன் தானாக ஏற்படுத்திக்கொண்டது, தன் 'ஈகோ'வைச் சீராட்ட. எனக்கு அதில் நம்பிக்கை இல்லை...''

''நீ ஏன் ஒரு சிஷ்யப் பரம்பரையை உருவாக்கவில்லை என்பதுதான் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. மற்றப்படி ஒரு மத குருவுக்கு வேண்டிய எல்லாத் தகுதிகளும் உனக்கு இருக்கின்றன....'' என்று சிரித்துக் கொண்டே சொன்னான் அமிர்தம்.

''ஹாஸ்யம் இருக்கட்டும்... நான் சொல்வதை நீ ஒப்புக் கொள்ளுகிறாயா, இல்லையா?''

''நீ சொல்வது புரிந்தால்தானே, ஒப்புக்கொள்ள? இயற்கைக்கும் மனிதனுக்குமிடையே நிகழும் போராட்டம் என்றாயே, இதற்கு என்ன அர்த்தம்?''

''இயற்கைக்கும் மனிதனுக்குமிடையே நிகழும் போராட்டத்துக்கு வாழ்க்கை என்று பெயர். மனிதன் வாழ்ந்து கொண்டிருப்பதே அவன் வெற்றி. மரணமே அவன் தோல்வி. ஆகவே போராட்டம் என்பது பௌதிக ரீதியில்தான் இருக்கும். மனம் கற்பித்துக் கொள்ளும் பயங்கரமான சிக்கல்களுக்கு அவன்தான் பொறுப்பே ஒழிய, இயற்கையல்ல.''

''இந்தச் சிக்கல்கள் இருக்கின்றன என்று ஒப்புக் கொள்வதே அவற்றின் உண்மையை நிரூபிக்கின்றன. இதில் கற்பனை என்பது எங்கே வந்தது?'' என்றான் அமிர்தம்.

''நீ பௌதிக மனிதன்... ஏன் பௌதிக விதிப்படி வாழக் கூடாது? உனக்குள்ள பிரச்னைகள், அதோ பந்தைத் துரத்திக் கொண்டு ஓடுகிறதே அந்த நாய்க்கு இருக்கின்றனவா? அதன் பிரச்னைகளெல்லாம் எப்படி நிகழ்காலத்துச் சவாலைச் சமாளிப்பது என்பது தான்....''

அமிர்தம் பானர்ஜி சுட்டிக் காட்டிய திசையில் பார்வையைச் செலுத்தினான். ஓர் அழகான வெள்ளைப் பட்டு மயிர் மூடிய குள்ள நாய். அது பந்தைத் துரத்திக் கொண்டு போவது வேடிக்கையாக இருந்தது. இரண்டு மூன்று குழந்தைகள் கைகொட்டிச் சிரித்தன.

''அதோ அந்தக் காட்சி உன் மனத்தில் எந்த விதமான உணர்ச்சியும் உண்டாக்கவில்லையென்றால் உன்னுடன் வழக்காடுவதில் பயனில்லை. நீ வெறும் இயந்திரம். மனிதனைப் புரிந்துகொள்ளும் சக்தி உனக்குக் கிடையாது'' என்றான் அமிர்தம்.

''இந்த மாதிரியான அசட்டு மனோபாவங்கள்தாம் வாழ்க்கையை இன்னும் சிக்கலாக்குகின்றன. சிற்சில சமயங்களில் காட்சி இன்பம் தூண்டும் ரஸனை உணர்வுக்காகப் பகுத்தறிவை விலையாகத் தரும் விவேகமற்ற தன்மை எனக்குத் தேவையில்லை. எனக்கு எது வேண்டும் என்று நிச்சயமாகத் தெரியும். அதை அடைய முயன்று அடைகிறேன்.''

சமையற்காரன், ஒரு 'டிரே'யில் தேநீரும் கோப்பைகளும் கொண்டு வந்தான். பானர்ஜி ஒரு 'ஸ்பூனி'னால் 'ஜக்'கிலிருந்த தேநீரைக் கலக்கி விட்டான். ஆவி பறந்து கொண்டிருந்தது.

இன்னொரு தட்டில் சமையற்காரன் கொண்டு வந்து வைத்த பிஸ்கட்டில் ஒன்றை எடுத்து வாயில் போட்டுக் கொண்டான் அமிர்தம்.

அப்பொழுது டெலிபோன் மணி ஒலித்தது. பானர்ஜி எழுந்து, டெலிபோன் அருகே சென்றான்.

''பானர்ஜி ஹியர்...''

பானர்ஜி இதைச் சொல்லிவிட்டு உடனே அமிர்தத்தைப் பார்த்தான்.

''ஜி ஹா(ங்)... உன்கா சாத் பாத் கர்னா ஹை?...''

அவன் போனைக் கீழே வைத்துவிட்டு அமிர்தத்திடம் சொன்னான். ''மிஸஸ் அமிர்தம்...''

அமிர்தத்துக்கு முகத்தில் இரத்தம் பாய்ந்தது. வேவு பார்க்கிறாள்!

அவன் மிகுந்த கோபத்துடன் எழுந்து சென்று போனை எடுத்தான்.

''என்ன?'' என்ற குரலில் எரிச்சல் வெளிப்படையாகத் தெரிந்தது.

''வந்து...வந்து..வர நேரமாகுமா?''

''துப்பு அறியறதா அர்த்தமா? நான் பானர்ஜி வீட்டிலேதான் இருக்கேன், திருப்திதானே?''

அணைந்து போன 'பைப்'பைப் பற்ற வைத்துக் கொண்டிருந்த பானர்ஜி தன் பெயரை அமிர்தம் சொல்வதைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தான்.

தனக்கு ஏன் இவ்வளவு கோபம் வருகிறது? அவள், தான் சொன்னபடி, பானர்ஜி வீட்டுக்கு வந்தோமா இல்லையா என்று உளவு அறிய முயல்கிறாளே என்பதனால் ஏற்பட்ட சினமா? அல்லது வேறு வழியில்லாமல் தான் பானர்ஜி வீட்டுக்கு வரும்படியாக நேர்ந்துவிட்டதே என்ற ஆத்திரமா?—

''கோபப்படாதீங்க... நீங்க என்னை ஏமாத்த மாட்டீங்கங்கிற நம்பிக்கை எனக்கு இல்லாமலில்லே... வந்து....

கீதைக் கதைகள்



'காமத்தை அடக்கி, ஆன்மாவைத் தொல்பரமாகிய பரமாத்மாவுடன் ஐக்கியப்படுவதுதான் மேலான நிலை'

5. குரு

அவர் ஒரு மகான். அவருக்கு ஒரு மகன்.

மகன் கன்னி ஒருத்திமீது காதல் வசப்பட்டான். அவ்விள வயதில், தன் மகன் மாம்ஸ இச்சைகளுக்கு மசிந்து கொடுப்பது பலவீனச் செயலென மகானுக்குத் தோன்றிற்று.

'மகனே! ஆசை மிக்கதானது காமம். புலன் வழி புகுந்து மனத்தை மயக்குவது. ஐம்பொறிகளையும் அடக்கி, புல்லிய காமத்தை ஒடுக்குக. காமம் ஞானத்தின் விரோதி. நுகருமிடத்து காமம் இனிக்கிறது. ஆனால் அறுவடை துன்பமே துன்பம்! இந்திரியங்களும், மனமும், புத்தியும் காமத்தின் இருப்பிடம் எனப்படுகின்றன. இதன் வழி அறிவை மறைத்து, பலவகையாலும் காமம் மனிதனை மயக்கம் அடையச் செய்கின்றது. எனவே, நீ இந்திரியங்களை அடக்கிக் காமத்தைத் தூரத்துவாயாக!' என மகான் மகனுக்கு உபதேசித்தருளினார்.

மகன் மௌனத்தில் ஆழ்ந்தான். பின்னர் தியானத்தில் ஒன்றினான்.

நிஷ்டை கலைந்ததும் கோவணாண்டியாகப் புறப்பட்டான். மலை உச்சி ஒன்றினை அடைந்தான். அங்கு தவ வாழ்க்கையை மேற்கொண்டான்.

பாசம் மகானை உலைதல் செய்தது. தமது உபதேசம் கேட்டு மகன் துறவு வாழ்க்கை பூணுவான் என மகான் எதிர்பார்த்தவரல்லர். மகனின் கோபத்தைக் கல்லியெறிந்து, அவனை வீட்டுக்கு அழைத்து வரும் ஆசை அவருடைய உள்ளத்தில் முற்றியது.

மலையின் உச்சிக்கு ஏறினார். இரத்த உறவின் பாசம் முழுவதையும் குரலிலே குழைத்து, 'மகனே!' என அழைத்தார்.

மகன் விழி அலர்த்திப் பார்த்தான். தந்தை தன் முன்னால் நிற்பதைக் கண்டான். மௌனியாகவே அவரை அமரும்படி பணித்தான். மகனிடம் அதீத சக்தியொன்று குடிகொண்டிருப்பதாக மகானுக்குத் தோன்றியது. மகனின் பாத நிழலில் மகான் அமர்ந்தார்.

'உமது உபதேசத்தைக் கேட்டுத் தெளிவடைந்து, இங்கு வந்து தவமியற்றலானேன். அப்பொழுது என் சித்தத்தில் மகாஉண்மையொன்று பிரகாசமாயிற்று.'

'அதை எனக்கு உபதேசிப்பாயா?' என மகான் பயபக்தியுடன் கேட்டார்.

'என் சீடனுக்கு அதை உபதேசிப்பேன்...'

மகான் தம் மகனையே உரிய முறைப்படி குருவாக வரித்தார்.

'தன் உபதேசங்களின்படி நடந்து காட்டுபவன் தானே மகான்?' - மகனின் கேள்வி.

'ஆமாம்.'

'காமத்தை அடக்கி ஆன்மாவைத் தொல்பரமாகிய பரமாத்மாவுடன் ஐக்கியப்படுத்துவதுதானே மேலான நிலை?'

'நிச்சயமாக!' - தன் மகன் ஆழ்ந்த மதத் தத்துவங்கள் பேசுவதைக் கேட்டு மகான் புளகாங்கிதம் அடைந்தார்.

'நீர் உமது காமத்தை உரிய முறைப்படி கட்டுப்படுத்தியிருந்தீரானால், நான் பிறந்திருக்க மாட்டேன். அப்படி நீர் உமது காமத்தை அடக்காதிருந்தும், நீர் எப்படி மகானானீர்?'

மகான் ஒரு கணம் யோசித்தார்.

அடுத்த கணம், 'நீயே அப்பன் சுவாமீ!' - மகன் அடிகள் முன்னர் மகான் அடி பணிந்தார்.

— எஸ். பொன்னுத்துரை

வந்து...'' அவள் இன்னும் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தாள்.

போனை வைத்து விட்டு வந்தான் அமிர்தம்.

''ஏதாவது தகராறு?'' என்று கேட்டான் பானர்ஜி.

அமிர்தம் பதில் சொல்லாமல் சிறிது நேரம் வெளியே பார்த்துக்கொண்டிருந்தான்.

தேநீர் கோப்பையை எடுத்து அமிர்தத்தின் கையில் கொடுத்தான் பானர்ஜி.

''சூடாயிருக்கிறதா?''

''இருக்கிறது'' என்று வாயால் சொல்லாமல் தலையை அசைத்தான் அமிர்தம்.

''உன் மனைவியிடம் பானர்ஜி என்று சொன்னாயே, எதற்காக?''

''நான் உன் வீட்டுக்கு வருவதாகச் சொல்லிவிட்டு வந்தேன். உண்மையா என்று வேவு பார்க்கிறாள்...'' என்று புன்சிரிப்புடன் சொன்னான் அமிர்தம்.

''அவள் சந்தேகப்படுவதற்குக் காரணம்...?''

அமிர்தம் மௌனம் சாதித்தான். தேநீரை அருந்திவிட்டுக் கோப்பையைக் கீழே வைத்தான். பிறகு, ''நீ எங்கு போனாலும், என்ன வேலையானாலும், யாரும் உனக்கு போன் செய்து எங்கிருக்கிறாய், என்ன செய்துகொண்டிருக்கிறாய் என்று உளவறிய முற்பட மாட்டார்கள். நீ மிகவும் அதிர்ஷ்டக்காரன், உன் சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்ளத் தெரிந்தவன்'' என்றான்.

''உன் வாழ்க்கையைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளும் பொறுப்பு உன்னிடத்தில்தானே இருந்தது?''

''நான் பலஹீனமானவன் என்று அடிக்கடி கட்டிக் காட்டாதே. உன்னையும் நான் வெறுக்க நேரிடலாம்...'' என்றான் அமிர்தம். (தொடரும்)

ரகுபதி ராகவ

* மகாத்மா காந்தி

தமிழாக்கம்: ராஜாஜி



43 – (I)

ஏசுநாதருடைய சரித்திரம் உண்மைச் சரித்திரமா அல்லது வெறும் கதையா என்கிற கேள்வியைப் பற்றி நான் கவலைப்படவில்லை. அந்த விசாரமே எனக்கு வேண்டியதில்லை. ஏசுநாதருடைய சரித்திரம் உண்மையல்ல ; அது ஒரு கற்பனைக் கதை என்று யாரேனும் நிரூபித்து விட்டாலும் அது என்னுடைய கொள்கையைப் பாதிக்காது. ஏசுநாதர் உண்மையில் இருந்தவராயினும் சரி, அவருடைய சரித்திரம் கற்பனையாக இருந்தாலும் சரி, அவருடைய உபதேசமாக நாம் பெற்றிருப்பதே போதும். அதில் காண்பது சத்திய வாக்கு. அந்தப் பேருண்மை சிறிதளவும் குறைவுபடாது.

(யங் இந்தியா 31-12-31)

ஏசுநாதர் ஒருவரே தெய்வ அவதாரம் என்று நான் ஒப்புக் கொள்ள முடியாது. கண்ணன், ஸ்ரீராமன்,— முகம்மது நபி, ஸோரா அஸ்தர் முதலியவர்களுக்கு எவ்வளவு தெய்விகம் உண்டோ, அவ்வளவு ஏசுநாதருக்கும் உண்டு. பைபிளில் இருக்கிற ஒவ்வொரு மொழியும், வேதத்தில் உள்ள ஒவ்வொரு மொழியும், குர்ஆனிலுள்ள ஒவ்வொரு வாக்கியமும் கடவுள் வாக்கியம் என்று எண்ண முடியாது. ஆனால் இந்தப் பல சமய சாஸ்திரங்கள் மொத்தத்தில் தெய்வ வாக்கு என்றே சொல்வேன். ஒவ்வொரு வரியும் புறக்கணிக்கக் கூடாத கடவுள் உத்தரவு என்று ஒப்புக் கொள்ள மாட்டேன். என்னைப் பொறுத்தமட்டில் கீதை, குர்ஆன், பைபிள் இவை ஒவ்வொன்றுமே சமமான மதிப்புக்குரிய தெய்விக சாஸ்திரமாகும்.],

(ஹரிஜன் 6-3-37)

"நீங்கள் ஏசுவை என்னவாகக் கருதுகிறீர்கள்?'' என்று ஒரு கேள்வி. அதற்கு நான் சொல்லும் விடை என்னவென்றால், உலகத்தில் அவதரித்து மக்களுக்கு உபதேசம் செய்த முனிவர்களுள் ஒருவர் என்பேன். மிகப் புனிதமான உபதேசம் செய்தவர். கிறிஸ்தவர்களுக்கு அவர் ஆண்டவனுடைய ஔரஸ புத்திரர். நான் அவ்வாறு ஒப்புக் கொள்ளாதபடியினால் அவருடைய உபதேசத்தின் மகிமை என் உள்ளத்தில் எள்ளளவும் குறையாது. கிறிஸ்துவர்களுடைய இந்தக் கொள்கையை ஒப்புக் கொள்ளாதபடியினால் என்னுடைய வாழ்க்கையில் அவருடைய உபதேசம் பயன்படுவதில், ஒரு ஏற்றத் தாழ்வும் உண்டாகாது. ஏசுநாதர் மக்களுக்குச் சொன்ன உண்மையும் காட்டிய வழியும் எனக்கு இல்லாமற் போகுமா ? கட்டாயம் போகாது.

உலகத்தில் உள்ள பல சமயங்களை ஒன்றுக்கொன்று தாரதம்யம் பார்த்து மதிப்பிட முடியாது. அப்படிச் செய்யப் பார்ப்பதும் தவறாகும். அவையெல்லாமே மனிதன் வாழ்க்கையை நல்வழியில் செலுத்தும். அதற்காகவே அவை தோன்றின. ஏசுநாதருடைய சரித்திரம் மக்களை நல்வழியில் செலுத்துவதற்கு மிகவும் பயன்படுகிறது. அவர் கிறிஸ்து மார்க்கத்துக்கு மட்டும் உரிமைப்பட்டவர் அல்ல. உலகத்தில் எல்லா ஜாதியினருக்கும் அவரை உரிமை பாராட்டும் பாத்தியம் உண்டு. எந்த ஜாதியினராயினும் பரம்பரையாக வந்த எந்தத் தெய்வத்தை வழிபடுபவர்களாயினும் அவர்கள் எல்லாருமே ஏசுநாதரைத் தங்கள் உடைமையாகக் கருதலாம்.

(மாடர்ன் ரிவ்யூ, அக்டோபர், 41)





கோழிக் குஞ்சின் சாவு

•காஷ்மீரி•


"கோழிக் குஞ்சு செத்துப் போய்விட்டது!" என்றான் அவன்.

'செத்துப் போய் விட்டால் என்ன, குடியா முழுகிவிடும்?' என்று நினைத்துக்கொண்டேன்; ஆனால் வாய்விட்டுச் சொல்லவில்லை.

"காதில் விழுந்ததா, நான் சொன்னது? கோழிக் குஞ்சு செத்து விட்டது!" என்றான் திரும்பவும்.

நான் அவனை ஏற இறங்கப் பார்த்தேன். பளிச்சென்று வெளுத்த உடையில் எல்லோரையும் போலத்தான் தோன்றினான். பைத்தியம் என்று கூறி விடுவதற்கான அறிகுறி எதுவும் தென்படவில்லை; ஆனால் அவனுடைய தலை முடி மட்டும் வாராமல் கலைந்து சிக்குற்று இருந்தது. விழிகளில் சிவந்த கோடுகள் ஓடியிருந்தன. அவனது வலது கையில் செத்த கறுப்புக் கோழிக் குஞ்சு இருந்தது. என்னையும் அந்தக் குஞ்சையும் மாறி மாறிப் பார்த்தவாறு நின்றான்.

எனக்கு ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை. நான் ஆயிரம் ஆயிரம் கோழிக் குஞ்சுகள் சாவதைப் பார்த்திருக்கிறேன். கோழிக் குஞ்சு சாவதென்பது ஒரு பெரிய விஷயமன்று. இடீரென்று ஒரு கழுகு அதைக் கொத்திக் கொண்டு போய் விடலாம். ஒரு நாய் கவ்விக் கொண்டு போய் விடலாம். சாலையின் குறுக்கே ஓடும் பொழுது அதுவே காருக்கடியில் நசுங்கி விடலாம். ஏன்? சாதாரணமாகவேகூட இறந்து விடலாம். குறுக்கும் நெடுக்குமாகப் போய்க் கொண்டிருக்கும் பொழுது வீட்டுக்கார அம்மாளின் காலில் பட்டேகூட நசுங்கிச் செத்துவிடலாமே! கோழிக் குஞ்சு சாவது என்ன பெரிய விஷயம்?



அவன் கையில் தொங்கிக் கொண்டிருந்த கோழிக் குஞ்சுகூட அப்படியொன்றும் சிறந்ததாகவும் தோன்றவில்லை, ஒரு பெரிய மனுஷன் அதனால் பைத்தியமாகி உளறும் அளவுக்கு. தலையில் ஒன்றுபின்னுவென்று கலைந்து சிலிர்த்துக் கிடந்த, கறுத்த சிறு சிறு மயிர்; நீண்டு கோணலாகி விறைத்துத் தொங்கிய கால்கள்; முதுகில் ஏதோ வெள்ளைப்பொடி தூவப்பட்டிருந்தது — பார்க்கவே அருவருப்பான காட்சி அது. இருந்தாலும், அவன் மனத்தைப் புண்படுத்திவிடக் கூடாதென்பதற்காக, அந்தக் கோழிக் குஞ்சைப் பற்றி ஏதோ விசாரிப்பவன்போல், "இது என்ன, சிறந்த சாதிக் குஞ்சோ?" என்று கேட்டு வைத்தேன்.

"சாதியைத் தூக்கி உடைப்பில் போடையா!" அவன் எரிச்சலாகப் பதில் சொன்னான்: "இதன் சாதி தெரிந்து நமக்கு என்ன ஆக வேண்டும்?"

ஒருகணம் பேசாமல் இருந்துவிட்டு அவன் மீண்டும் சொன்னான்: "என்ன சாதியோ, தெரியாது. அப்படியொன்றும் சிறந்த சாதியைச் சேர்ந்ததாகவும் தோன்றவில்லை. ஆனால்...." ஒரு முறை பெருமூச்சு இழுத்துக்

கொண்டான். தோள்களை உலுக்கிக் கொண்டான். விசித்திரமான நோக்குடன் அந்தக் குஞ்சைப் பார்த்துக் கொண்டே, ''இப்படி ஆகுமென்று யார் கண்டது?'' என்றான்.

சொல்லிவிட்டு அவன் மீண்டும் மௌனத்தில் ஆழ்ந்தான். கண்களினின்று நீர் துளித்தது. ''ஐயோ, பாவம்! உயிர் போய்விட்டது; இருந்தாலும் பெயர் நிலைக்கட்டும்....'' என்று அவனுக்கு ஆறுதல் கூறியவண்ணம் சற்று ஆகாயத்தைப் பார்த்தேன்.

''என்னது?'' என்று அவன் கோபக் குரலில் குமுறினான். ஆனால் அவன் பார்வை என் மீது இல்லை; வருத்தத்தில் தாழ்ந்திருந்தது.

நான் வாய் அடைத்து நின்றேன். செத்த கோழிக் குஞ்சிடம் அவன் காணும் அழகை நானும் காணும் நோக்கத்தில், அதையே முறைத்துப் பார்க்கலானேன். ஆனால் எனக்கென்னவோ ஏமாற்றம்தான் ஏற்பட்டது. அந்தக் குஞ்சிடம் எவ்வித அழகையும் நான் காண முடியவில்லை. அது மட்டுமா! அதன் கரிய உடல், அதன்மீது படிந்திருந்த புழுதி ஆகியவை பார்ப்பதற்கு முன்னைவிட எனக்கு அதிக அருவருப்பை அளித்தன. அதோடு அதன் முதுகின் மேல் ஏதோ வர்ணம் பூசியது போலும் இருந்தது. அந்த வெள்ளைப் பூச்சைக் குறித்து, ''முதுகின் மேல் இதென்ன பூச்சு?'' என்று கேட்டேன்.


உடலின் ஈரத்தில் கரைந்து கலந்து பிளாஸ்திரி போட்டது போலிருந்தது.

''சொச்... சொச்... சொச்... சொச்...! தனிமை வியாதிதான் இதன் உயிரை வாங்கி விட்டது!'' என்று சொல்லிக் கொண்டே தொடர்ந்தான்: ''உண்மையில், உலகத்திலுள்ள ஒவ்வொருவரும் தனியானவனே. தாய் — தந்தை, சகோதர — சகோதரி என்பவை யெல்லாம் வெறும் பொய்யுறவுகள்.''

''அடடா! இவ்வளவு பெரிய வேதாந்த விசாரணைக்கான தருணமா இது?'' என்று எண்ணிக் கொண்டேன்.

''பிராணி வைத்தியர்கள் ஏதோ பவுடரைத் தூவியிருக்கிறார்கள்....'' என்றான் என்னைப் பார்த்துக் கொண்டே.

''சரி, எங்கேயாவது வீசி எறிந்து விடுங்கள். எவ்வளவு நேரம் கைகடுக்க இதை





அக்தர் முகைதீன்

கோழிக் குஞ்சின் முதுகை அவன் உற்றுப் பார்த்தான், அதுவரை அதைப் பார்க்காதவன் போல். பிறகு அதன் சிறகுகளைத் தள்ளித் தள்ளிப் பார்த்தான். நானும் அவனோடு அதன் முதுகைக் கவனிக்கலானேன். முதுகின் மேல் ஏதோ வெள்ளைப் பொடி தூவப்பட்டிருந்தது. அந்தப் பொடி அதன் நனைந்த

இயற்கையின் இதயமான காஷ்மீரில் 1928ம் ஆண்டு பிறந்த திரு அக்தர்முகைதீன் 1968ம் ஆண்டு பத்மஸ்ரீ பட்டம் பெற்றார். 'சத்சங்கர்' என்ற இவரது நூல் சாஹித்திய அகாதெமியின் பரிசு பெற்றது. ஸ்ரீநகரில் டெபுடி டைரக்டராக உத்தியோகம் வகிக்கும் அக்தர் முகைதீன் பல நாவல்களும், நாடகங்களும், சிறுகதைகளும் எழுதிக் காஷ்மீரி, உருது இலக்கியங்களை வளப்படுத்தி யிருக்கிறார். இளமை இளந்தை வெறுக்கும் இயல்பைக் 'கோழிக்குஞ்சின் சாவி'ல் காட்டி, கருத்தாழம் கொண்ட எளிய நடையில் உயிரின் மதிப்பை உள்ளத்தைத் தொடும் வகையில் விளக்க வைக்கிறார்.



இப்படியே பிடித்துக் கொண்டிருப்பது?'' என்றேன்.

''ஆமாம், இப்பொழுது எரியத்தான் வேண்டும்'' என்றான் வேறு வழியின்றி. தனக்கு மிக மிக வேண்டியவர்களின் சடலத்துக்கு ஈமக் கடன் செய்யச் சித்தமாகிவிட்டது போலிருந்தது அவன் பேச்சு.

''தெருவில் அப்படி ஒரு மூலையில் விசி எறிந்து விடுங்கள். நாயோ, காக்கையோ கொத்தித் தின்னட்டும்'' என்றேன்.

''என்ன! தெரு மூலையிலா? சீ...! நல்ல யோசனை சொல்கிறாய்? உனது இந்த யோசனைக்கு நன்றி தெரிவிப்பதா, வருத்தம் தெரிவிப்பதா புரியவில்லை; பார்க்கப் போனால் நீயும் இந்த உலகத்தைச் சேர்ந்த மனிதன் தானே?'' என்று அவன் சாடினான்.

''அப்படியென்றால் இந்தச் செத்த கோழிக் குஞ்சுக்குக் கல்லறையா....?'' என்று நான் எண்ணிக் கொண்டிருக்கும்பொழுதே அவன் என் எண்ணச் சங்கிலியைத் துண்டித்துவிட்டான்: ''நீயாவது விஷயத்தைச் சரியாகப் புரிந்து கொள்வாய் என்று நினைத்தேன் !''

என் போக்கில் அவனுக்கு எத்தனை ஏமாற்றம் என்று புலனாகியது. அவன் தொடர்ந்து கூறியதைக் கேட்ட பொழுது.

''எந்த விஷயத்தையும் மேலெழுந்தவாரியாகப் பாராமல் அடிவரை புகுந்து ஆராய்வாய் என்று நினைத்தேன். சரி, போகிறது'' என்று சொல்லி நிறுத்தினான்.

நான் மௌனமானேன், ஏதோ நாவால் சொல்லக் கூடாததைச் சொல்லிவிட்டுப் பிறகு வெட்கப்படுபவன் போல்.

''பாவம் ! இந்தக் குஞ்சைப் பிடித்துத் தின்ன வேண்டுமென்று எத்தனை பேர் இதைத் துரத்தினர்? யாரும் இதனிடம் இரக்கம் காட்டவில்லை'' என்று சொல்லிக் கொண்டே அவன் தனது வலது கையை நெஞ்சின் மேல் வைத்துக் கொண்டான். செத்துப் போன அந்தக் கோழிக் குஞ்சைத் தன் விழிகளைக் குளமாக்கி அதன் தூய நீரால் கழுவிக் குளிப்பாட்ட விரும்புபவன் போல் வைத்த கண் வாங்காமல் அதையே உற்று நோக்கினான்.

''இந்த உலகில் தோன்றும் பொழுது என்னென்ன ஆசைக் கோட்டைகள் கட்டிக் கொண்டு இது தோன்றியதோ, யார் கண்டது....'' என்று அந்தச் செத்த குஞ்சோடு பேசுவது போல் தனக்குத் தானே சொல்லிக் கொண்டான். பிறகு திடீரென்று சிவந்த கண்களால் என்னை ஊடுருவிப் பார்த்து, ''வைக்கோல் கூடைக்குள்ளே கஸ்தூரிப் பூப்போன்ற கோழிக் குஞ்சைப் பார்த்திருக்கிறாயா?'' என்று கேட்டான்.

''உம், பார்த்திருக்கிறேன்'' என்றேன்.

''எவ்வளவு அப்பாவியாக இருக்கும் அது'' என்று அவன் மேலும் தொடர்ந்தான்: ''பால் குடிக்கும் பச்சிளம் குழந்தை, புதிதாகப் பிறந்த கன்றுக்குட்டி, கோழிக்குஞ்சு, இவையெல்லாம் சுபாவத்தில் ஒரே மாதிரியானவை. இளங்கன்று பயமறியாது என்பது எத்தனை எத்தனை உண்மை! பய உணர்ச்சி ஏற்படுவதே இல்லை. இயற்கையின் விளைவும், விரிவும் தங்களைச் சீராட்டி வளர்ப்பதற்காகத்தான் ஏற்பட்டவை என்ற நினைப்போ என்னவோ!''

நான் பேசாமல் கேட்டுக் கொண்டிருந்தேன். அவன் சொல்லிக்கொண்டே போனான் ''நான் என் கையைச் சற்றுப் பின்னுக்கு இழுத்து ஓங்கினால் நீ பயந்து விடுவாய் இல்லையா? ஏன் அப்படி? உனக்குள் ஒரு பய உணர்ச்சி தோன்றி முதிர்ந்து முற்றி விட்டதே. காரணம். இனி உன்னால் இந்தப் பய உணர்வை விட்டொழிக்க முடியாது. இதற்கு மாறாக நீ ஒரு பச்சிளம் குழந்தையின் கழுத்தில் கத்தியை வை; அப்பொழுதும் அது சிரிக்கத்தான் சிரிக்கும். அதற்கு அச்சம் என்பதே தெரியாது. புரிகிறதா?'' என்று சொன்ன பொழுது அவன் உதடுகளில் புன்னகை தவழ்ந்தது.

''தன்னைக் கிள்ளி விடுவார்கள் என்பது பூவுக்குத் தெரியுமானால், பயத்தில் அது தானாகவே வாடி விடாதா?''

எனக்குச் சிரிப்பு வரவில்லை. சிந்திக்க ஆரம்பித்து விட்டேன். என் மனக் கண் முன்பு என்ன என்னவோ எண்ணங்கள் உருப் பெற்றன.

''என்ன, பயந்துட்டியா?'' சிரித்துக் கொண்டே கேட்டான் அவன். ''நீ ஓர் உதவாக்கரை. உடல் வலுவும் போதாது. உனக்கு ஒன்றுமே தெரியாது; புரியாது. இந்தக் கோழிக் குஞ்சை எங்கிருந்தோ ஒரு கழுகு கொத்திக் கொண்டு வந்தது. அதன் இரக்கமற்ற பிடியில் இது சிக்கித் தவித்திருக்கிறது. எங்கேனும் உட்கார்ந்து கழுகு இதைக் கொத்திக் கொன்று தின்ன விரும்பியிருக்கலாம். ஆனால் எப்படியோ பிடி தளர்ந்து, நழுவி இது எங்கள் வீட்டு முற்றத்தில் வந்து விழுந்திருக்கிறது!''

''ஓ! அப்படியா சமாசாரம்!'' நான் ஆவலோடு கேட்க ஆரம்பித்தேன்.

''முற்றத்தில் விழுந்த இதன் மீது இருவர் பார்வை ஏககாலத்தில் விழுந்தது — ஒன்று என் பார்வை, மற்றொன்று என் நாயின் பார்வை. நாங்கள் இருவருமே இதனிடம் ஓடினோம். நான் பிடிப்பதற்குள் நாய் இதைக் கவ்விப் பிடித்து விட்டது; கொல்லவும் தொடங்கி விட்டது. நான் கல்லை எடுத்தேன். பயத்தினால் நாய் இதை அப்படியே போட்டுவிட்டு எங்கோ ஓடி ஒளிந்து கொண்டது. அப்பொழுது நான் மட்டும்தான் இருந்தேன். கோழிக் குஞ்சு உயிரைக் காத்துக் கொள்ள ஓடிற்று — 'ஆம்'... 'ஆம்' என்று முனகிக் கொண்டே தன் மெலிந்த நீண்ட கால்களால் முடிந்த மட்டும் வேகமாக ஓடிற்று. வைக்கோல் கூடைக்குள் இதற்கு உயிர் அளித்தானே ஒருவன், அவனைக் கூப்பிட்டுக் கொண்டு ஓடிற்றோ என்னவோ! ஆனால் என்னை விட்டு எப்படித் தப்ப முடியும்? நான் பிடித்து விட்டேன்..... ஆமாம், நான் பிடித்து விட்டேன்.''

இதைச் சொன்ன அவன் ஒருகணம் மௌனத்தில் ஆழ்ந்தான்.

சிறிது நேரம் கழித்துத் தொண்டையைக் கனைத்துக் கொண்டு மீண்டும் ஆரம்பித்தான். ''திடீரென்று இந்த இடத்தில் சிறுத்தை, சர்ப்பம், வெறி பிடித்த நாய் எல்லாமாகச் சேர்ந்து படையெடுத்து வந்துவிட்டதாக வைத்துக் கொள். எல்லாம் உன்னைத் துரத்து

கின்றன, கடித்துக் குதறுவதற்கு! அப்பொழுது நீ என்ன செய்வாய்? உன் மன நிலை எப்படி இருக்கும்? சிறுத்தை, பாம்பு, வெறி நாய் — இதெல்லாம் துரத்தி நான் பார்த்த தில்லை என்று நீ சொல்லுவாய். எனக்கும் அந்த அநுபவம் கிடையாது. இருந்தாலும் உனக்கும் எனக்கும் தெரிந்த வரையில் அந்த மாதிரிசந்தர்ப்பத்தில் மனிதன் தன் உணர்வை இழந்து விடுவான்; வெறிபிடித்தவன் போல் அலறிப் புடைத்துக் கொண்டு ஓலமிட்டவாறு ஓடுவான். இல்லையா? அந்த நேரத்தில் அவனுக்கு, தான் என்ன செய்கிறோம் என்பதே தெரியாது. அதே போல்தான் நான் இந்தக் கோழிக் குஞ்சைப் பிடித்தபொழுது அது பயத்தினால் நடுநடுங்கி நின்றது. ''கும் கும்'' என்று கத்தித் தீர்த்து விட்டது. 'ஐயா, உங்களுக்கு நான் என்ன தீங்கிழைத்தேன்? பெரிதாகிச் சேவலானால் 'கொக்கரக்கோ' என்று கூவி உமைரை எழுப்புவேன். பெட்டையானால் முட்டையிட்டு உதவுவேன். இதைத் தவிர நான் வேறு என்ன செய்ய முடியும்?' என்று ஒரு வேளை அது கெஞ்சிற்றோ என்னவோ ?

'' நானும் என் வீட்டில் கோழி வளர்க்கிறேன். சேவல், காலையிலும், மாலையிலும் கொக்கரக்கோ என்று கூவிக் குப்பைமேட்டைக் கிளறிக் கொண்டிருக்கிறது. பெட்டைகள் 'கொருக்'... 'கொருக்'... 'கொருக்' என்று சதா பாடித் திரிந்து முட்டையிடுகின்றன. சொல்லப் போனால் மகிழ்ச்சி நிறைந்த குடும்பம் இந்தக் கோழிக் குடும்பம். ஒரு கணவன், அவனைச் சுற்றி நாலு மனைவிகள். மகிழ்ச்சியும் மன நிறைவும் கொண்ட குடும்பம்!....

''ஒரு யோசனை தோன்றிற்று — 'இந்தக் குஞ்சையும் அந்தக் குடும்பத்தோடு சேர்த்து விட்டால், இதுவும் நன்றாக வளரும். வளர்ந்து கொழுத்து விட்டால் பிறகு ஒரு விருந்துக்கு ஆகலாம். தன் இனத்தாரிடையிலிருக்கும் பொழுது இதன் பயமெல்லாம் தெளிந்து விடலாம்....' என்றெல்லாம் எண்ணி இதையும் அந்தக் கோழிக் கூண்டுக்குள் விட்டுவிட்டேன். ஒரு மணி நேரம் கழித்து நிலவரம் அறியக் கூண்டுக்குள் எட்டிப் பார்த்தேன். எனக்குப் பகீர் என்றது. ஏன் தெரியுமா?''

இந்தக் கேள்விக்குப் பதில் வேண்டுவது போல் அவன் என்னையே உற்றுப் பார்த்தான். அவன் உதடுகளில் விஷமச் சிரிப்பு வேடம் போட்டுக் கொண்டிருந்தது. அவன் என்னை நோக்கிய பார்வையில், தான் என்னவோ சாக்ஷாத் கடவுள் போன்றும், நான் என்னவோ குற்றம் புரிந்த அடிமை போன்றும் ஒரு பாவனை. ஒரு கணம் இந்தப் பாவனையோடு என்னை உற்று நோக்கியபின் அவன் சொன்னான். ''அலகினால் கொத்திக் கொத்திப் பெட்டைகள் இந்தக் குஞ்சின் முதுகுத் தோலை உரித்து விட்டன. முதுகிலிருந்த வலுவற்ற, வழுவழுப்பான மெல்லிய எலும்புகள் வெளியே தெரிய ஆரம்பித்தன. இரத்தம் உறைந்து இதயத் துண்டுகளைப் போல் சிறகுகளின் மேல் திட்டுத் திட்டாக ஒட்டியிருந்தது. இந்த நிலையில் கோழிக் குஞ்சு குன்றிப் போய் ஒரு மூலையில் ஒதுங்கி உட்கார்ந்திருந்தது. தோற்று நம்பிக்கையெல்லாம் இழந்துவிட்ட சூதாடியைப் போல்.



''உடனடியாக உனக்கு ஒரு வேலை தேடித் தரலென்று குறைப்பட்டுக்கிறியே; எனக்கு இந்த வேலை தேடித் தரும் நிறுவனத்தில் வேலையில் அமர எத்தனை வருஷங்களாச்சு தெரியுமா?''

''நான் அதைக் கையில் எடுத்துக் கொண்டேன். அப்பொழுது அது ஓட முற்படவில்லை. ஈனசுவரத்தில், 'கிச்', 'கிச்' 'கிச்' என்று கீச்சிட்டுக் கொண்டிருந்தது. 'நான் செத்துக் கொண்டிருக்கிறேன், இப்பொழுது உங்களுக்கெல்லாம் சந்தோஷம்தானே?' என்று கேட்பது போலிருந்தது. 'ஏ மனிதனே! நாயே! கழுகே! பெட்டைகளே! உங்கள் எல்லோரையும் கேட்கிறேன் — இப்பொழுது உங்களுக்கெல்லாம் சந்தோஷம்தானே? இப்பொழுது என் உயிர் போய்க் கொண்டிருக்கிறது. பெரிதாகி இனி நான் கூவ மாட்டேன். முட்டையிட மாட்டேன், குஞ்சு பொரிக்க மாட்டேன். இப்படியே செத்துவிடுவேன்' என்றெல்லாம் சொல்வதுபோல் இருந்தது. 'கிச்'... 'கிச்'... 'கிச்'...

''நான் அதைக் கையில் எடுத்து அதன் எதிரில் நாலைந்து அரிசி மணிகளை வைத்தேன். அதுவும் இரண்டொரு மணிகளைக் கொத்திக் கொண்டது. ஒரு வேளை அதற்குப் பசிதானோ? அல்லது என் மனத்தைப் புண்படுத்த விரும்பவில்லையோ? அது பற்றற்றான் நிலையை அடைந்திருந்தது—கடவுளைக்கூட 'பற்றற்றான்' என்றுதானே சொல்கிறார்கள்?


''பிராணி வைத்தியர்கள் இதன் முதுகில் ஏதோ பொடியைத் தூவினார்கள். நானும் இதற்கு உணர்க்கையாக இருக்கட்டும் என்று துணியில் சுற்றிக் கொண்டேன். அப்பொழுது இது பயப்படவில்லை; எதனிடத்திலும் இதற்குப் பயமில்லை. 'கிச்'... 'கிச்'... 'கிச்' என்று இது கீச்சிடும் பொழுதெல்லாம், 'இதோ பார்! நான் செத்துக்கொண்டிருக்கிறேன். இப்பொழுது உனக்குச் சந்தோஷம்தானே...?' என்று என் முகத்தில் செருப்பால் அடித்துக் கேட்பது போலிருந்தது.


''அவ்வளவுதான். ஒரு மணி நேரத்துக்குப் பிறகு இது செத்துப் போய்விட்டது.''

இதைச் சொல்லி முடித்த பொழுது அவனுடைய கண்களில் கண்ணீர் துளித்திருந்தது. செத்துப் போன கோழிக் குஞ்சை அவன் கண் இமைக்காமல் உற்று நோக்கிய வண்ணம், ''கேட்டியா? கடைசியில் கோழிக் குஞ்சு செத்தே போய் விட்டது!'' என்றான்.

தமிழாக்கம்: எஸ். ஆர். எஸ்.


சிதம்பர ரகசியம்
கதை: கோமதிசுவாமிநாதன்
சித்திரம்: ராஜி
5
அன்றிரவு சாப்பாட்டுக்குப் பிறகு...
ஜெய ஜெய கோ... குல பாலா...
அப்பா, பாட்டப்பா! விருந்தாளிகளுக்கெல்லாம் பால் கொண்டு போய்க் கொடுத்தியா?
ஆஹா! பாட்டப்பான்னு சொன்னீங்க! என்ன அழகான பட்டம்! தன்யனானேன்... பட்டம் பதவி பெறப் பாடவில்லை... ஐயா...
பாடாவதி அப்பான்னு சொல்லியிருக்கணும், பாட்டப்பான்னு வாயிலே வந்துடுத்து!
அண்ணா ஒரு சின்ன சந்தேகம்! இங்க எஜமான் இப்போ நிஜமாவே இந்தப் பங்களாவிலே இல்லியே?
கொஞ்சம் பொறு. இந்தப் படுக்கையை யெல்லாம் உதறிப் பார்த்துட்டுச் சொல்றேன். ஒளிஞ்சுகிட்டு இருக்கப் போறார். சின்ன வயசிலே அவருக்கு விளையாடவே நேரமில்லையாம்!
அதுக்கில்லே அண்ணே! எஜமான் இல்லேன்னு நிச்சயமாத் தெரியமா சாதகம் பண்ணலாமே! தமிழ் தோய்ந்து போகப் பாக்கி இருந்த பாலை டபிள் டோஸா அடிச்சுட்டேன். தொண்டை இதமா பரவுது... தொண்டையிலே இனிப்பாதி....
ஏய் ஏய்! வேலை கெட்ட வேளையில் நீ இப்படிப் பஞ்சாலை சங்கு மாதிரி கத்தினால் உன் தொண்டை புரளுவதுடன் இன்னைய எல்லாரும் புரட்டி எடுத்துடுவாங்க!
சரி! அப்போ நானும் படுத்துக்கப் போறேன். சொப்பனத்திலே சாதகம் பண்ணறேன்!
இதற்கிடையில்...
டார்லிங்! முகத்திலே ஏன் உற்சாகத்தைக் காணோமே? நான் பக்கத்திலிருந்தும் ஏன் வாட்டம்?
நீ கொஞ்ச ஆரம்பிச்சுட்டியா? நிரகசாரம். உன் வாயை மூடிக்கிட்டு என்னைக் கொஞ்சம் யோசிக்க விடு.


ரொம்ப சரி! நான் இப்பவே கிளம்பறேன். ரயில்வே ஸ்டேஷன் வரை துணைக்கு வரீங்களா? என்னை ரயில் ஏத்திட்டுத் திரும்பி வரப்போ உங்களுக்கு வயல் காட்டுத் தவளைகள் சத்தம் துணைக்கு வரும்.
மோகனா! ப்ளீஸ்! பெரியப்பா சொத்து நமக்குக் கிடைக்கிற வரை ஒரு கண்ணியமான அண்ணனும்
இந்த டயலாக் அடிக்கிற கதையெல்லாம் எங்கிட்டே வேண்டாம் மிஸ்டர் ரங்கதுரை!... மாடி அறையைப் பத்தி சின்னச்சாமி ஏதோ சொன்னானே? அதைப் பத்தி யோசிச்சீங்களா?
ஒரு வேளை அந்த அறையிலே தான் பெரியப்பா ஒளிச்சுக்கிட்டு இருக்காரோ என்னவோ?
அதே நேரத்தில் ரகுராமன் தன் அறையில் ஜன்னல் வழியே பார்த்து...
இருட்டுக்கும் ஒரு அழகு இருக்கத்தான் செய்கிறது. இதைப் பத்தி ஒரு கவிதை எழுதலாம். அதையும் இருட்டிலேயே உட்கார்ந்து எழுதினால் தான் உணர்ச்சி இருக்கும்!
ஐயா! இன்னும் படுக்கலியா? ஞாபகமா உட்பக்கம் தாழ்ப்பாள் போட்டுக்கிடுங்க!
இந்த சின்னச்சாமி ஏதோ மாடி அறைக்குப் போகக் கூடாதுன்னு சொன்னான் இல்லையா? ஒரு வேளை பேய், பிசாசு, அங்கே இருக்குமோ? அதைப் பார்த்து ஒரு கவிதை எழுதினால் புதுமையாக இருக்குமே. இதோ கிளம்பறேன்...
பட்டப்பாவுக்கு ஆனந்தமான கனவு...
மாதரசே மயிலே-
பங்களாவின் மற்றொரு பக்கத்தில்...
மோகனா! நம்ம டூப்ளிகேட் சாவிக் கொத்தையும் டார்ச் லைட்டையும் எடு! பார்த்துடலாம்!
வெரிகுட்! உனக்குத் தைரியம் இருக்கே. அந்த அறையில் என்ன இருந்தாலும் ஆளுக்கு ஃபிஃப்டி ஃபிஃப்டி!
ஓ.கே. அதிர்ச்சி ஏதாவது காத்துக்கிட்டு இருந்தாலும் எனக்குப் பாதி போதும்! அவ்வளவு தான் தாங்கும்.
தொடரும்



Sunsilk cares–
with 3 special shampoos

Pick the one that's perfect for you

Sunsilk Lemon Shampoo
For Greasy Hair: Gently washes out excess grease... gives you days of clean, bouncing, silken hair.

Sunsilk Tonic Shampoo
For Dry Hair: Contains Allantoin to nourish your hair... revives that silken lustre, leaves hair softly glowing.

Sunsilk Beauty Shampoo
For Normal Hair: Perfectly balanced to keep your hair in beautiful condition, weaving silk into every strand.



Sunsilk - more than a shampoo, a cosmetic for your hair

Quality Products by HINDUSTAN LEVER

LINTAS-SS. 11-140



போராட்டங்கள்

ர. சு. நல்லபெருமாள்

5. இனம் புரியாத தவிப்பு

உதவி ஆசிரியர் சாமிநாதன் பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தான். முதல் பக்கத்திலிருந்த ஒரு சினிமா நடிகையின் கவர்ச்சிப் படம் அவனுடைய கண்களை உறுத்தியது. சற்று நேரம் அந்தப் படத்தையே முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது அறைக்குள் உதவி ஆசிரியர் ராமபத்திரன் வரவே, அவசரமாக மறு பக்கத்தைப் புரட்டினான்.

''என்ன பத்திரிகை? அவ்வளவு உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறாய்?'' என்று கேட்டுக் கொண்டே தம்முடைய நாற்காலியில் சாய்ந்தார், ராமபத்திரன்.

''காலைக் குரல்.... பத்திரிகை என்றால், இப்படி இருக்க வேண்டும். பார்த்தீர்களா, செய்தியை. எப்படியெல்லாம் தருகிறார்கள்! தலைப்பைப் பார்த்ததுமே செய்தி முழுவதையும் படிக்க வேண்டும் என்று தூண்டுவதாகவல்லவா இருக்கிறது...!'' என்றான் சாமிநாதன்.

''ஒன்றிரண்டு தலைப்புக்களைப் படியேன், கேட்போம்.''

''காதலன் மாண்ட மர்மம்...கள்ளக்காதலனின் காதைக் கடித்தாள்... பருவப் பெண்ணைக் காணவில்லை...சார்! நம்முடைய பேப்பரில் அந்த நியூஸே வேண்டாம் என்றாரே, முருகானந்தம் சார். அதே நியூஸைக் 'காலைக் குரலி'ல் எப்படிப் போட்டிருக்கிறான், பாருங்கள், கொட்டை எழுத்தில்.....! பிரபல சினிமா நடிகை கைது... கோஹினூர் ஹோட்டல் அறையில் கும்மாளம்... ஒரு வாலிபனும் கைது... எப்படி நியூஸ்....?''

''இதெல்லாம் ஒரு செய்தியா?'' என்று முகத்தைச் சுளித்தார் ராமபத்திரன்.

''என்ன அப்படிக் கேட்டு விட்டீர்கள்? இந்தச் செய்திக்காகவே இந்தப் பத்திரிகை இன்று வழக்கத்தைவிட அதிகமான பிரதிகள் விற்பனையாகியிருக்கிறது! பத்திரிகைத் தொழிலில் உங்களுக்கு எத்தனை வருஷம் சர்வீஸ்?''

''இருபத்தாறு வருஷங்கள் ஆகிவிட்டன'' என்று சலித்துக் கொண்டார் ராமபத்திரன்.

''இவ்வளவு அனுபவம் ஆகியும் செய்தியை எப்படிக் கவர்ச்சியாகப் போட வேண்டும் என்கிற நுணுக்கம் தெரியாமல் இருக்கிறீர்களே!'' என்றான் சாமிநாதன்.

''தெரியாமல் என்னப்பா? எல்லா நுணுக்கங்களும் தெரியும். நீ பிறப்பதற்கு முந்தியே இந்தத் தொழிலுக்கு வந்து விட்டேன். ஆனால் நாம் வேலை பார்க்கிறது 'பாரதமணி'ப் பத்திரிகையில். இதை மறந்துவிடக் கூடாதப்பா. நம் பத்திரிகையின் கொள்கை வேறு.''

''என்ன சார் கொள்கை. கொள்கையைப் பார்த்தால் காசு கிடைக்குமா? நம்முடைய பத்திரிகையும், 'காலைக் குரலு'ம் ஓர் இடத்தில் இருந்தால் முதலில் எதை வாங்குவான்? கொட்டை எழுத்தில் பருவப் பெண்ணின் காதலன் மாண்ட மர்மம் என்ற தலைப்பையும், சினிமாக்காரியின் போட்டோவையும் பார்த்தவன், நம்முடைய பத்திரிகையைத் தீண்டுவானா சார்?''

''நம்முடைய பத்திரிகை அந்த மாதிரித் தரமுள்ளவர்களுக்காக இல்லே!''

''உயர்தரத்தில் உள்ளவர்களும் ஆசையோடு 'காலேக் குரல்' படிக்கிருர்கள்; கண்ணியமான அழகிய மனேவி யிருந்தாலும், ஆசை நாயகியை அணுகுவது மாதிரிதான். வேண்டுமானுல் நாலு பேருக்கு எதிரில் அதைப்பிரித்துப் படிக்கக் கூசுவார்கள். அவ்வளவுதான்.''

''அந்தக் கூச்சம் இருக்கும்வரை நம் நாட்டைப் பற்றி நாம் கவலேப்பட வேண்டாம்'' என்று கூறிக் கொண்டே உள்ளே வந்தார் முருகானந்தம். அவரைக் கண்டதும், சாமிநாதன் அடங்கிவிட்டான். தலேமை உதவி ஆசிரியராக இருக்கும் முருகானந்தத்திடம் தர்க்கம் செய்வது உசிதமல்ல என்று நினேத்து மௌனமாகி விட்டான்.

காரியாலயத்துக்கு முரளி வந்ததும் சாமிநாதனேக் கூப்பிட்டான். சாமிநாதன் உதவி ஆசிரியர்களின் அறையிலிருந்து வெளியே வந்த போது டைப்பிஸ்ட் பிரேமா குறுக்கிட்டாள்.

''ஏன் சார், எடிட்டரைப் பற்றிய நியூஸ் எப்படி உங்களுக்குக் கிடைத்தது?'' என்று இரகசியம் பேசுவதுபோல் கேட்டாள்.

''உம்... அதெல்லாம் தொழில் இரகசியம்'' என்று அலட்சியமாகக் கூறிவிட்டு முரளியின் அறைக்குள் சென்றுவிட்டான் சாமிநாதன்.

''பொதுவுடைமைக் கட்சிநடத்திய பொதுக் கூட்டத்தைப்பற்றிச் செய்தி மட்டும் போட்டால் போதாதா? படங்களேயும் ஏன் போட்டிருக்கிருய்?'' என்று கேட்டான், முரளி. அவன் கையில் அன்றைய 'பாரத மணி'ப் பத்திரிகை இருந்தது.

''படம் நன்ருக விழுந்திருக்கிறது'' என்ருன் சாமிநாதன்.

''ஓஹோ... நீ நன்ருகப் படம் எடுத்திருக்கிருய் என்பதற்காகப் பத்திரிகையில் போட்டு விட வேண்டுமா...?''

'' சிவராமன் உங்கள் நண்பர் ஆயிற்றே...''

''சிவராமன் என் நண்பன். ஆனுல் வேத மூர்த்தி...?''

''பேச்சாளரின் படத்தைப் போடும்போது கூட்டத்துக்குத் தலேமை வகித்தவரின் படத்தைப் போடாவிட்டால், நமக்கு வேண்டியவர் என்பதற்காகச் சிவராமன் படத்தைப் போட்டு விளம்பரப்படுத்திவிட்டோம் என்று குற்றம் கூறமாட்டார்களா?'' என்ருன் சாமிநாதன்.

முரளி சிரித்தான். சாமிநாதன் தன்னே மடக்கி விட்டான் என்ற உணர்வில் சற்று வியப்புடன் அவனே உற்றுப் பார்த்தான்.

''அந்தப் பொதுக் கூட்டத்துக்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுத்துச் செய்தியைப் பிரசுரித்திருக்க வேண்டாம். ஜனநாயக நாட்டுக்குத் தேவையில்லாத ஓர் அரசியல் கட்சி'' என்ருன் முரளி வெறுப்புடன்.

''உங்களே அங்கு பார்த்ததால் அது முக்கியமான கூட்டம் என்று முடிவு செய்து செய்தியை எழுதினேன்'' என்ருன் சாமிநாதன்.

தன்னே மீண்டும் ஒரு முறை மடக்கி விட்டான் என்பதை அறிந்து உள்ளூற முரளிக்குக் கோபம் எழுந்தது.

''நான் போகும் இடமெல்லாம் முக்கியமாக இருக்க வேண்டும் என்று நியதியா? எது முக்கியம், எதை விலக்கவேண்டும் என்பதைச் செய்திகளேச் சேகரிக்கும் நீயல்லவா தெரிந்து வைத்திருக்க வேண்டும்'' என்ருன் முரளி. குரலில் கோபம் தொனித்தது.

'''பாரதமணி' ஒரு கண்ணியமான பத்திரிகை. அதன் ஆசிரியர் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கு மட்டுந்தான் செல்வார் என்று நம்பி விட்டேன் சார். மன்னிக்க வேண்டும்'' என்ருன் சாமிநாதன், அமைதியாக. அவன் முகத்திலிருந்த



சிரிப்பு மறைந்திருந்தது.

முரளி திகைத்துப் போய்ச் சாமிநாதனே வெறிக்கப் பார்த்தான்.

எப்படி ஆழமாகத் தாக்கி விட்டான்! அதுவும் வாழைப் பழத்தில் ஊசியைச் செருகுவது போல்...!

முரளியின் கோபம் மறைந்துவிட்டது. சாமிநாதனின் சாதுர்யமான பதில் அவனை அயர வைத்துவிட்டது. சிரித்துக் கொண்டே சாமிநாதனின் முதுகில் தட்டினான்.

அப்போது சிவராமன் உள்ளே நுழையவே, சாமிநாதன் வெளியேறினான். பக்கத்தில் கிடந்த நாற்காலியில் அமர்ந்தான் சிவராமன்.

''உலக அதிசயங்களில் ஒன்று நடந்திருக்கிறது!'' என்றான் சிவராமன். ஒன்றும் புரியாமல் அவனையே பார்த்தான், முரளி.

''பொதுவுடைமைக் கட்சியின் ஒரு தலைவர் படத்தைப் போட்டு, பொதுக் கூட்டத்தைப் பற்றிய செய்திக்கும் முக்கியத்துவம் கொடுத்திருக்கிறாயே?'' என்றான் சிவராமன் வியப்புடன்.


''அதனால் 'பாரதமணி', உன் கட்சிக்கு வந்துவிட்டது என்று நினைத்து விடாதே!''

'''பாரதமணி' என்ன, இந்த நாடே இந்தக் கட்சிக்குள் அடங்கும் காலம் வரும்'' என்றான், சி.ராமன், அழுத்தமாக.

''எத்தனையோ மகான்களும், தியாகிகளும் உதித்த இந்த நாடு அவ்வளவு இழிநிலைக்குப் போய்விடாது'' என்றான் முரளி, வெறுப்புடன் முகத்தைச் சுளித்துக்கொண்டு.

''மகான்களும் தியாகிகளும் இந்தியாவில் மட்டும்தான் பிறந்தார்களா? சீனாவிலும் ரஷ்யாவிலும் யாருமே தோன்றவில்லையா என்ன?''

''நீ மெச்சும் சீனாவின் வேலையைப்



பார்'' என்று கூறிக்கொண்டே மேஜை மீதிருந்த 'பாரதமணி'ப் பத்திரிகையை எடுத்துச் சிவராமனிடம் வீசினான் முரளி.

''காலையிலேயே படித்து விட்டேன். கோமாளியின் கார்ட்டூனையும் பார்த்தேன். இதில் என்ன தவறு? திபேத்தில் சீனா தன்னுடைய கலாசாரப் புரட்சியைத் தொடங்கி யிருக்கிறது. புரட்சியின் வேகம் தாங்காமல் தலாய் லாமா நாட்டை விட்டு ஓடியிருக்கிறார்'' என்று கூறிச் சிரித்தான் சிவராமன்.

''அமைதியாக இருந்த ஒரு நாட்டைச் சீர்குலைத்து அடிமைப்படுத்துவதுதான் கலாசாரப் புரட்சியோ.''

''தூங்கிக் கொண்டிருந்த திபேத்தைத் தட்டி எழுப்பியிருக்கிறது சீனா.''

''இந்த அபத்த வாதத்துக்கு நான் பதில் சொல்லத் தயாராக இல்லை; கவனப் பிசகாக உன்னுடைய கட்சிக்கும் கட்சித் தலைவர் ஒருவருக்கும் 'பாரதமணி'யில் இன்று முக்கியத்துவம் கிடைத்து விட்டது'' என்றான் முரளி அலட்சியமாக.

''எங்கள் தலைவருக்கு உன்னுடைய 'பாரதமணி' முக்கியத்துவம் கொடுத்துத்தான் செல்வாக்குக் கிடைக்க வேண்டும் என்பதில்லை. இன்று அவருடைய விரல் அசைப்புக்கு லட்சம் லட்சமாகப் பாட்டாளிகள் உயிரைக் கொடுக்கச் சித்தமா யிருக்கிறார்கள்'' என்று ஆவேசத்துடன் சொன்னான் சிவராமன்.

''பாவம், பாட்டாளிகள். அவர்களிடமிருந்து வேறு எதை நீங்கள் பறிக்க முடியும்?''

''முரளி, உன்னிடம் ஒரு விஷயத்தைச் சொல்லத்தான் இன்று வந்தேன். பொதுவுடைமைக் கட்சியைத் தாக்கித் தலையங்கம் எழுதுவதை நிறுத்து.''

'''பாரதமணி' தன்னுடைய கொள்கையை அழுத்தமாக எப்போதும் கூறிக் கொண்டுதானிருக்கும். பொதுவுடைமைக் கட்சி இதனுடைய முதல் எதிரி.''

''கட்சி உன்மீது கோபமாக இருக்கிறது. சக்தி வாய்ந்த கட்சியைப் பகைத்துக் கொள்வது நல்லதில்லை'' என்று எச்சரித்தான் சிவராமன்.

''கட்சியை விட மனச்சாட்சி சக்தி வாய்ந்தது. சிவா, பொதுவுடைமைக் கட்சியில் சேர்ந்ததால் நீ அந்த அடிப்படை உண்மையைக் கூட மறந்துவிட்டாய் போலிருக்கிறது.... ரஷ்யாவையோ அல்லது சீனாவையோ தெய்வமாக வணங்கும் உன் கட்சிக்காரர்களிடம் வேறு எதை எதிர்பார்க்க முடியும்?'' என்றான் முரளி வெறுப்புடன்.

அறைக் கதவைத் திறந்து கொண்டு பிரேமா உள்ளே வந்து நின்றாள். அவளைக் கண்டதும், பேசுவதை நிறுத்தி விட்டு அவள் பக்கம் திரும்பினான், முரளி.

''சாரதா வந்திருக்கிறார்'' என்றாள் பிரேமா.

''வரச் சொல்லு'' என்றான் முரளி.

சிறிது நேரத்தில் உள்ளே நுழைந்த சாரதா, அந்த அறைக்குள் சிவராமனைக் கண்டதும் உற்சாகமடைந்தாள்.

''பாரதமணி உங்கள் மேடைப் பேச்சைத் தலையங்கத்திலேயே புகழ்ந்திருக்கிறது! கன்கிராஜுலேஷன்ஸ்'' என்றாள், அவனைப் பார்த்து. பிறகு, அவன் பக்கத்தில் கிடந்த நாற்காலியில் அமர்ந்தாள்.

''தலையங்கத்தின் கடைசிப் பகுதியைப் படிக்கவில்லையோ?'' என்று கேட்டான் சிவராமன்.

''படித்தேன்.... இவ்வளவு திறமையுள்ள இளைஞரின் சக்தியும் நேரமும் இந்தக் கட்சிக்கு விரயமாவதுதான் வருந்தவேண்டிய விஷயம் என்று கடைசியில் எழுதியிருப்பதைத்தானே கூறுகிறீர்கள்? அது ஆசிரியரின் தனிப்பட்ட அபிப்பிராயம்'' என்றாள் சாரதா. பிறகு முரளியின் பக்கம் திரும்பி, ''திபெத் பற்றிக் கோமாளி வரைந்திருக்கும் கார்ட்டூன் பிரமாதம். பக்கத்து வீட்டில் சீனா திருடுவதை இந்தியா சன்னல் வழியாகப் பார்த்துக் கொண்டு சும்மா உட்கார்ந்திருப்பதுபோல் கார்ட்டூன் போட்டிருப்பது மிகவும் பொருத்தம்'' என்றாள்.

''இந்தியாவால் வேறு என்ன செய்துவிட முடியும்?'' என்றான் சிவராமன்.

''அந்தத் தைரியத்தில் சீனா இப்படிக் கொள்ளைக்காரன் மாதிரி நடந்துகொள்கிறது. இதைத் தீவிரமாக எதிர்க்க வேண்டிய கடமை இந்தியாவுக்கு உண்டு. இதை இப்போது செய்யத் தவறிவிட்டால், இதே கதி நாளை நமக்கும் ஏற்படலாம்'' என்றான் முரளி.

''அப்போது இந்தியா கம்யூனிஸத்தைத் தழுவிக் கொண்டால் போகிறது'' என்று சிவராமன் அலட்சியமாகக் கூறிவிட்டு எழுந்தான். அவனைத் தொடர்ந்து சாரதாவும் எழுந்தாள்.

''நீயும் எங்கே எழுந்து விட்டாய் சாரதா?'' என்று கேட்டான் முரளி.

''உங்கள் காரை ரிப்பேர் பார்க்க மெக்கானிக் வந்தான். ரிப்பேர் பார்த்ததும் அதையே எடுத்துக் கொண்டு வந்தேன். கார் வாசலில் நிற்கிறது.''


''இரேன். உன் வீட்டில் உன்னைக் கொண்டு போய் விட்டு விடுகிறேன்.''

''இல்லை, எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கிறது'' என்று கூறிக் கொண்டே சிவராமனைத் தொடர்ந்து செல்லத் திரும்பினாள் சாரதா. மிகுந்த வியப்புடன்

உயர்ந்த-வேலைப்பாடு உன்னத செயலாக்கம்

புதிய மர்பி மாடல் டிஏஓ 911

ரேடியோ அமைப்பிலும், தொழில்
நுட்பத்திலும் நவீன முன்னேற்றத்தை
ஒருங்கே கொண்ட சிறப்பான
ஒலிநயமுள்ள 4-பாண்டு ரேடியோ



ரூ. 618·33*

*எக்ஸைஸ் தீர்வை உள்ளிட்டது. விற்பனை மற்றும் இதரவரிகள் தனி.


ஒவ்வொரு அங்குலத்திலும் ஒயிலான தோற்றமுடையது மர்பி மாடல் டிஏஓ 911. குறிப்பிட்ட ஒன்பது செயல்களை நிறைவேற்ற நான்கு பாண்டுகள் மற்றும் ஆறு வால்வுகள். சக்தி வாய்ந்த ஒலிபரப்பிற்கு இரு ஸ்பீக்கர்கள். பேச்சு, வாத்தியம் மற்றும் ஜாஸ் இவற்றின் இயற்கை ஒலியை சீராகப் பரப்ப 3-வழி டோன் செலக்டர். பாஃபில் முகப்பில் பொருத்தப்பட்டுள்ள அலங்கார விளக்குகள் ரேடியோ அல்லது கிராம் இயக்கத்தை தெளிவாக்குகின்றன.

ஒவ்வொரு அம்சத்திலும் ஈடு இணையற்றது. மர்பி மாடல் 911 அதன் செவிக்கினிய ஒலி நாதத்தை நேரில் கேட்டுக் களிப்படையுங்கள். உங்கள் அருகமைந்த மர்பி விற்பனையாளர் அதன் செயல் திறனை மகிழ்ச்சியுடன் இயக்கிக் காட்டுவார்.



மர்பி *இல்லத்தை மகிழ்விக்கிறது!*

MAS 581



"ஒவ்வொருத்தனும் பள்ளிக்கூடத்துக்கு இரண்டு இரண்டு பெட்டிகளைத் தூக்கிக்கிட்டுப் போறாங்களே எதுக்கு?"

"ஒண்ணிலே பாடப் புத்தகங்கள்; மற்றொன்றிலே பாடப் புத்தகங்களிலே செய்யப்பட வேண்டிய திருத்தங்கள்!"

முரளி நாற்காலியில் அமர்ந்தவாறே சாரதாவும் சிவராமனும் போவதைப் பார்த்துக் கொண்டிருந்தான். சாரதாவைக் கண்டதும் ஏற்பட்ட மகிழ்ச்சியும், உற்சாகமும் இப்போது மறைந்து விட்டன. நாற்காலியை விட்டு எழுந்து மாடி வராந்தாவுக்கு வந்தான். கீழே தெருவில் அவன் பார்வை ஓடியது. நடைபாதையில் சாரதாவும் சிவராமனும் சிரித்துப் பேசியபடியே பஸ் ஸ்டாப்பை நோக்கி நடந்து செல்வது தெரிந்தது. அவர்கள் மறையும்வரை வராந்தாவிலேயே நின்று கொண்டிருந்தான். பிறகு தன் அறைக்குள் வந்து நாற்காலியில் அமர்ந்தான். சாரதாவின் தலையிலிருந்து கிளம்பிப் பரவியிருந்த மல்லிகையின் மணம், அவள் சென்ற பிறகும் அவனைச் சுற்றி நிரம்பியிருந்தது. உள்ளத்தில் உற்சாகமில்லை. இனம் புரியாத ஒருவிதத் தவிப்பு சூழ்ந்து கொண்டது.

"நீ எங்கே போகிறாய்? வீட்டுக்குத் தானே?" என்று சிவராமன் கேட்டான்.

"நீங்கள்?" — சாரதா கேட்டாள்.

"நான் வீட்டுக்குப் போகிறேன்.... அம்மா நேற்றுக்கூட உன்னைப் பற்றிக் கேட்டாள்."

"என்ன சொன்னாள்?"

" 'காணவே யில்லையே' என்றாள்."

"நானும் உங்களோடு வரட்டுமா?" கேட்டுவிட்டு ஆவலோடு அவனைப் பார்த்தாள் சாரதா.

"ஓ... வாயேன்."

இருவரும் பஸ் ஸ்டாப்பை நோக்கி நடந்தார்கள். பஸ் வரவில்லை. இருவரும் காத்திருந்தனர்.

"முரளி உங்களைப் புகழ்ந்து 'பாரதமணி'யில் எழுதியிருப்பது ஆச்சர்யம் தான்!" என்றாள் சாரதா.

"எல்லாம் சரிதான். ஆனால் கட்சியை அவன் தாக்கி எழுதுவதுதான் பிடிக்கவில்லை" என்றான் சிவராமன், மிகுந்த வருத்தத்துடன்.

"உங்கள் கட்சிதான் மிகுந்த பலமும் செல்வாக்கும் பெற்று விட்டதே! எதற்காகப் 'பாரதமணி'ப் பத்திரிகையைப் பற்றிக் கவலைப்படுகிறீர்கள்?"

"விற்பனை எண்ணிக்கையில் அது உயராமல் இருக்கலாம். ஆனால் 'பாரதமணி'க்கு நிரம்பச் செல்வாக்கு உண்டு. அதைப் பற்றித்தான் எங்கள் கவலையெல்லாம்" என்றான் சிவராமன்.

பஸ் வரவே, இருவரும் அதில் ஏறிச் சிவராமனின் வீட்டுக்குப் பக்கத்தில் இறங்கினார்கள். சாரதாவைக் கண்டதும் சிவராமனின் தாயார் பட்டம்மாள் மிகுந்த உற்சாகத்துடன் வரவேற்றாள். ஏற்கனவே சிவராமனுக்காக இலை போட்டிருந்தாள். சாரதாவைக் கண்டதும் எதிரில் இன்னொரு இலையைப் போட்டாள். சாரதாவும் மறுக்காமல் சாப்பிட உட்கார்ந்தாள். இருவருக்கும் பட்டம்மாள் பரிமாறினாள். அவளுக்கு மனத்தில் ஒரே பரபரப்பு. மகனையும் சாரதாவையும் பக்கத்தில் இருத்தி, பரிமாறிக்கொண்டே ரசித்தாள்.

"நானும் நேற்றுக் கூட்டத்துக்கு வந்திருந்தேன்" என்றாள் சாரதா.

"முரளி சொன்னான்" என்றான் சிவராமன்.

"அவ்வளவு அருமையாகப் பேசுவீர்களென்று எதிர்பார்க்கவேயில்லை."

"எல்லாம் தலைவர் வேதமூர்த்தியின் முயற்சிதான்."

"இன்னும் கொஞ்ச நாட்களில் உங்கள் தலைவரையே மிஞ்சிவிடுவீர்கள்" என்று கூறிக்கொண்டே தலையைச் சாய்த்து அழகாக அவனைப் பார்த்தாள். அவனோ எதையும் கவனிக்காமல் இலையிலிருந்தவற்றைக் காலி செய்து கொண்டிருந்தான்.

"என்னமோம்மா! கட்சியாம், கூட்டமாம். சரியான சாப்பாடு கிடையாது, நேரத்துக்கு வீட்டுக்கு வருவது கிடையாது. இந்தக் கிழட்டுக் கட்டை ஒன்று இருக்கிறது என்கிற நினைவே இவனுக்கு இல்லை. ராத்திரி ஒரு மணிக்கு, இரண்டு மணிக்கு வீட்டுக்கு வருகிறான். சாரதா, நீயாவது ஒரு வார்த்தை சொல்லக் கூடாதா?" என்று கூறி அங்கலாய்த்தாள் பட்டம்மாள். (தொடரும்)



ஒரு நாள் கூத்து!





அடையாறு கஸ்தூரிபா நகர் கல்யாண மண்டப அரங்கு. வாசலில் ஒரு மனிதர் கவலையுடன் நின்று கொண்டிருந்தார்.

''ஸார்! 'ஒரு நாள் கூத்து' நாடகம் இங்குதானே? நாடகம் ஆரம்பமாகிற அறிகுறியே காணவில்லையே?'' என்று கேட்டோம்.

''ஸார்! மன்னிச்சுக்கணும். அந்தக் கூத்தை ஏன் கேட்கிறீர்கள்? நாடகத் தயாரிப்பாளர் சைக்கிளில் போய்க் கொண்டிருக்கும் போது டாக்ஸி மோதிவிட்டது! நாமொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கிறது! நாடகத்தை ஒத்தி வைத்துவிட்டோம்!'' என்றார் நாடகக் குழுவைச் சேர்ந்தவர்.

நாடோடி வீட்டில் அவர், ''ஒரு நாள் கூத்தின் ஆரம்பத்தில் இப்படியே ஆக்ஸிடெண்டு வர்றது! எனக்கும் ஆக்ஸிடெண்ட்!'' என்று சிரிக்கிறார், தலைக் கட்டுகளுடன் படுத்திருந்தபடி.


''நீங்க அதிகம் பேசக் கூடாதுன்னு டாக்டர் சொல்லியிருக்கிறார்!'' என்று எச்சரிக்கிறாள் மனைவி சரசு.

இப்படியாக ஆரம்பித்த ஒருநாள் கூத்து 'ஸபைய'ரில் அரங்கேறுவதாய் இருந்து, அதுவும் தள்ளிப் போடப்பட்டுக் கடைசியில் மியூசியம் தியேட்டரில் ஒரு வழியாக அரங்கேறியே விட்டது!

சிவசாமிக்கு ஒரு மனப் பிரமை. அது ஒரு விபத்தின் விளைவாக 'ஏற்பட்டது. சதா, ஒரு நண்பன், முரளி என்று பெயர் கொண்டவன் தம்முடன் இருப்பதாக எண்ணிக்கொள்கிறார். அவனுடன் பேசுகிறார்; ஆலோசனைகள் பெறுகிறார். சிவசாமி குடும்பத்தினர் குடும்ப டாக்டர் வைத்தியநாதன் உதவியோடு சிவசாமியின் மனப் பிரமையை மறைக்கப் பார்க்கின்றனர். மாப்பிள்ளை ராதாகிருஷ்ணன் ஐ.ஏ.எஸ். உண்மை நிலவரத்தை அறிய வருகிறான். அவன் மாமாவும் வரதட்சிணையை அதிகப்படுத்தி நோட்டம் விடுகிறார். பத்து லட்சம் ரூபாய் தஸ்தாவேஜுகள் அடங்கிய பை காணாமல் போய் முரளியாலேயே கிடைக்கிறது! கல்யாணமும் நடக்கும் என்று ஊர்ஜிதமாகிறது. ஆனால் சிவசாமி அந்த நண்பன் முரளி யார் என்ற மனப் பிரமையிலே இன்னும் அல்லாடுகிறார்.



பணத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட இந்த நாடகத்திலே எடிட்டர் சிவசாமியாக வரும் சந்திரபானுவும் அவரது மனைவி லக்ஷ்மியாக நடிக்கும் சிவகாமியும் நாடகத்துக்கு உயிரூட்டுகிறார்கள். பட்டாசு வெடிப்பது போல் ஹாஸ்ய வெடிகளை உதிர்க்கிறான் மாணவனாக வரும் ராம்லே. டாக்டர் வைத்தியநாதனாக வரும் திரு நாராயணசாமி தமது இயல்பான நடிப்பினால் கவர்கிறார். வக்கீல் 'எலே, எலே!' என்று மாப்பிள்ளைப் பையனை விளிப்பதிலிருந்துஅரசமான்யம் வரை அடித்து முழக்குகிறார்!



நாடோடியின் பத்திரிகை அநுபவம், ஸடையர் எல்லாம் 'ஒரு நாள் கூத்தில்' இடம் பெற்றிருக்கின்றன. இழுத்துப் பறிக்காமல் கச்சிதப்படுத்தினால் நாடகம்இன்னும் சோபிக்கும். ●

காணக் கிடைக்காத தங்கம்

அத்தியாயம் இருபத்தொன்று

அந்தப் படத்தைப்பார்த்து அதிர்ச்சியடைந்து விட்டான் அருணகிரி. பீதியால் அவன் உடல் கிடுகிடுத்தது. வியர்வை ஆறாகப் பெருகியது.

'இது எப்படி இந்த மனிதரிடம் வந்தது? நிர்மலாதான் இதைக் கொடுத்திருப்பாளா? அல்லது அவளுக்குத் தெரியாமலே இவரிடம் சிக்கிக் கொண்டு விட்டதா? இதிலிருந்து என்னை இவர் ஏதேனும் தவறாக ஊகித்து... தன் மனைவியின் மீது சந்தேகப்பட்டு...ஐயோ!... இப்போது என்ன செய்வது?'

எழுந்து ஓடிவிடலாமா என்று எண்ணி அங்குமிங்கும் திருதிருவெனப் பார்த்தான் அருணகிரி.

''என் மிஸ்டர் அருணகிரி! இதிலுள்ள படங்களும் குறிப்புகளும் நீங்கள் வரைந்து தயாரித்தவைதாமே?'' என்று சற்றே வியப்புக் கலந்த குரலில் கேட்டார் சிவலிங்கம்.

வாய் திறக்கச் சக்தியிழந்த நிலையில் நடுங்கிக் கொண்டிருந்த அருணகிரி தலை குனிந்தபடி, ''ஆமாம், சார்!'' என்று குழறினான்.

''என்னால் முதலில் இதை நம்பவே முடியவில்லை...''

பீதியுடன் அவரை நிமிர்ந்து பார்த்தான் அருணகிரி.

''அப்புறம் என் மனைவி உறுதியாகச் சொன்ன பிறகுதான் நம்பினேன். உங்களைப் பற்றி அவள் என்னிடம் நிறையச் சொல்லியிருக்கிறாள். என் மனைவியை உங்களுக்கு நினைவிருக்கும் என்று நினைக்கிறேன். பெங்களூர் இஞ்சினியர் ராமச்சந்திரனின் மகள் நிர்மலா...'' என்று கூறி மெல்லச் சிரித்தார் சிவலிங்கம்.

''தெரியும் சார்! அவங்க வீட்டிலே தான் என் அக்கா...''

''ஆமாம்'' என்று தலையாட்டிக் கொண்டார் சிவலிங்கம். ''சரி; இப்போது உங்களை இங்கே வரவழைத்த விஷயத்துக்கு வருகிறேன்.''

இலேசாகத் தொண்டையைக் கனைத்துக்கொண்டு தம் உத்தியோக மிடுக்குடன் கம்பீரமான குரலில் மீண்டும் அவரே கேட்டார்: ''இந்த வரைபடக் குறிப்பிலே உள்ள 'ட்ரை சைக்கிளை'ப் போல் வர்த்தக ரீதியில் உற்பத்தி செய்ய உங்களால் இயலுமா?''

அவருடைய இந்தக் கேள்வியை முதலில் புரிந்து கொள்ளவே முடியாமல் விழித்த அருணகிரி சற்றைக்குப் பின் ஒருவாறு புரிந்து கொண்டான். மெல்ல அவரைப் பார்த்து அச்சக் குழைவோடு, ''வாய்ப்பும் வசதிகளும் கிடைத்தால் செய்வேன் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது சார்!'' என்றான் தணிவும் பணிவுமான குரலில்.

''மெத்த மகிழ்ச்சி!... ம்... சிறிய அளவில் சிக்கனமாக இந்தத் தொழிலைத் தொடங்குவதற்கு ஆரம்ப மூலதனம் எவ்வளவு தேவைப்படும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?''

''மன்னிக்க வேண்டும் சார்! இந்த விவரம் பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. ஏனென்றால்...''

சிரித்துக்கொண்டே சிவலிங்கம் குறுக்கிட்டுச் சொன்னார்: ''அதாவது, தொழிலுக்கான இயந்திர சாதனங்கள் உப கருவிகள், மூலப் பொருள்கள், வெளியில் வாங்கிக் கொள்ள வேண்டிய தனி உறுப்புக்கள் முதலானவற்றின் விலை விவரங்களும், தொழிற்கூட அமைப்பு, நிர்வாகம் ஆகியவற்றுக்கான செலவு விவரங்களும் உங்களுக்குத் தெரியாது என்கிறீர்கள், இல்லையா? வாஸ்தவம்! இவை பற்றி நானே ஓர் உத்தேச மதிப்பீடு போட்டுப் பார்த்தேன். குறைந்த பட்சம் சுமார் இருபது அல்லது இருபத்திரண்டு ஆயிரம் ரூபாய் மூலதனம் தேவைப்படலாம் என்று தோன்றுகிறது...''

ஆயிரம் என்ற சொல்லைக் காதால் கேட்டபோதே அருணகிரிக்குத் தலை சுற்றுவது போல் ஆகியது. இவ்வளவு பெரிய விஷயம் பற்றி இவர் ஏன் என்னிடம் வீணாகப் பேசிக் கொண்டிருக்கிறார் என்றும் அவன் எண்ணிப் பெரிதும் குழம்பினான்.

''சரி; மேற்சொன்ன அளவில் மூலதனம் தேவைப்படும் ஒரு சிறு தொழிலுக்கு—அதில் கால் பங்கு மூலதனத்தை முன்னதாக முதலீடு செய்து தொழிலைத் தொடங்குவோருக்கு எங்கள் நிறுவனம் கடனாக நிதி உதவி அளிக்கும் என்ற விவரம் உங்களுக்குத் தெரியுமா?''

''கேள்விப் பட்டிருக்கிறேன் சார்! பத்திரிகைகளில் விளம்பரமும் பார்த்திருக்கிறேன்.''

ஜெகசிற்பியன்



''ஆமாம். அந்த வகையில் நீங்கள் ஏன் இந்த மூன்று சக்கர விளையாட்டுச் சைக்கிள் உற்பத்தித் தொழில் ஒன்றை ஆரம்பித்து நடத்தக்கூடாது?''
''அதாவது?...''
''நீங்கள் ஐயாயிரம் ரூபாய் முதலீடு செய்து இந்தத் தொழிலே ஆரம்பிக்கலாமே என்கிறேன்!''
அருணகிரி இதைக் கேட்டுத் தன்னையும் மறந்து கலகலவெனச் சிரித்தான்.

''என்ன, சிரிக்கிறீர்கள்?'' என்று சிவலிங்கமும் சிரித்துக் கொண்டே கேட்டார்.

''ஐந்து பைசாவுக்குக் கூட வக்கில்லாத ஒருவனை ஐயாயிரம் ரூபாய் முதலீடு செய்ய முடியுமா என்று கேட்டால், சிரிக்காமல் வேறு என்ன சார் செய்வான்?'' என்று பணிவுக் குழைவுடன் பதிலிறுத்தான் அருணகிரி.

''நியாயமான கேள்விதான். ஆனால் அப்படிக் கேட்டவருக்கு அது தெரியாது என்று நினைக்கிறீர்கள்?''

உடம்பை நெளித்துக் கொண்ட அருணகிரி, ''அவசரப்பட்டதற்கு மன்னியுங்கள் சார்!'' என்றான் மெல்லிய குரலில்.

கனிவுடன் புன்னகை பூத்த சிவலிங்கம் தொண்டையைக் கமகப்படுத்திக்கொண்டு சொன்னார்: ''இதோ பாருங்கள், மிஸ்டர் அருணகிரி! உங்களைப் பற்றியும் உங்கள் குடும்ப நிலவரம் பற்றியும் நான் நன்கு அறிவேன். எல்லாம் என் மனைவி விவரமாகச் சொல்லியிருக்கிறாள். அவளும் நானும் தீர ஆலோசித்து ஒரு முடிவுக்கு வந்திருக்கிறோம். அதாவது, நாங்கள் உங்களுக்கு ரூபாய் ஐயாயிரம் கடனாகக் கொடுப்பது என்று தீர்மானித்திருக்கிறோம். அந்தத் தொகையை மூலதனமாக வைத்து நீங்கள் இந்த மூன்று சக்கர விளையாட்டுச் சைக்கிள் உற்பத்தித் தொழிற்கூடம் ஒன்றை ஆரம்பிக்கலாம். ஆரம்பித்த பின் மேற்கொண்டு தேவைப்படும் மூலதனத் தொகைக்கு இந்த நிறுவனத்திடம் விண்ணப்பித்துக் கொண்டால் பகுதி பகுதியாக நிதி வசதி பெறலாம். உற்பத்தி தொடங்கி, பொருள்கள் வர்த்தகரீதியில் விநியோகமாகும்போது இங்கே வாங்கிய கடனை அதற்குரிய சிறு வட்டி விகிதத்துடன் தவணை முறையில் செலுத்திவிடலாம்.''

இவ்வாறு கூறிய சிவலிங்கம், ''பிறகு எங்களிடம் வாங்கிய கடன் தொகையை மட்டும் வட்டி இல்லாமலே உங்கள் சௌகரியம் போல் கொஞ்சம் கொஞ்சமாகத் திருப்பித் தரலாம். ஆனால் திருப்பித் தந்துவிட வேண்டும்'' என்று சொல்லி மெல்லச் சிரித்துவிட்டு மேலும் தொடர்ந்தார்:

''மிஸ்டர் அருணகிரி! மூலதனஉதவி கிடைத்தாலும் இவ்வளவு பெரிய காரியத்தை எப்படித் தனியே தொடங்கி நடத்துவது என்று நீங்கள் பிரமிப்படைகிறீர்கள் இல்லையா? அந்தக் கவலை வேண்டாம். இந்தத் துறைக்குரிய தொழில் பயிற்சியும் ஓரளவு அநுபவமும் வாய்ந்த ஓர் இளைஞரை நான் சிபாரிசு செய்கிறேன், அவரை நீங்கள் உதவி நிர்வாகியாக மாதச் சம்பளத்துக்கு வைத்துக் கொள்ளலாம். என்ன சொல்லுகிறீர்கள்?'' என்று கேட்டுக் கொண்டே தம் தோல் பையைத் திறந்து செக் புத்தகத்தை எடுத்து, அருணகிரியின் பெயரில் ஐயாயிரம் ரூபாய்க்கு ஒரு செக் எழுதினார். ஆனால் அந்தக் காசோலையில் அவர் தம் கையெழுத்தை இடவில்லை. ஏற்கனவே அதில் கையெழுத்து இடப்பட்டுவிட்டிருந்தது. அது நிர்மலாவின் கையெழுத்து!

காசோலையை வெட்டி எடுத்துக் கையில் மடித்து வைத்துக் கொண்டு அவனைப் பரிவுடன் பார்த்த சிவலிங்கம், ''மிஸ்டர் அருணகிரி!'' என விளித்துவிட்டுத் தம் சுழல் நாற்காலியைப் பக்கவாட்டில் திருப்பிப் பார்வையை வேறு பக்கம் செலுத்தியவாறு சொன்னார்: ''என் பதவிக்குரிய அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்து உங்களுக்குத் தனிப்பட்ட முறையில் பட்சபாதத்துடன் சலுகை காட்டுகிறேன் என்றோ, அல்லது இதற்கு ஏதேனும் அந்தரங்க நோக்கம் இருக்குமென்றோ நீங்கள் கடுகளவும் நினைத்துவிடக் கூடாது என்று உங்களை முன்கூட்டியே எச்சரிக்க விரும்புகிறேன்!...நான் பல அன்னிய நாடுகளுக்குச் சென்று வந்தவன். ஒரு தேசம் சுபிட்சமடைய அடிப்படைக் காரியங்களாக என்னென்ன செய்ய வேண்டும் என்பனவற்றையெல்லாம் ஓரளவு தெரிந்து கொண்டிருப்பவன். தொழில் வளமே ஒரு தேசத்தின் செல்வச் செழிப்புக்கு மூலநாதம் என்பதை நாம் அனைவருமே அறிவோம். அறிந்து என்ன பயன்? சுதந்திரத்துக்குப் பிறகு நம் நாட்டில் பல பெரும் தொழிற்சாலைகள் உருவாகியிருக்கின்றன என்பது உண்மைதான். ஆனாலும் நாம் எதிர்பார்த்த அளவு அவற்றால் வளம் கிட்டவில்லையே ஏன்? இதற்குப் பலப்பல காரணங்கள் சொல்லலாம். ஆனால் அவற்றில் முக்கியமானது ஒன்றுண்டு. பெரிய பெரிய தொழிற்சாலைகளால்மட்டும் ஒரு தேசத்தை வளப்படுத்திவிட முடியாது. அவை தொழிற் சங்கங்களையும் தொழிலாளர் தலைவர்களையும்தான் உற்பத்தி பண்ணும். இப்பொழுது இது தான் நடந்து கொண்டிருக்கிறது. இப்படிக்கின்றி ஒரு பெரிய தொழிற்சாலை தோன்றினால் அதை அடுத்துக் குறைந்த பட்சம் ஒரு நூறு சிறு தொழிற்பட்டறைகளாவது தோன்ற வேண்டும். அப்போதுதான் மனித சக்தியும், தேசத்தின் மூலப் பொருள்களும் வீணாக்கப்படாமல் இருப்பதன்றி ஒரு சீரான

தொழில் வளர்ச்சியும், அதனுல் செல்வச் செழிப்பும் காண இயலும்.''

சில விநாடிகள் பேச்சை நிறுத்திவிட்டுச் சிந்தனையில் ஆழ்ந்த சிவலிங்கம் சட்டென்று நிமிர்ந்து சொன்னுர்: ''ஆமாம்; அதை எப்படிச் சாத்தியப் படுத்துவது? முறையான கல்வியும், பயிற்சியும் இல்லாது போனுலும் கூடச் சிலரிடம் இயற்கையாகவே விஞ்ஞான அறிவும், இயந்திரத் தொழில் நுட்பத் திறனும் மிகுந்திருப்பதை நாம் பார்க்கிறோம். இது இயற்கையின் திருவிளையாடல். இதற்குக் காரணம் கண்டுபிடிக்க நம்மால் முடியாது. அது அவசியமும் இல்லை. அப்படிப்பட்டவர்களைத் தேடிப் பிடித்து அவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பதானது நான் முன் சொன்ன லட்சியத்தை அடையும் பல மார்க்கங்களில் முக்கியமான ஒன்று என்பதே நான் இங்கு சொல்ல விரும்புவது. மேலை நாடுகளில் இதற்குப் பெருமளவு மதிப்பு அளிக்கப்படுகிறது. நடைமுறையிலும் செயல்படுத்தப் படுகிறது. நம் நாட்டிலோ இவ்விஷயம் கவனிக்கப்படாதது மட்டுமல்ல, அறவே அலட்சியப்படுத்தவும் படுகிறது. மேடைப் பேச்சிலேயே தொழிற் புரட்சியும், செல்வ வளமும் கண்டு சோஷலிஸ சமுதாயத்தை உருவாக்கிவிடலாம் என்று இங்கே கனவு காணப்படுகிறது. இப்படி இருந்தால், அந்தக் கனவு கனவாகவேதான் இருக்கும். எக்காலத்திலும் நனவாகாது. எனவேதான் சின்னஞ் சிறு மனிதனுன நான் என்னளவில் அந்த மகத்தான லட்சியத்துக்கு உரிய வகையிலே எனது கடமையை ஆற்றவேண்டும் என்று எண்ணி உங்களுக்கு இந்த உதவியைச் செய்ய முன்வந்தேன். மற்றபடி உங்களை இரட்சித்துக் கைதூக்கி விடுவதன் மூலம் என்னைப் பெரிய தர்மகர்த்தாவாக ஆக்கிக்கொள்ள வேண்டும் என்ற நோக்கில் இவ்வாறு செய்ய வரவில்லை.''

சிவலிங்கம் திடீரென்று கலகலவெனச் சிரித்தார். ''எல்லாம் சரி; உங்களுக்கு நான் உதவ முன் வந்தது பற்றி இவ்வளவு நேரம் இவ்வளவு விஸ்தாரமாகச் சொன்னேன். ஆனுல் என் மனைவி உங்கள் விஷயத்தில் அந்த அளவு அக்கறை காட்டி உதவவும், என்னை உங்களுக்கு உதவும்படி வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளவும் முன்வந்த காரணம் என்ன, நோக்கம் எப்படி என்று நீங்கள் நினைக்கலாம் அல்லவா?'' என்ருர் சிரித்துக்கொண்டே.



டான்ஸ் மாஸ்டர்: இப்பவாவது உடம்பு முழுதும் குலுக்காமல் ஆட்டம் போடு, பார்க்கலாம்!''

இவ்வளவு நேரம் பனியில் நனைந்த கோழிக் குஞ்சு போல் ஒண்டி ஒடுங்கி உட்கார்ந்திருந்த அருணகிரி இதைக் கேட்டு உள்ளூறத் திகிலும் வெடவெடப்பும் அடைந்தவனுய் அவரைப் பரபரப்புடன் ஏறிட்டுப் பார்த்தான்.

''ஆனுல், நண்பரே! அந்தக் காரணத்தை நான் இப்போது சொல்ல மாட்டேன். ஒரு நல்ல சந்தர்ப்பத்தில் அவளே அதை என் முன்னிலையில் உங்களிடம் சொல்வாள்...'' என்று புன்னகையுடன் கூறிக் கொண்டே தம் கையிலிருந்த காசோலையை அவனிடம் நீட்டினுர் சிவலிங்கம். ''நாளையே உங்கள் தொழிற்கூடத்துக்கான லைசென்சுக்கு விண்ணப்பித்துவிட்டுக் காரியத்தில் இறங்குங்கள். அவ்வப்போது தேவைப்படும் யோசனைகளையும் வழி வகைகளையும் நீங்கள் எந்த நேரத்திலும் என்னிடம் வந்து கேட்டுப் பெறலாம். இறைவன் உங்களிடமுள்ள நேர்மைக்கும், உண்மைக்கும் உழைப்புக்கும் ஒழுக்கத்துக்கும் நற்பலன் அளித்தே தீருவார்.''

இரண்டு கைகளையும் குவித்தபடி கூனிக் குறுகி எழுந்து நின்ற அருணகிரி அவர் கொடுத்த செக்கை வாங்கிக் கொண்டான். நன்றிப் பெருக்கால் அவன் கண்கள் நீரை உகுத்தன.

சிவலிங்கம் அவனைத் தட்டிக் கொடுத்துக் கை குலுக்கி விடையளித்து அனுப்பினுர்.

• • •

ஆறு மாதங்கள் ஓடி மறைந்தன. 'கனகா தொழிற்கூடம்' என்னும் பெயரில் அருணகிரியின் தொழிற்சாலை உருவாகி உற்பத்தியிலும் ஈடுபட்டுவிட்டது. அவனுல் புதிதாக வடிவமைக்கப்பட்ட மூன்று சக்கர விளையாட்டுச் சைக்கிள் வண்டி இன்னும் ஒரு மாத காலத்துக்குள் முழு உருவம் பெற்று விற்பனைக்கு வந்து விடும்.

அப்படி உருவாகும் முதல் சைக்கிள் வண்டியைத் தானே எடுத்துப் போய்ச் சிவலிங்கம் — நிர்மலா தம்பதிக்கு அன்பளிப்பாக அளிக்க வேண்டும் என்றும்



கௌரி – வெங்கட்டராமன்

காசி டாக்டர் பி. ரங்கசாமி அய்யர் புத்திரி சௌ. **கௌரி** B. Sc.,க்கும், ஜெய்ப்பூர், லால்பகதூர் சாஸ்திரி காலேஜில் ப்ரின்ஸிபாலாகப் பணியாற்றும் ஸ்ரீ ஜி. மகேஸ்வரநாதன் அவர்களின் புதல்வர் சிரஞ்சீவி **வெங்கட்டராமன்** B. Sc., க்கும் அண்மையில் 'ஹனுமான்காட்' காசியில் விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது. வாழ்க மணமக்கள்!

திட்டமிட்டுக் கொண்டிருந்தான் அருணகிரி. நிர்மலாவுக்கு இப்போது ஒன்றரை வயதில் ஓர் ஆண் குழந்தை உள்ளது என்று சிவலிங்கம் வாயிலாக அவன் தெரிந்து வைத்திருந்தான்.

நூற்றைம்பது ரூபாய் வாடகையில் தனி வீடு எடுத்து அதில் தன் தாயோடு குடியிருந்து வந்தான்.

அவனுடைய திடீர் முன்னேற்றத்தைக் கண்டு திக்குமுக்காடிப் போன மாமா கண்ணுசாமியும், அத்தை ரஞ்சிதம்மாளும் அடிக்கடி சொர்ணத்தம்மாளைப் பார்க்க வரத் தொடங்கினர். பிள்ளையாண்டானின் புத்தி சாதுரியத்தையும் குண நலன்களையும் பேச்சுக்குப் பேச்சு போற்றிப் புகழ்ந்தனர். வியந்து வாயூறிப் போயினர். அவர்கள் வரும்போதெல்லாம் அருணகிரிக்கெனச் சுவையான பலகாரங்கள் தயாரித்து எடுத்து வந்தனர். மாமா கண்ணுசாமி டஜன் கணக்கில் கோழி முட்டை கொண்டு வருவார். அருணகிரி ரொம்பவும் மெலிந்து இருக்கிறானாம். அதனால் அவன் தினமும் ஒரு முட்டை குடிக்க வேண்டுமாம் — ரொம்பக் கரிசனத்தோடு இந்தப் புத்திமதிகளைச் சொல்வார் அவர்.

அப்புறம் அவர்கள் தன் மூத்த மகள் பிரேமாவையும் தம்மோடு அழைத்து வரலாயினர். தினத்துக்கு ஓர் அலங்காரத்துடன் அவள் வந்து போய்க் கொண்டிருந்தாள். ஸ்கூல் ஃபைனலில் தேறிய அவளை மேலே படிக்க வைக்கவில்லை. வீட்டோடுதான் இருந்தாள்.

கண்ணுசாமியும் ரஞ்சிதத்தம்மாளும் தம் பெண்ணை இங்கு அழைத்து வருவதற்கான உள்நோக்கத்தைச் சொர்ணத்தம்மாள் வெகு சீக்கிரமே புரிந்து கொண்டு விட்டாள். ஆனால் அந்த 'நோக்கம்' பற்றி அவள் இப்போதைக்கு எவ்வித அபிப்பிராயத்தையும் தன்னுள் உருவாக்கிக் கொள்ளவில்லை. 'இருக்கட்டும், பார்க்கலாம்' என்ற போக்கில் அவள் இருந்து வந்தாள்.

அருணகிரி ஒரு தொழிற்கூடத்துக்கு முதலாளியாகி யிருந்தானே தவிர தன்னை அந்தத் தொழிற் கூடத்தில் முழு நேரம் உழைக்கும் ஒரு தொழிலாளியாகவே பாவித்து உழைத்து வந்தான். அதனால் அவனது நடை உடை பாவனைகளில் எவ்வித மாற்றமும் ஏற்படாதது மட்டுமின்றி, மதியவேளைகளில் தன் வீட்டுக்கு நடந்து போய்ச் சாப்பிட்டு வருவதை இன்னமும் விடாமலே இருந்தான்.

'ஒரு பழைய சைக்கிளாவது வாங்கிக் கொள்ளலாமே' என்று பலரும் அவனுக்கு யோசனை சொன்னார்கள். 'முதலில் உங்களுடைய பிள்ளைகளுக்குக் குறைந்த விலையில் என்னுடைய மூன்று சக்கர விளையாட்டுச் சைக்கிள் கிடைக்கட்டும்; பிறகு எனக்கென்று ஓர் இரண்டு சக்கரச் சைக்கிளை வாங்கிக் கொள்கிறேன்' என்று தமாஷாகச் சொல்லித் தட்டிக் கழித்து வந்தான்.

ஆனால் வேலைகளும் பொறுப்புக்களும் நாளுக்கு நாள் மிகுதியாகவே வீட்டுக்குச் சாப்பிடப் போவதென்பது அவனுக்குச் சிரம சாத்தியமாகி விட்டது. அதனால் சில தினங்களில் ஹோட்டலிலிருந்து டிபன்—காப்பி வாங்கி வரச் செய்து சாப்பிட்டு விட்டு அலுவல்களைக் கவனிக்க வேண்டியவனானான்.

தன் தொழிலகத்தில் வேலை செய்யும் யாராவது ஒரு தொழிலாளியைத் தினமும் வீட்டுக்கு அனுப்பி மதியச் சாப்பாடு எடுத்து வருமாறு அவன் உத்தரவிடலாம். ஆனால் அப்படிச் செய்யவில்லை. காரணம், பெங்களூர் ஏழுமலை இதே போன்ற காரியங்களுக்குத் தன்னை ஏவியபொழுதெல்லாம் தான் எத்தகைய மனவேதனை அடைந்தோம் என்பது அவனுக்கு இன்னமும் நன்றாக நினைவு இருந்தது!

சொர்ணத்தம்மாளுக்கோ இப்போது இதுதான் பெரிய கவலை. 'நாளெல்லாம் ஓய்வு ஒழிச்சலின்றிக் கடினமாக உழைக்கும் பிள்ளை, மத்தியானம் ஒரு வேளையாவது நல்ல சாப்பாடு சாப்பிடாவிட்டால் உடம்பு என்னத்துக்கு ஆகும்? திடீரென்று அவன் இரண்டு நாட்கள் படுத்து விட்டால் அதுவே பெரிய வழக்கலானும் ஆகிவிடலாம் அல்லவா?'

ஒரு நாள் இரவு பத்து மணி வாக்கில் வீடு வந்து சேர்ந்த அருணகிரியிடம் இது பற்றிப் பேசினான் அவள். அவனுக்கு மதிய உணவு அனுப்ப ஓர் ஆளை அமர்த்திவிடப் போவதாகச் சொன்னாள். இல்லையானால் நாளை முதல் தானே எடுத்து வரத் தீர்மானித்திருப்பதாகவும் பயமுறுத்தினாள் அவள். அவன் சிரித்துக் கொண்டே, முதலில் சொன்ன யோசனைக்கு அனுமதி கொடுத்து விட்டான்.

அடுத்த நாள் நண்பகல் ஒரு மணி. மதிய ஓய்வுக்கெனத் தொழிற்கூடம் சாத்தப்பட்டது. அருணகிரி தன் ஆபீஸ் அறையில் அமர்ந்து எழுத்து வேலையில் மூழ்கியிருந்தான்.

ஆபீஸ் பையன் ஓர் எவர் சில்வர் கேரியரை உள்ளே கொண்டு வந்து வைத்து, ''வீட்டிலே யிருந்து சாப்பாட்டு எடுப்புக்காரி இதை எடுத்து வந்துச்சு சார்!'' என்று சொல்லிவிட்டுப் போனான். **(அடுத்த இதழில் முடியும்)**



அட்டைப்படக் கதை

உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த ஜெயின்புரியில் 6 - 1 - 1932 ல் பிறந்த திரு கமலேஷ்வர் அலகாபாத் சர்வகலாசாலையின் எம். ஏ. பட்டதாரி. மூன்று ஆண்டுகள் அகில இந்திய ரேடியோ டெலிவிஷன் துறையில் பணியாற்றியவர். பல பத்திரிகைகளின் ஆசிரியராக அநுபவம் பெற்ற இவர் இப்போது 'சாரிகா' என்னும் ஹிந்தி பத்திரிகையின் ஆசிரியர். ஐந்து நாவல்கள், ஐந்து சிறுகதைத் தொகுப்புகள், இரு நாடகங்கள் எழுதிப் புகழ்பெற்றுள்ள திரு கமலேஷ்வர் சிறந்த இலக்கிய விமரிசகரும்கூட.



ஹிந்தி


கமலேஷ்வர்

தொலைவிலிருந்தே அந்த நீல ஏரி தெரியத் தொடங்குகிறது. சமதளமான மைதானங்களின் ஓரத்தில், மரக் கூட்டங்களுக்குப் பின்னால், பூமி ஒரேயடியாகச் சரிந்து வந்து அமைந்துள்ளது போலத் தோன்றுகிறது. ஆனால் நன்றாக உற்று நோக்கினால், உயரமான மரங்களுக்கிடையில் மிகவும் பெரிய கண்ணாடியொன்று மின்னுவதாகக் காட்சியளிக்கிறது.

இந்த ஏரியில் நீர்ப் பறவைகளை வேட்டையாட வந்த ஆங்கிலேயக் கலெக்டர் ஒருவர், ''இந்த ஏரிதான் எவ்வளவு அழகாக இருக்கிறது. தரையில் வைரம் பதித்தாற்போல! ஏரி வரை செல்வதற்கு நல்ல பாதை ஒன்று இருக்கவேண்டும்'' என்றார்.

இது நடந்து முப்பது ஆண்டுகள் ஆகிவிட்டன.

அப்பொழுது கிராமத்திலிருந்து ஏரிவரை பாதை போடுவதற்காக வந்திருந்த கூலியாட்கள் கூட்டத்தில் அவனும் வந்திருந்தான். அவன் ஆங்கிலேயக் கனவானின் மனைவியின் கண்களைப் பார்த்து, '' இந்த வெள்ளைக்காரிதான் எவ்வளவு அழகாக இருக்கிறாள்! இவளுடைய கண்களும் நீல ஏரியைப் போலவே அல்லவா தோன்றுகின்றன!'' என்றான்.



ஆழமான சரத் தரையில் மோட்டார் வண்டியின் சக்கரங்கள் அழுந்திச் சிக்கிக் கொள்ளவே அவன் எல்லோருக்கும் முன்பாக ஓடி, அந்த வெள்ளைக்காரி உட்கார்ந்திருந்த பக்கமாக நின்று காரைத் தள்ள முயன்றான். காரைத் தள்ளுகிற சாக்கில் பூப்போன்ற மென்மையான அந்த வெள்ளைக்காரியைத் தொட விழைந்தது அவன் மனம். ஆனால் தொடத்தான் துணிவு வரவில்லை. மற்றக் கூலியாட்கள் அவனுடைய அந்தக் கிறுக்குத்தனத்தைக் கண்டு மிகவும் சினங் கொண்டனர். அவனுக்குச் சரியான புத்தி புகட்ட வேண்டும் என்றும் எண்ணினர்.

இரவில் மரத்தின் அடியில், சுள்ளிகளைக் கொண்டு கூட்டடுப்பு எரிந்தபோது 'பஜ்னா' அக்குளிலிருந்து புகையிலைப் பையை எடுத்துக் கொண்டே, ''மேஸ்திரியிடம் சொல்லி, இந்தப் பயலை வெளியேற்ற வேண்டும். துரைசானிக்குத் தெரிந்துவிட்டால் தோல் உரிந்து போகும்!... இந்தப் பயல் காதலா பண்ணுறான்!'' என்றான்.

''பண்ணிட்டுப் போகட்டுமே, உனக்கு என்ன வந்தது?'' பசியால் வாடிய 'ஹோரி' விரைவாக ரொட்டியைத் தீயில்



வாட்டிக் கொண்டே பேச்சை முறிக்க எண்ணிக் கூறினன்.

"நம் எல்லாருடைய பிழைப்பிலும் மண் விழும்." நெருப்பைக் கிளறிக் கொண்டே மற்றொருவன் சொன்னன்.

அப்போது மற்றொரு மரத்தினடியிலிருந்து கனத்த குரலில் பாட்டொன்று கேட்டது :

"வெள்ளைக்காரியே, உன் விழிகள்
வெம்மை மிகச் செய்தனவே"

பித்தளைத் தட்டில் தாளம் ஒலித்தது: 'மித்துவா' குட்டிச்சாத்தான் போலக் கூத்தாடினன். ரொட்டி சுடும் தோழர்களின் சிரிப்பும், பாராட்டும் ஆரம்பித்தன. பரியாரும், எப்போதும் வாடிய கூலியாட்களு

கண்கள் மகிழ்ச்சியால் மின்னின. அந்த நேரத்துக்கு அவர்கள் தங்களுடைய உடல் வலியெல்லாம் மறந்திருந்தனர்.

அந்த நேரத்தில் ஒரு கொக்கு கடுங் குரல் எடுத்துக் கத்தியவாறு அவ்வழியே சென்றது. அதன் பெரிய இறக்கைகளின் அசைவிலிருந்து நெடுமூச்சு விடுவது போன்ற ஒலி வந்தது. அதனால் மஹேசாவின் கூத்து தடைப்பட்டு நின்றது.

"ஆடியது போதும். உட்கார்ந்து ரொட்டி சாப்பிடு!" என்றான் ஒன்றரைக் கண் மேஸ்திரி. தோழர்களுக்கு மேஸ்திரி மஹேசாவை இப்படிச் சொந்தம் கொண்டாடிப் பேசியது பிடிக்கவில்லை. 'பத்ரூ' மெதுவாகக் கூறினான்: "போக்கிரிப் பயல், மேஸ்திரியை மயக்கிக் கையில் போட்டுக் கொண்டு விட்டான். ஒன்றரைக் கண்ணனுக்குத்தான் பல தீய பழக்கங்கள் உண்டே! அதனால் மகிழ்ந்து போய்க் கிடக்கிறான்!"

கனத்த ரொட்டியும், வெந்த உளுந்தம் பருப்பும் மணம் வீசி எல்லாருடைய பசியையும் தூண்டி விட்டன. இரவு நெடு நேரம் வரை வம்பளந்து கொண்டே அவர்கள் உண்டனர். மெல்ல மெல்ல அடுப்புக்களில் நெருப்பு அவிந்து சாம்பலாயிற்று. மரங்களின் இருள் அடர்த்தியாயிற்று.

காலையில் வேலை தொடங்கியதும் உல்லாசப் பிரயாணிகளின் கூட்டமொன்று அங்கு வந்து நின்றது. அவர்களுள் சில இந்திய கனவான்களும், சில அழகிய பெண்களும் இருந்தனர். பெண்களின் தோள்களில் 'காமிராக்கள்' தொங்கிக் கொண்டிருந்தன. ஆண்களுடைய தோள்களிலோ துப்பாக்கிகளும், வெடி மருந்துப் பெட்டிகளும் தொங்கிக் கொண்டிருந்தன. உணவுப் பொருள்கள் பிரப்பங் கூடைகளில் இருந்தன. அவர்களால் எல்லாவற்றையும் தூக்கி வர முடியவில்லை. பெண்களின் முகங்களில் வியர்வை முத்திட்டது. அவர்கள் சேலைகளின் நுனிகளை இடுப்பில் செருகியிருந்தார்கள். புழுதியில் புரளாமல் இருப்பதற்காக அவர்கள் சேலைகளை ஒருபுறமாகச் சற்று உயர்த்திக் கட்டியிருந்தனர். அவர்களைக் கண்டதுமே அவர்கள் நின்றதன் காரணத்தைக் கூலியாட்கள் தெரிந்து கொண்டு விட்டனர். அவர்கள் அங்கு வந்ததே தங்களுக்குத் தெரியாதது போலத் தங்கள் வேலையில் மூழ்கி விட்டார்கள். ஆனால் மஹேசா மட்டும் வேலை செய்வதை நிறுத்திவிட்டுத் தன் முண்டாசைச் சரிசெய்து கொள்ளும் சாக்கில் கடைக்கண்களால் அவர்களைப் பார்த்தான். ஆண்களையல்ல; பெண்களை. நீலச் சேலை கட்டிய மாதரசி சொல்லுவாளானால், மண்வெட்டியைப் போட்டு விட்டுச் சாமான்களைத் தூக்கலாம் என்று அவன் நிச்சயித்திருந்தான். அதனால் அவன் அடிக்கடி அவளையே ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான். அப்பொழுது அவளே அவனை நோக்கி இனிய குரலில், "இங்கே யாராவது கூலியாள் கிடைப்பாரா?" என்று கேட்டாள்.

மஹேசாவுக்கு அவள் இவ்வாறு கேட்டது பிடிக்கவில்லை. கூலியாள்தான் வேண்டுமென்றால் தேடிக் கொள்ளட்டுமே! அவன் கர்வத்தோடு, "நாங்கள் சர்க்காரைச் சேர்ந்த 'காம்ப்' ஆட்கள்!" என்றான். சர்க்காரிடமிருந்து பணம் பெற்றுக் கொண்டு கூலி வேலை செய்வது சிறிது உயர்ந்தது போன்ற எண்ணம் அவனுக்கு.

"சற்று உதவ வேண்டும்.... இந்தச் சாமான்களை ஏரி வரையில் எடுத்து வர வேண்டும்" என்றாள், அந்த நீலச் சேலைக்காரி தனது இனிய குரலில்.

மஹேசாவின் மனம் மகிழ்ந்தது. அவன் பெருமையுடனும், கம்பீரத்துடனும், "அப்படிச் சொல்லுங்கள், உதவி கிடைக்கும்!" என்றான்.

மஹேசாவின் அற்ப கர்வத்தைக் கண்டு அவள் இலேசாகச் சிரித்தாள். அவன் ஒரு கணப் பொழுது கண் கொட்டாமல் அவளுடைய தூய பற்களையே பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு ஓடிச் சென்று மேஸ்திரியிடம் சாமான்களைத் தூக்கிச் செல்ல அனுமதி கேட்டு அவளிடம் ஓடி வந்தான்.

வந்தவுடனேயே அவர்களுடைய சாமான்களைத் தூக்கிக் கொண்டு அந்த நீலச் சேலைக்காரியின் பின்னால் நடந்தவாறே பேச்சுக் கொடுத்தான்: "நீங்கள் எல்லாரும் வேட்டையாடவா வந்திருக்கிறீர்கள்? எங்கிருந்து வந்திருக்கிறீர்கள்?"

ஆனால் நீலச் சேலைக்காரி இவனுடன் பேசாமல் மற்றோர் ஆடவனுடன் சிரித்துச் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தாள். மஹேசாவுக்கு இது பிடிக்கவில்லை. அவனுக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. சிறிது தூரம் பொறுமையோடு சென்றான். பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டல்லவா? அது மீறி விடவே, சாமான்களையெல்லாம் தூக்கி எறிந்து அந்த ஆடவனைப் பார்த்து, "உங்கள் சாமான்களை நீங்களே தூக்கிச் செல்லுங்கள். நான் ஒன்றும் கூலியாள் இல்லை" என்று சொல்லி விட்டால் என்ன என்று தோன்றியது. ஆனால் அவளுடன் நடந்து செல்வதால் ஏற்படும் மகிழ்ச்சிகூட அவனுக்குக் குறைந்த அளவினதாகத் தோன்றவில்லை. அவனுக்கு மீண்டும் பேச ஒரு வாய்ப்புக் கிட்டியது. அவர்கள் தவறான பாதையில் திரும்புவதைக் கண்டு அவன் நீலச் சேலைக்காரியிடம் பாய்ந்தோடி அவர்களுடைய அறியாமையைக் காட்டுவது போல், "உங்களுக்கு வழி தெரியாது. என்னோடு வாருங்கள்! இங்கிருந்து பாதை சேறாக இருக்கும்" என்றான்.

"ஓ, சேறு!" என்று சொல்லி நீலப் புடவைக்காரி சிறிது பீதியாகவே திடுக்கிட்டாள். இவ்வாறு அவள் திடுக்கிட்டது மஹேசாவுக்கு மிகவும் பிடித்திருந்தது. அவனுக்கு வர்ணிக்க முடியாத ஒரு வகைக் கிளுகிளுப்பு ஏற்பட்டது. கான்பூரில் ஆலை நேரம் முடிந்து வெளியே வந்ததும் அவன் நாற்சந்தியின் ஓரத்தில் நின்று கொண்டு இம்மாதிரிதான் பெண்களைப் பார்த்துப் பார்த்து மகிழ்வான்.

புதர்களின் அருகில் வந்ததும், அவர்கள் எல்லாரும் நின்றார்கள். சாமான்கள் அங்கேயே இறக்கப்பட்டன. பெண்கள் எல்லாரும் குளிர்ந்த காற்றில் தங்கள் கூந்தலின் முடிகளை மேலே சேர்த்து ஒதுக்கிக் கொண்டோ, சேலைகளைச் சரிப்படுத்திக் கொண்டோ கவலையற்று உட்கார்ந்தனர்.



இவற்றைப்
பலி
கொடுக்காதீர்கள்!

இந்தக் கரங்கள் மட்டுமே, கச்சாப் பருத்தியின் விலையில் ஏற்றத் தாழ்வுகளிலிருந்து விவசாயிக்கு உண்மையில் பாதுகாப்பளிக்க வல்லது.

பாதுகாப்பாளர்கள்: இந்தியாவின் பருத்தி வாணிபம்.

அவர்களுடைய குறிக்கோள்: பருத்திப் பயிரின் நிலையற்ற தன்மையிலிருந்து சாகுபடியாளர்களுக்குப் பாதுகாப்பளித்தல். அவர்களுக்கு தொழில்நுட்ப உதவியும் நிதி உதவியும் அளித்தல். விற்பனையின் மிக அதிகமான பாகத்தைச் சம்பாதிக்க அவர்களுக்கு உதவுதல். பஞ்சாலைகளுக்கு தொடர்ந்து சப்ளைகள் கிட்டுவதை உறுதி செய்தல்.

எதிரி: பருத்தி வியாபாரத்தை அரசாங்கம் ஏற்று நடத்துவதற்கான பிரேரணை.

விளையக்கூடிய தீமை: தொழில் அனுபவமற்ற நிர்வாகத்தின் விளைவாக விவசாயி தீவிரமான நிதி நெருக்கடி நிலைமையை அடைதல்.

இதற்குப் பலி: இன்று, பருத்தி சாகுபடியாளர்களும், அவர்களுடைய குடும்பத்தினரும். நாளை, நாடு

பாதுகாப்பு: பருத்தி வியாபாரமும், பருத்தி, உணவுதானியங்கள், எண்ணெய் விதைகள் ஆகிய விவசாயப் பொருள்களின் விநியோகத்தில் ஈடுபட்டுள்ள வாணிபத்துறை முழுவதுமே நாசமாக்கப்பட இருக்கிறது. ஆனால் விநியோகத் துறையில் உள்ள அனைவருடைய ஒற்றுமையும் சக்திமிக்கது. அவர்களுடைய குடும்பத்தினர் உள்பட 6½ கோடி வோட்டுகள் பலம் கொண்ட ஒற்றுமை இது!

பிரேரேபிக்கப்பட்டுள்ள ஆல் இந்திய காட்டன் ஃபெடரேஷனின் அட்ஹாக் கமிட்டி.

ஜனநாயகமான வியாபாரத்தின் பாதுகாப்பாளர்களுடன் சேருங்கள். ஏற்கெனவே 6½ கோடி வோட்டு பலம் உள்ளது.


சென்னை
சித்ரா · ஸ்ரீ கிருஷ்ணா · மேகலா
கிருஷ்ணவேணி மற்றும்
தென்னாடெங்கும்
ஸ்ரீ விஜயலக்ஷ்மி பிக்சர்ஸ்
திருமலை தென்குமரி
வண்ணப்படம்
கதை, வசனம், டைரக்ஷன்
A.P. நாகராஜன்
MARS

மெல்லிய நீர்க்காற்று ஏரியிலிருந்து வந்து கொண்டிருந்தது. மரங்களின் நிழல் நல்ல குளிர்ச்சியாக இருந்தது. ஏரியின் நீரில் மேகங்கள் நீந்திக் கொண்டிருந்தன; நாணற் புற்கள் மெல்ல மெல்ல அசைந்து கொண்டிருந்தன..... தூரத்தில் நீர் ஆழமில்லாத இடத்திலிருந்து அன்னம், நீர்க்கோழி, வாத்து போன்ற பறவை இனங்கள் இரைகளைக் கொத்தும் ஒலியும் இறக்கைகளைப் படபட வென்று அடித்துக் கொள்ளும் ஓசையும் கேட்டன. அன்னங்கள் நீரில் வளர்ந்திருந்த பாசிகளைக் கொத்தித் தின்று கொண்டிருந்தன. நீர்க்கோழி நத்தைகளையோ நண்டுகளையோ தேடுவதில் முனைந்திருந்தது. மரங்களில் பறவைகள் பலவாறு ஒலித்துக் கொண்டிருந்தன.

திடீரென அந்த நீலச் சேலைக்காரி ஏரியின் நீரைச் சுட்டிக் காட்டி ஆச்சரியத்துடன் சொன்னாள்: ''தண்ணீர்ப் பாம்பு! பாம்பு நீந்திக் கொண்டிருக்கிறது!''

எல்லாரும் ஆவலுடன் அங்கே பார்க்கலுற்றனர். மஹேஷா கலகலவெனச் சிரித்தான். இந்தப் பெரிய மனிதர்களுக்கு இது கூடத் தெரியவில்லையே! இவர்களுக்கு எப்படி விளக்குவது? அவன் நீலச் சேலைக்காரிக்கு மாத்திரம் கூற விரும்பினான். ''அது நீர்ப் பாம்பில்லை, பறவை'' என்றான்.

''பறவையா? என்ன உளறுகிறாய் ?''

''நான் சொல்வதை நம்பாவிட்டால் பார்த்துக் கொண்டே இருங்கள்'' என்று சொல்லி விட்டுச் சுற்றுமுற்றும் பார்த்தான். ''அதோ பாருங்கள், நீரில் ஒரு மரக்கட்டை மிதந்து கொண்டிருக்கிறது. அதன் மேல் ஒரு கரும் பறவை உட்கார்ந்திருப்பது தெரியவில்லை ? அதன் துணைதான் இந்த நீர்க் காகம்!'' என்றான்.

''அதோ, அது கரும் பறவையா ?'' என்று அவனிடம் கேட்டாள் அவள். அவனுக்கு ஏக சந்தோஷம். ''ஆமாம், நீர்க் காகத்துக்கு நீந்துவதென்றால் மிகவும் பிரியம். அது ஈட்டி போன்ற தனது கருமையான அலகை வெளியே நீட்டிக் கொண்டு நீந்துகிறது'' என்றான்.

''அது என்ன தின்னும்?'' என்று ஆவலுடன் கேட்டாள் அவள்.

..''மீன்!'' அவனுடைய கண்கள் மின்னின. ''அது களைத்துப் போனவுடன் ஏதாவதொரு மொட்டை மரக் கட்டையில் இறக்கைகளையும் வாலையும் விரித்து உலர்த்தும்'' என்றான்.

'' இப்பொழுது அது தண்ணீரி லிருந்து வெளியேறுமா?'' நீலச் சேலைக்காரியின் வாய் திறந்தபடியே இருந்தது.

அவனுடைய வெண் பற்களை மஹேஷா பார்த்துக் கொண்டேயிருந்தான். அன்னப் பறவையின் வெள்ளைச் சிறகுகளைக் கழுவி உலர்த்தினாற் போல் அவை பளபளத்தன. அவனுக்கு அங்கிருந்து செல்ல மனமில்லை. ஆனால் மேஸ்திரி அவனிடம், ''சீக்கிரமே திரும்பி வரவேண்டும். இல்லாவிட்டால் கூட்டாளிகள் காய்வார்கள்'' என்று சொல்லியிருந்தான்.

அப்பொழுது ஒரு கனவான் துப்பாக்கியை எடுத்துக் குறி பார்த்தார். அதைக் கண்டு மஹேஷாவின் மனம் சஞ்சலப்பட்டது. ஒவ்வொரு பறவையின் ஒலியும் அவனுக்கு நன்கு தெரியும் — ஆண்டு முழுதும் அதே ஏரிக் கரையில் வாழ்ந்து வரும் பறவைகளின் குரல்களையும், இந்தப் பருவத்தில் மட்டுமே வெகு தூரத்துக்கு அப்பாலுள்ள மலைகளிலிருந்து இறங்கிச் சில நாட்களுக்கு விருந்தினர்கள் போல் வந்து போகும் பறவைகளின் குரல்களையும் அவன் இனம் பிரித்து அறிந்திருந்தான். அவற்றின் ஒவ்வொரு வகையான குரல் மாற்றத்தின் பொருளும் அவனுக்குத் தெரியும். அவை சண்டையிட்டுக் கொண்டிருக்கின்றனவா — அல்லது மகிழ்ச்சி மிகுதியால் பாடிக் கொண்டிருக்கின்றனவா அல்லது தம்மைச் சேர்ந்த பறவைகளுக்கு அபாய எச்சரிக்கை செய்கின்றனவா என்பதைக்கூட அவனால் கூற முடியும்.

துப்பாக்கி சுட்ட ஒலி மேகங்களில் எதிரொலித்தது. அதன்பின் பறவைகளின் அச்சக் குரலும் கூப்பாடும் கேட்டன. மஹேஷா தன் மனத்தில் காயம் ஏற்பட்டாற் போன்ற உணர்வில் துடித்தான். தூரத்தில் அவனுடைய கூட்டாளிகள் வேலையில் ஈடுபட்டிருந்ததைக் கண்டான். ஒருகணப் பொழுது அங்கு நின்று பின்னால் திரும்பிப் பார்த்தான். சேற்றில் நிசப்தம் நிலவியது. அதற்கு உயரே, அச்சத்துடன் அகன்றோடிக் கொண்டிருந்த பறவைகளின் அச்சம் தோய்ந்த குரல்கள் ஒலித்தன. அவன் திரும்பி வேகமாக நடந்து வந்து தனது வேலையில் ஈடுபட்டான்.

இரவில் மரங்களினடியில், கூலிகளின் கூட்டடுப்பு எரிந்த பொழுது, அங்கே மஹேஷா இல்லை. கிராமத்திலிருந்து வெங்காயமும், மசாலாவும் வாங்கி வந்த சரண்சிங் சொன்னான்: ''அந்தப் பயல் இன்றைக்கு நெய் தடவிய நல்ல ரொட்டி சாப்பிடப் போகிறான் !''

''எங்கே ? அவன் கிராமத்திலா இருக்கிறான் ?'' பஜ்ஜூ வியப்புடன் கேட்டான்.

''ஆமாம். ஆசைநாயகியின் வீட்டிலிருக்கிறான். அந்தச் சிரழிந்தவளும் நகை நட்டுகள் அணிந்து வகிடு எடுத்துத் தலை வாரிக் கொண்டு அவனோடு உட்கார்ந்திருக்கிறாள் !'' என்று சொல்லிக் காறி உமிழ்ந்த சரண்சிங் வெங்காயத்தை உரித்துத் தின்னலுற்றான்.

''இவளை எப்படிக் காதலித்தான் அவன்?'' பஜ்ஜூ ரொட்டி மாவைப் பிசைந்துகொண்டு கிசுகிசுத்த குரலில் கேட்டான்: ''அவளுக்கு நாற்பது வயது இருக்கும் போலிருக்கிறதே! மஹேஷாவுக்கு எத்தனை வயதிருக்கும்?''

''இருபத்தைந்து. இருபத்தாறு இருக்கலாம்.'' — சரண்சிங் சொன்னான்.

''அப்படியானால்....'' என்று சொல்லி ஹோரி குறும்புத்தனமாகச் சிரித்தான்.

ரோடு ஏரி வரையில் போட்டு முடிவதற்கு முன்பாகவே மஹேஷா காங்குக் கூலிவேலையை விட்டு விட்டான். அவன் மனம் கவர்ந்தவளை மணமே செய்து கொண்டான். ஜனங்கள் பலவிதமாகப் பேசிக் கொண்டனர். ஆனால் மஹேஷா எவரையும் பொருட்படுத்தவில்லை. இரட்டை நாடியான அவள் வெள்ளி ஒட்டியாணம் அணிந்து கால் சிலம்புகள் கொஞ்ச,

நடை பழகியபொழுது அவன் இதயமே நர்த்தனம் ஆடியது.

மஹேசா அவளுடன் எங்கேயாவது புறப்பட்டால் கூடவே நடப்பான். ''உங்களுக்கு வெட்கமாக இல்லை? புருஷன், வீட்டுக்காரிக்கு முன்னே போக வேண்டும், கூடக்கூட நடக்கக் கூடாது..... ஜனங்கள் பார்த்தால் என்ன சொல்லுவார்கள்? முன்னாலே போங்கள்'' என்பாள் அவள்.

''பெரிய வெட்கத்தைக் கண்டுட்டே நீ! பட்டணங்களில் எல்லாம் வெள்ளைக்காரப் பெண்கள் இப்படித்தான் போகிறார்கள்; அதுவும் கைகோத்துக் கொண்டு!'' என்று கூறி அதைச் செயலாக்கவே முனைவான் மஹேசா.

ஒரு நாள் அம்மன் பூசைக்காகப் பார்வதி செம்பஞ்சிக் குழம்பு இட்டுக் கொண்டாள். மஹேசா சிவப்புச்சாயத்தை விரலில் தொட்டு அவள் உதடுகளில் பூசினான். பார்வதி அதைத் துடைக்க முயன்றபோது அவன் தன் மேல் ஆணையிட்டுத் தடுத்து விட்டான். பொருட்காட்சியில் வாங்கி வந்த கண்ணாடியைக் கொண்டு வந்து அவள் முகத்துக்கு எதிராக நீட்டினான். பார்வதி வெட்கப்பட்டுக் கொண்டே தன் சிவந்த உதடுகளைப் பார்த்தாள். தன்னுடைய அழகின் பெருமையில் மயங்கி, ''நீங்கள் ஒரு வெள்ளைக்காரியைக் கலியாணம் செய்து கொண்டிருக்க வேண்டும். சிவப்புச் சாயம், பவுடர் போடும் வெள்ளைக்காரியை!'' என்றாள், தான் எந்த வெள்ளைக்காரிக்கும் குறைந்தவள் இல்லை என்பதைச் சொல்லாமல் சொல்பவள்போல.

உடனே மஹேசா அவளுடைய கொழுகொழுப்பான மணிக்கட்டைப் பிடித்துக் கொண்டு சொன்னான்: ''நீ எதில் அவர்களை விடக் குறைவு?'' அதைக் கேட்டுச் சிரித்த பார்வதியின் வெண்மையான பற்களைப் பார்த்து, அவன் பூரித்துப் போனான். பார்வதியின் பற்கள் அவன் எப்போதோ பார்த்திருந்த அன்னத்தின் இறக்கைகளைப் போல் வெண்மையாக இருந்தன.

பார்வதி சொன்னாள் என்று மஹேசா பெரிய பெரிய 'கேரா'க்கள் வைத்துக் கொண்டான், குடுமியைப் பெரிதாக முடிச்சுப் போட்டுக் கொண்டான், மீசைகளைச் சிறியதாக வைத்துக் கொண்டான். சந்தை, திருவிழா, வேடிக்கை ஆகியவற்றுக்குச் செல்வதற்காக ஒரு ஜோடிக் காளைகளும், ஒரு சிறிய ரேக்ளா வண்டியும் வாங்கினான். காளைகளை நன்றாக அலங்காரம் செய்து வைத்திருந்தான். அவற்றின் கழுத்தில் நாற்பது சலங்கைகள் கொண்ட பட்டை கட்டியிருந்தான்; கொம்புகளைச் சீவிப் பளபளவென்று வைத்திருந்தான். வண்டியின் முகட்டுக்கான அலங்காரத் துணியைப் பார்வதி தைத்தாள். குஞ்சலங்களைத் தையற்காரன் தயாரித்தான். சக்கரங்களுக்குத் தேர்ச் சக்கரங்களைப் போன்று குமிழ்கள் கடைந்து பொருத்தியிருந்தான். சொல்லப் போனால் மஹேசாவின் வண்டி வான வில்லின் ஏழு நிறத்தையும் கொண்டிருந்தது.

ஒரு தடவை வண்டி ஓட்டும் பந்தயத்தில் கலந்து கொண்ட மஹேசா பார்வதியிடம், ''நீ என்கூட வண்டியில் உட்காராவிட்டால் நான் போட்டிக்குப் போக மாட்டேன்'' என்று பிடிவாதம் பிடித்தான்.

''நான் என்ன, காட்சிப் பொருளா? என்ன சிறுபிள்ளைத்தனம் இது?'' என்று கடிந்து கொண்டாள் அவள்.

மஹேசா சிரித்து விட்டான்: ''நீ என்ன பெரிய தாய்க் கிழவியோ? என் எதிரே இப்படிப் பேச வெட்கமாயில்லை? குழந்தைபோல் பல் இருக்கிறது. கிழவிபோல் பேசுகிறாயே?'' என்றான்.

ஊரில் எப்பொழுதும் மஹேசாவையும் பார்வதியையும் பற்றிய பேச்சாகவே இருந்தது. ஆனால் அவர்கள் இருவரும் யாரைப் பற்றியும் கவலைப்படவில்லை. பார்வதி கொடுக்கல், வாங்கல் செய்து வந்தாள். எல்லாருடைய குடுமியையும் தன் கையில் வைத்திருந்தாள். சமயா சமயங்களில் பணம் தேவைப்படாதவர்கள் ஊரில் யார் இருந்தார்கள்? ஆகையால் முதுகுப் புறத்தில் மஹேசாவையும் பார்வதியையும் வைதாலும் நேருக்கு நேர் கண்டு விட்டால் வெண்ணெயாகப் பேசினார்கள்.

இருவருக்குமே இது தெரியும். ஆயினும் இருவரும் சிறிதும் மனத்தாங்கல் கொள்ளவில்லை.

மஹேசாவுக்கு இப்பொழுது எவ்விதக் கவலையும் இல்லை. வேலை செய்து பிழைக்க வேண்டும் என்ற அவசியமும் இல்லை. இருப்பினும் எப்பொழுதாவது உல்லாசப் பிரயாணிகள் ஏரியை நோக்கிச் செல்வதைக் கண்டுவிட்டால், அவர்களுடன் அழகிய நங்கையும் இருந்துவிட்டால் அவனால் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடிவதில்லை. அவர்கள் பின்னாலேயே சென்று விடுவான். அந்தப் பெண் தன்னுடன் பேசமாட்டாளா என்று ஏங்குவான். அவள் அவனுடன் பேசவில்லையென்றால், அவன் பறவைகளிடம் ஈடுபட்டு அமைதியான ஏரிக் கரையைச் சுற்றி வருவான். கோரைப் புற்களிடையே சவ்வரிசி போன்று பரவியிருக்கும் மீன் முட்டைகளைப் பார்த்துக் கொண்டிருப்பான். நீலக்குருவி கூடிக் குலாவுவதைக் கண்டு களிப்பான். கொக்கு தவம் செய்வதைக் கண்டு மூச்சை அடக்கிக் கொண்டு நிற்பான். இப்படியே நேரம் போவது தெரியாமல் போய்விடும். வீட்டின் நினைவு வந்ததும் அவசரம் அவசரமாகத் திரும்புவான்.

ஒரு தடவை அவன் பகல் முழுவதும் வராமல் இருந்துவிட்டான். நள்ளிரவு கடந்த பின்னர் வீடு திரும்பினான். பார்வதி கோபத்தோடு கேட்டதற்கு வெள்ளை மனத்தோடு அவன் சொன்னான்: ''காட்டுக்குப் போயிருந்தேன்.''

''பொய். ஏரியைச் சுற்றிக் கொண்டிருந்திருப்பீர்கள். அலுத்திருக்காது'' என்று பார்வதி கடிந்து கொண்டாள். அதற்கு அவன் மிகவும் தெளிவாக, ''காட்டில் கௌதாரியைப் பார்க்கப் போனேன். அவை மண்ணில் எப்படிக் குளிக்கின்றன தெரியுமா?'' என்றான்.

''கௌதாரியாவது, இல்தாரியாவது! அதெல்லாம் ஒன்றுமில்லை. நீங்கள் வேறு

எங்கேயோ போயிருக்கிறீர்கள். என்னிடத்தில் உண்மையைச் சொல்லுங்கள்'' என்றாள்.

''பார்வதி, நீ நம்பினாலும் நம்பாவிட்டாலும் நான் சொல்வது மெய். இதோ பார், கால்களில் எத்தனை முட்கள் குத்தியிருக்கின்றன. சண்டை போட வேண்டுமானால் காலையிலே போடுவோமே!'' என்று சொல்லிவிட்டு, அவன் கால்களைச் சௌகரியமாக நீட்டிக் கொண்டு படுத்துவிட்டான்.

பார்வதி பேச்சை மாற்றினாள். ''பணம் அதிகமாக நிலுவையில் இருக்கிறது. வசூலாகவில்லை. நீங்கள் கொஞ்சம் கண்டித்துக் கேளுங்கள். ஒரு கோவிலும், முடிந்தால் யாத்திரீகர்களுக்கென்று இரண்டு அறைகளும் கட்டலாமென்று இருக்கிறேன்.''

''இந்தத் தருமம் கிருமம் எல்லாம் உன்னை எத்தனை நாட்களாக வாட்டுகின்றன?''

''நெடு நாட்களாகவே எனக்கு மனத்தில் இந்த ஆசை உண்டு. மேஸ்திரியை அழைத்து வந்து நிலத்தையும் காட்டிவிட்டேன். அதற்கப்புறம் ஒன்றும் நடக்கவில்லை.... நான் செத்துப் போனாலும் பேருக்கு ஒரு கோவிலாவது இருக்குமல்லவா? பத்துப் பேர் மனம் வாழ்த்தும்!'' பார்வதி மனத்திலிருந்ததை அப்படியே கூறினாள்.

''வேலையற்ற நேரத்திலே இந்த விஷயங்களெல்லாம் உனக்கு எப்படித் தோன்றின?''

மஹேசா பார்வதியைக் கூர்ந்து கவனித்தான். அவளுடைய முகத்தில் நிலவொளி விழுந்து கொண்டிருந்தது.

''என்ன பார்க்கிறீர்கள்?'' பார்வதி புடவைத் தலைப்பை இழுத்து விட்டுக் கொண்டு கேட்டாள்.

மஹேசா ஒன்றும் சொல்லாமல் பார்வதியைப் பார்த்துக் கொண்டே இருந்தான். பார்வதி வருத்தம் தோய்ந்த குரலில் ''என்னைக் கலியாணம் செய்து கொண்டதற்காக நீங்கள் வருத்தப்படவில்லையே?'' என்று கேட்டாள்.

''என்னது?'' மஹேசா இந்தக் கேள்விக்குத் தயாராக இல்லை.

''இன்று இதைப் பற்றி எண்ணி எண்ணி மிக வருந்தினேன்.... என் இன்பத்துக்காக உங்களைக் கெடுத்துவிட்டேன், பாவி!'' பார்வதியின் கண்கள் பனித்தன. ''நீங்களும் வருந்துகிறீர்களோ என்னவோ? உண்மையைச் சொல்லுங்கள்!''

''வருத்தமா? எதற்கு வருத்தம், பார்வதி?'' மஹேசா கேட்டான். ''நான் இதெல்லாம் பற்றி ஒன்றுமே எண்ணியதில்லை. எண்ண வேண்டிய அவசியமும் ஏற்படவில்லை.''

''நீங்கள் என்றுமே எதையும் பற்றி நினைக்கவில்லையா? திருமணத்தைப் பற்றிக்கூட நினைக்கவில்லையா?'' பார்வதி அவனைத் தூண்டித் தூண்டிக் கேட்டாள். ''இப்பொழுது உங்களைச் சுதந்திர புருஷராக நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். குழந்தை குட்டிகள் இருந்திருந்தால் இப்படி நினைத்திருக்க முடியுமா?'' இதைச் சொல்லும்போது அவளுடைய குரல் தழுதழுத்தது. சந்திரனை மேகம் மறைத்ததால் அதன் ஒளி மங்கிப் போயிற்று. சந்திரனைப் போலவே பார்வதியி ன் முகமும் மங்கலாகத் தெரிந்தது.

இலக்கிய நயம்



தகவல்: ஆர். எம்.

''மீன் பிடிக்கலாம் - பறவைகள் மட்டும்''

இலக்கிய நயம் என்பது கதை கட்டுரை கவிதைகளில் மட்டும்தானா என்ன? ஓர் அறிவிப்புப் பலகையில்கூட இலக்கிய நயம் இருப்பது சாத்தியமே!

''மீன் பிடிக்கும் உரிமை பறவைகளுக்கு 'ரிசர்வ்' செய்யப்பட்டுள்ளது'' என அறிவிப்புப் பலகையில் எழுதி யாரும் மீன் பிடிக்கக் கூடாது என்பதை நாசுக்காகத் தெரிவிக்கிறது, அமெரிக்காவில் உள்ள எவர்கிலேட் தேசிய பூங்காவின் அறிவிப்புப் பலகை.

திருமணத்துக்குப் பிறகு எல்லா வீடுகளிலும் குழந்தைகள் இருக்கின்றன என்பதும், தன்னுடைய வீட்டில் மட்டும் இதுவரையில் ஒன்றும் பிறக்கவில்லை என்பதும் திடீரென்று மஹேசாவின் நினைவுப் படலத்தில் எழுந்தது. அவன் பார்வதியை நன்றாக உற்று நோக்கினான். பார்வதி இப்பொழுது கூறிய விஷயத்தை அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை. பார்வதி சொல்ல நினைப்பதுதான் என்ன? வீட்டில் எங்கும் நிசப்தம் நிலவியது. அத்தகைய வெறுமையில் அவன் பார்வதியிடத்தில் என்றுமே தனிமையை உணர்ந்ததில்லை. ஆனால் இன்றுமட்டும் ஏன் இப்படி....

''ஊரிலுள்ள ஆஸ்பத்திரி மிகவும் சிறியதாக இருக்கிறது. இங்கு என்னை நன்றாகக் கவனிக்க மாட்டார்கள்.''

''ஆஸ்பத்திரியா? ஆஸ்பத்திரிக்கு என்ன அவசியம்?'' மஹேசாவுக்கு மேலும் புதிராக இருந்தது.

''உங்களுடைய அறியாமைக்கு என்ன சொல்வது! இங்கே வீட்டில் என்னை யார் கவனிப்பார்? தேவைப்படும்பொழுது வந்து உதவ, உற்றார் உறவினர் எவருமில்லை....ஆஸ்பத்திரியில் கஷ்டப்படாமல் இருக்கும்படி டாக்டர் நல்ல மருந்துகள் கொடுக்கிறார் என்று கேள்விப்பட்டேன்.''

மஹேசா சிரித்தான். அவன் இப்பொழுது புரிந்து கொண்டான்; உற்சாகத்துடன் சொன்னான்; ''ஜில்லா ஆஸ்பத்திரிக்குச் சென்றால் போகிறது. பணம் எல்லாவற்றையும் கவனித்துக் கொள்ளச் செய்யும். நமக்குக் கடவுள் எல்லாம் கொடுத்திருக்கிறார்.''

ஆனால் பார்வதியால் அவனுடைய மகிழ்ச்சியில் பங்கு கொள்ள முடியவில்லை. அவளுடைய மனத்தில் அச்சம் குடிகொண்டு விட்டது. சொன்னாள்: ''ஒன்று சொல்லட்டுமா?.... எனக்கு ரொம்பப் பயமாக இருக்கிறது..... உயிர் போய் விடுமோ என்று தோன்றுகிறது.''

''நீ வீணாகப் பயப்படுகிறாய்!''

''வீணாக இல்லை. மனம் இல்லாததெல்லாம் எண்ணுகிறது! பயங்கரக் கனவுகள் வருகின்றன. அப்பொழுதெல்லாம் மூச்சு முட்டிப் போகிறது.''

''நான் இருக்கும் பொழுது உனக்கு என்ன பயம் ?''

''அதனால்தான் வெகுநேரம்வரை வெளியே தங்கிவிடாதீர்கள் என்று சொல்கிறேன்!'' என்றாள் பார்வதி.

மஹேசா கட்டிலோடு கட்டிலை இணைத்துப் போட்டான். சட்டத்தின் அருகில் நகர்ந்து படுத்துக் கொண்டு தன் கையை அவளுடைய புஜத்தின் மேல் வைத்துக் கொண்டான்.

''இனி உனக்கு அப்படியெல்லாம் பயம் ஏற்படாது'' என்றான்.

சிறிது நேரத்தில் பார்வதி தூங்கிவிட்டாள். ஆனால் மஹேசாவுக்குத் தூக்கம் வரவில்லை. பார்வதியின் கால் திடீரென்று அசைந்தது. அவளுடைய மூச்சு வேகமாக வந்தது. அவள் பயப்படுவது போலத் தோன்றியது. மஹேசா எழுந்து அவளுடைய நெற்றியைக் கையால் தொட்டுப் பார்த்தான். நெடுநேரம் வரையில் உட்கார்ந்து அவளைப் பார்த்துக் கொண்டேயிருந்தான். அவனுக்குத் தன்னை அறியாமல் தூக்கம் வந்ததும், பார்வதியைச் சிறிய குழந்தை போல் நினைத்து, ஓர் இரும்புக் கத்தியைக் கொணர்ந்து அவளுடைய தலைமாட்டில் வைத்து விட்டுப் படுத்துக் கொண்டான்.

பின்னர் ஒரு நாளைக்குப் பார்வதி ''கோவில் விஷயமாக மேஸ்திரியிடம் கேட்டீர்களா?'' என்று கேட்டாள்.

''மேஸ்திரியைக் காணவில்லை. ஆனால் ஒரு புது விஷயம் கேள்விப்பட்டேன்.''

''என்னது?'' பார்வதி உற்சாகத்துடன் தெரிந்து கொள்ள விரும்பினாள்.

''நம் ஊரில் மின்சாரம் வரப் போகிறது. கிராம அதிகாரிகள் அதற்காக மிகவும் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் பஞ்சாயத்து போர்டிடம்தான் பணமில்லை.''

''அப்படியானால் மின்சாரம் எப்படி வரும் ?''

''பஞ்சாயத்துப் போர்டு, தனக்கு உபயோகமில்லாத சில நிலங்களை விற்பதற்கு யோசித்துக் கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன்.''

''அப்படியானால் நம்முடைய மேடைக்கு அருகே உள்ள குப்பைமேட்டை நாம் விலைக்கு வாங்கி விடுவோமா?.... மேடையில் கோயில் கட்டலாம், அங்கே குப்பை மேட்டில் யாத்ரீகர்களுக்கான சிறிய சத்திரம் கட்டலாம். நிசம்தானா என்று விசாரித்துப் பாருங்கள்!'' என்றாள் பார்வதி.

'' நிசம்தான். ஹாபிஸ் திவான் பஞ்சாயத்து போர்டு ஆபீசுக்குப் போய் வருகிறார். அவர் தவறான செய்தியைச் சொல்ல மாட்டார். அவர்தான் சொன்னார்......'' மஹேசா அவளுக்கு நம்பிக்கை ஊட்டுவது போலக் கூறினான்: ''சந்தர்ப்பம் கிடைத்தால் வாங்கி விடுவோம்.''

'' எப்பொழுது விற்பார்களோ; யார் கண்டார்கள் ?''

அப்பொழுது ஏரியிலிருந்து பறவைகள் அச்சத்துடன் கத்துவது கேட்டது. அவளது மனம் தடுமாறி விட்டது. '' வேட்டைக்காரர்கள் வந்துவிட்டார்கள்!'' என்றாள்.

மேலே ஆகாயத்தில் ''ஆங்க், ஆங்க்' என்று அலறிக் கொண்டு சக்கரவாகப் பறவைகளின் ஜோடிகள் பறந்து சென்றன. மஹேசா மிகவும் மனம் வருந்தினான். ''இவற்றைக் கொல்வதால் என்ன பயன்? ஆனால் இந்தனை அழகாக இருந்து கொண்டு இவை பிணம் தின்னுகின்றன !'' என்றான்.

'' இப்பொழுதெல்லாம் புதுப் புது பறவைகள் இங்கு மிகுதியாகக் காணப்படுகின்றன. அவை என்ன என்னவென்று அடையாளம் கண்டு கொள்ளக்கூட முடியவில்லை. எங்கிருந்து இவ்வளவு வருகின்றனவோ, தெரியவில்லை'' என்றாள் பார்வதி.

'' இந்தப் பறவைகள் எல்லாம் விருந்தாளிகள். கார்த்திகை முடிந்ததும் வருகின்றன. பங்குனி சித்திரை முடிவதற்குள் திரும்பி விடுகின்றன.'' மஹேசா பார்வதிக்கு விளங்க வைத்துக் கொண்டிருந்தான். ''நான் பறவைகளின் முட்டைகளைக்கூடச் சேகரித்து வைத்திருக்கிறேன். உனக்கு அவற்றைக் காட்டவில்லை. காட்டியிருந்தால் நீ என்னை வீட்டைவிட்டு விரட்டியிருப்பாய்!''

''ஏன் இப்போதும்கூட என்னால் விரட்ட முடியும்'' என்று பார்வதி சொல்லிக் கொண்டிருந்த போதே, ''காட்டட்டுமா?'' என்று கேட்டுக் கொண்டே மஹேசா எழுந்து சென்று விதம் விதமான முட்டைகளை எடுத்து வந்தான். வெள்ளை முட்டைகள், புள்ளி முட்டைகள், பச்சை முட்டைகள் என்று காட்டினான்.

''இதோ பார், பார்வதி! இது வாத்து முட்டை, இது கொக்கு முட்டை, இது காடை முட்டை!'' என்று மஹேசா ஒவ்வொன்றாக எடுத்துக் காட்டினான். பார்வதி சாதாரணமாக அவற்றைத் தொடாமலேயே பார்த்து வந்தாள். ஆனால் காடை முட்டையைப் பார்த்ததும் அவள் அதைக் கையில் எடுத்துக் கொண்டாள். அதைத் திருப்பித் திருப்பிப் பார்த்த பொழுது அது கை தவறிக் கீழே விழுந்து உடைந்து விட்டது. உடனே பார்வதி, ''ஐயோ, தெய்வமே!'' என்று அலறி விட்டாள்.

''உடைந்து போனால் என்ன?'' என்று மஹேசா சாதாரணமாகக் கேட்டான். ஆனால், பார்வதியின் முகம் கருமேகங்கள் சூழ்ந்தனபோல் ஆகிவிட்டது. அவள் மனம் 'திக்'கென்றது. மிகவும் தீனமான குரலில், ''அபசகுனம் ஆகிவிட்டதே!' என்று சொல்லி விட்டுத் தன் தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழுதாள்.

அன்று பார்வதி வரப் போகும் பயங்கரமான விளைவுகளை எண்ணி அழுதாள். முற்றிலும் அதே மாதிரியாக நடந்தது. பிரசவ ஆஸ்பத்திரியிலும் அவளுடைய குரல் பரிதாபமாக ஒலித்தது.

''லேடி டாக்டர் ஆபரேஷன் செய்ய வேண்டும் என்று கூறுகிறாள்'' என்றவள், வேதனையுடன் ''இனி என்னைப் பற்றி ஏதும் கூறுவதற்கில்லை. கடவுள் விருப்பம் யாதோ தெரியவில்லை!'' என்றாள்.

''ஏன் இப்படி மனமுடைந்து பேசுகிறாய்? பார்வதி, நீ உயிரோடு வீட்டுக்கு வருவாய். நான் கோவிலும் கட்டுவித்து, பிரயாண்சி


இடுக்கண்
களைந்திடும் நட்பு போல்

வலியைப் போக்கிடும் 'ஆஸ்ப்ரோ'

வலியால் அவதிப்படும்போது விரைவில் நிவாரணம் பெற 'ஆஸ்ப்ரோ'வை நம்புங்கள். 'ஆஸ்ப்ரோ' மட்டுமே மைக்ரோ–ஃபைன் செய்யப்படுகிறது. அதாவது, அது அதிவேகமாகக் கரைந்து அதிவேகமாகக் கிரகிக்கப்பட்டு, வலியை அதிவேகமாக வெளியேற்றிவிடுகிறது. சாதாரண வலிநிவாரணிகளைவிட இருமடங்கிற்கும் அதிகமான வேகத்துடன் 'ஆஸ்ப்ரோ' வேலை செய்கிறது என்பதை விஞ்ஞானரீதியான பரிசோதனைகள் நிரூபித்துள்ளன!

எனவே, வலியால் அவதிப் படும்போது, நீங்கள் நம்பக்கூடிய நண்பனை நாடுங்கள்—மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' சாப்பிட்டு உடனடி நிவாரணம் பெறுங்கள்.

கீழ்க் கண்டவைகளுக்கு மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' சாப்பிடுங்கள்: நோவு • தலைவலி • உடல்வலி • ஃப்ளூ • ஜுரவேகத்துடன் கூடிய ஜலதோஷம் • மூட்டு வலி • தொண்டை அழற்சி • பல்வலி.

சாப்பிடும் அளவு: வயது வந்தவர்கள்: இரண்டு மாத்திரைகள். தேவைப்பட்டால் மீண்டும் சாப்பிடவும்.

குழந்தைகள்: ஒரு மாத்திரை அல்லது உங்கள் டாக்டர் சொற்படி.





தாமத நிவாரணம்
பெரிய அணுக்கூறுகள் மெதுவாகக் கிரகிக்கப்படுகின்றன. வலியின் இருப்பிடத்தை அடைய அதிக நேரமாகிறது. நீங்கள் அநாவசியமாக வலியால் அவதிப்படுகிறீர்கள்.



துரித நிவாரணம்
நுண்ணிய அணுக்கூறுகள் விரைவில் கிரகிக்கப்படுகின்றன. வலியின் இருப்பிடத்தை அதிவேகமாக அடைகின்றன. வலியை அதிவேகமாகப்போக்கி விடுகின்றன.

'ஆஸ்ப்ரோ' மட்டுமே மைக்ரோஃபைன் செய்யப்படுகிறது அதிவேகமாக வலியை வெளியே இழுப்பதற்காக

நிகோலஸ் (N) தயாரிப்பு

A.G.43.Till

களுக்காகச் சத்திரமும் கட்டுவிப்பேன்!...'' என்றான் மஹேசா.

ஆனால் பார்வதி உயிரோடு வீடு திரும்பவில்லை. குழந்தை வயிற்றில் இறந்துவிட்டது. ஆபரேஷனுக்குப் பிறகும் மோசமாகப் போய்க் கொண்டிருந்த அவளுடைய நிலைமையை லேடி டாக்டர் ஒருத்தியால் தனியாகக் கவனித்துக்கொள்ள முடியவில்லை. உடல் முழுவதும் நீலமாகி விட்டது. பார்வதியின் உடம்பில் விஷம் பரவிவிட்டது. இலேசான நீலம் பார்த்துப் போன பார்வதியின் உடம்பு, மஹேசாவுக்கு முன்பு ஓர் இரவு நிலவொளியில் தோன்றியது போலவே தோன்றியது. முற்றிலும் கவலையற்றவள் போல் காணப்பட்டாள். மஹேசாவை அருகில் அழைத்து, ''இனி கட்டாயம் கோவிலைக் கட்டி வைக்க வேண்டும். பார்வதி கோவில்!'' என்றான்.

கோவில்! இதை எண்ணியதும் மஹேசாவின் இதயம் வெடித்துவிடும் போல் இருந்தது. ''பார்வதி, அப்படிச் சொல்லாதே! குழந்தை இறந்து விட்டால் என்ன? நீதான் உயிரோடு இருக்கிறாயே!''

''என்னைப் பாருங்கள்.... நன்றாகப் பாருங்கள்!'' பார்வதியின் கண்களிலிருந்து கண்ணீர் பெருகிக் காதுகளின் பக்கமாக வழிந்தோடிக் கீழே விழுந்து கொண்டிருந்தது..... பிறகு..... பிறகு.... அவனால் பார்க்க முடியவில்லை.

மஹேசாவின் உலகம் பாழடைந்து போயிற்று. மஹேசாவுக்குப் பைத்தியம் பிடித்து விட்டது என்று ஊரார் சொன்னார்கள். அந்த நிலையிலும் பார்வதி கடனாகக் கொடுத்திருந்த பணத்தை அவன் மிகுந்த கண்டிப்போடு வசூல் செய்து கொண்டிருந்தான். வீட்டின் தனிமை அவனைக் கடிக்க வருவது போலிருந்தது. பார்வதியின் அன்பால் வளர்க்கப்பட்டுக் கொண்டிருந்த அவனுடைய பழக்கமே மாறிப் போயிருந்தது.

ஜனங்கள் சொன்னார்கள்: ''மஹேசா! இரண்டாம் கல்யாணம் செய்து கொள். இவ்வளவு பணமும் எதற்கு இருக்கிறது? ஆசைக்குக்கூடக் குழந்தை இல்லையே!''

மஹேசா, ''பார்வதியைப் போன்று என்னைக் கவனித்துக் கொள்பவளாக யாராவது இருந்தால், அதைப் பற்றி யோசிக்கலாம்...... இல்லை, இல்லை. அப்படியிருந்தாலும் யோசிக்க மாட்டேன். தவறாகச் சொல்லி விட்டேன். வீணாகக் கேலி செய்யாதீர்கள்! இப்பொழுது நான் கிழவனாகிவிட்டேன்'' என்று பதில் அளித்தான்.

மஹேசா பார்வதியைவிடப் பத்து வயது சிறியவன். ஆனால் பார்வதி இறந்தபின் அவன் அவளைவிடப் பத்துவயது மூத்தவனாகத் தோன்றினான். காதோரத்தில் மூன்றே ஆண்டுகளில் நரை வந்துவிட்டது. பிடரிக்குக் கீழே உள்ள தோளில் சுருக்கங்கள் நிறைந்து விட்டன. உண்மையில் மனிதன் கிழவனாவதில்லை. காலம் அவனைக் கிழவனாக்குகிறது.

தனித்த வீட்டில் மஹேசா மிகவும் அழுது புலம்பினான். அவனுக்குப் பார்வதியைப் பற்றிய ஒவ்வொரு விஷயமும் நினைவுக்கு வந்தது..... பொருள்களைப் பார்க்கும்போது கண்களில் நீர் முட்டியது. அவனுடைய உடைகளையும் கொடுக்கல் வாங்கல் தஸ்தாவேஜுகளையும், பணத்தையும் வைத்திருந்த தகரப் பெட்டி.... பெட்டியின் மேல் பாகத்திலிருந்த ஆணியில் சரிகையில் கட்டி வைத்திருந்த வளையல் கொத்து ஆகியவற்றைப் பார்த்து, அவன் அழுதே விட்டான். வீட்டின் வெறுமை அவனை வாட்டியது.

மஹேசாவுக்கு இப்பொழுதெல்லாம் — மஹேஷ்பாண்டே என்று பெயர் வழங்கலாயிற்று. அவன் சில நாட்களாக வெளியூர் போய் விட்டான். சுனார் — மிர்ஜாபூர் பக்கம், கட்டடத்துக்குக் கற்கள் பார்க்கச் சென்றதாகக் கேள்வி. கடன்காரர்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். ஆனால் அவன் பதினைந்து நாட்களுக்குள் திரும்பி வந்துவிட்டான். சௌதரியின் தோட்டத்தில் உட்கார்ந்து சொல்லிக் கொண்டிருந்தான்: ''பார்வதி கோவிலுக்கான பொருள்களைப் பார்க்கப் போயிருந்தேன். கோவிலுக்கான உருவச் சிலையை ஜயப்பூரில் செய்வேன்.''

அவனிடத்தில் தங்கம், வெள்ளி, எல்லாம் சேர்ந்து மொத்தம் எட்டாயிரம் பத்தாயிரம் முதல் இருக்கும் என்று ஜனங்கள் சொல்லிக் கொண்டார்கள். இது தவிர, இரகசியமாக எத்தனை வைத்திருப்பானோ? அது வேறு இருக்கும். இதற்கிடையில் அவன் கொடுத்திருந்த பணத்தைக் ஜரூராக வசூலித்தான்.

கொஞ்சம் கொஞ்சமாக அவனுக்கிருந்த பண வேட்கை தீர்ந்து போயிற்று.

ஒரு நாள் ஹாபிஸ் தெருவோடு போய்க் கொண்டிருந்தவனைக் கையைப் பிடித்திழுத்து உட்கார வைத்து, ''கோவில் கட்டும் வேலையில் நீ முனைந்திருப்பதாகக் கேள்விப்பட்டேனே!'' என்றான்.

''ஆமாம், ஹாபிஸ்! அது ஒன்றுதான் நான் செய்ய வேண்டிய காரியம் பாக்கியிருக்கிறது. எப்படியாவது கோவிலும் ஒரு சிறிய சத்திரமும் கட்டிவிட்டால் மனத்துக்கு நிம்மதி ஏற்படும். பார்வதி இதைச் சொல்லிக் கொண்டே இறந்து போனாள்.''

''இது தர்ம விஷயம். கட்டடத்தைத் தொடங்கினால், பல ஆட்கள் உதவி செய்வார்கள். நீ தொடங்கிவிடு.'' ஹாபிஸ் அவனுடைய வாட்டமான முகத்தைப் பார்த்து ஆறுதல் கூறினான்: ''எப்பொழுதேனும் தேவைப்பட்டால் என்னிடத்திலிருந்தும் பத்து இருபது வாங்கிக் கொள்.''

''என்னிடம் போதிய அளவு பணம் இல்லை. என்னிடம் ஏதோ புதையல் பணம் இருக்கிறது என்று ஜனங்கள் நினைக்கிறார்கள். ஆனால் ஹாபிஸ்ஜீ, உண்மையில் என்னிடம் மொத்தம் நாலாயிரம் ரூபாய்தான் இருக்கிறது. இது சிமிண்டுக்கே போதாதே.''

சாமான் வாங்க ஆட்கள் வந்துவிட்டதைப் பார்த்து, ஹாபிஸும் அதில் ஈடுபட்டான். மஹேச பாண்டேயும் எழுந்து புறப்பட்டான். அப்பொழுது ஏரிக்குச் செல்லும் பாதையில் சில மனிதர்கள் காணப்பட்டனர். அவனுடைய கண்கள் அந்தப் பக்கமே இழுத்தன. உல்லாசப் பிரயாணிகள் அவர்கள். நான்கு ஆண்கள்; இரண்டு பெண்கள். பெண்கள் அவ்வளவு அழகாக இல்லை. அப்படியிருந்தும், அவன் அவர்களுக்குப் பின்

றும் சென்றுவிட்டான். எத்தனையோ நாட்களுக்குப் பிறகு அவன் இன்றுதான் இந்தப் பக்கம் வந்தான்.

நீல ஏரி நிசப்தமாக இருந்தது. கரைகளில் நனைந்த கண்கள் போல் ஈரம் இருந்தது. புற்கள் குனிந்து காற்றின் அசைவுக்கு ஏற்ப மெல்ல மெல்லத் தண்ணீரைத் தடவிக் கொடுத்துக் கொண்டிருந்தன. நீருள் மூழ்கியிருந்த நீர்ச் செடியின் இலைகளிலிருந்து மீன் குஞ்சுகள் சுற்றிச் சுற்றி வெளியே வந்து கொண்டிருந்தன. அவன் கரையில் வந்து உட்கார்ந்து கொண்டான். நீரில் சிறுசிறு கொப்புளங்கள், அடியிலிருந்து மேலே நீர் மட்டம் வரை வந்தன. நீர் வாழ்ப் பிராணிகளின் மெல்லிய குரல்கள் ஏரி நீரில் எதிரொலித்துக் கொண்டிருந்தன. மேலே மரங்களில் பறவைகளின் சிறகடிக்கும் சரசரப்பும் களிப்புடன் கூடிய ஒலிகளும் கேட்டன.

அப்பொழுது அன்னக் கூட்டம் ஒன்று கூவிக்கொண்டு ஏரியின் மற்றொரு கரையில் இறங்கியது. இரண்டு மூன்று அன்னங்கள், கோதுமை, கடலை வயல்களில் புகுந்து முளைகளைத் தின்றன. அவை அந்நியர்கள் போலக் கழுத்தை நிமிர்த்தி, நிமிர்த்திப் பார்த்துக் கொண்டிருந்தன. உண்மையாகவே அவை அந்நியப் பறவைகளே. ஏனோ மஹேஷ் பாண்டேயின் மனம் வருந்தியது. இந்த அன்னங்கள் இப்பொழுது வந்திருக்கின்றன. நாலைந்து மாதங்கள் இருந்து விட்டுப் பார்வதியைப் போலப் போய்விடும். அல்லது பார்வதி பலியானது போல எவனோ ஒரு வேட்டைக்காரனுக்குப் பலியாகும். இவற்றின் சாம்பல் நிறமான இறக்கைகள் இரத்தக் கோடுகளால் இணைக்கப்படும். இறந்துபோன பார்வதியை ஆஸ்பத்திரி தூப்புக்காரர்கள் கட்டிலிலிருந்து தூக்கி, வெறிச்சோடிய தாழ்வாரத்துக்குக் கொணர்ந்தாற் போல, இவற்றின் சிறகுகளைப் பிடித்து, வேட்டைக்காரன் தொங்க விட்டாற் போன்று தூக்கிச் செல்வான்.

அப்பொழுது ஒரு பெருநாரை கத்திற்று.

தனது வெள்ளைக் கொண்டையின் கர்வத்தில் அது கழுத்தை நீட்டி நீட்டிச் சென்று கொண்டிருந்தது. சுகவாசியான அப்பறவை மணற்பாங்கான இடத்தைத் தேடிக் கொண்டிருந்தது போலும்! அதேநேரம் ஒரு பயங்கரமான வெடிச் சப்தத்தைக் கேட்டுத் திடுக்கிட்டுப் போனான் மஹேசா. இடப்புறம் பரவியிருந்த சேற்றில் ஒரு பெண் கொக்கு கிறீச்சிட்டது. அதன் 'கிறீச்'சொலி அந்தப் பிராந்தியம் முழுவதும் எதிரொலித்தது. அது திரும்பத் திரும்பக் கதறியது. ஆண் கொக்கு மிகவும் வருந்தித் துடித்தவாறு மேலே சுற்றிச் சுற்றிப் பறந்தது. அது சில சமயம் சேற்றில் இறங்கிக் கத்தும். சில சமயம் நீண்ட கால்களை அகல விரித்து வைத்து இங்குமங்கும் தாவும்; சோகக் குரல் எழுப்பும். கீழே விழுந்த பெண் கொக்கின் குரல் உடைந்து போயிற்று. அதன் கழுத்து நசுக்கப்பட்ட பாம்பைப் போலத் துடித்துக் கொண்டிருந்தது.

மஹேஷ் பாண்டே அருகில் வந்து அந்த உல்லாசப் பிரயாணிகளைப் பார்த்தான். இம்மாதிரியான சமயத்தில் இந்தப் பெண்களின் கண்களிலும், பார்வதியின் கண்களைப் போல் கண்ணீர் கரந்திருக்கும் என்று அவன் நம்பினான். ஆனால், அவற்றில் வேட்டைக்காரனின் கடும் நிறைமையைப் போற்றும் பாராட்டு நிரம்பியிருந்தது.

அவன் வீட்டுக்குத் திரும்பி வந்தான். இரவு முழுதும் தனித்த வீட்டில் அவனுக்கு அப்பறவையின் அதே கூக்குரல் திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டேயிருந்தது. பிறகு எப்படியோ, ஆஸ்பத்திரியில் கதறிய பார்வதியின் குரல் கேட்கத் தொடங்கியது.....

பொழுது விடிந்ததும், அவனால் அங்கு இருக்க முடியவில்லை. அவன் நேராக ஏரிக்கு வந்தான். ஏரியின் மேலே இருந்த புகை மண்டலம் மெல்ல மெல்லத் தெளிந்துகொண்டிருந்தது. காத்தப் பறவையின் ஜோடியொன்று கரையிலிருந்து கொண்டு பாசியைத் தின்று கொண்டிருந்தது. ஏரியின் அமைதியான அழகு இப்பொழுது அவனைக் கொஞ்சமும் கவரவில்லை. அவனுடைய கால்கள் சேற்றை நோக்கி விரைந்தன. ஆண் கொக்கு அவனுக்குத் தென்பட்டது. அது இறந்து கிடந்த பெண் கொக்கின் இறக்கைகளைத் தன் அலகால் கொத்திக் கொத்தி அதை எழுப்பிக் கொண்டிருந்தது. பெண் கொக்கு எழவில்லை என்றதும், அது அழுது புலம்பிக் கொண்டு, ஏரியை நோக்கிச் சென்று விட்டது.

அவன் அங்கேயே மரத்தினடியில் உட்கார்ந்து, பறவைகளைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவனுடைய மனம் மிகவும் வாடியது. இந்தப் பரதேசிப் பறவைகளுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்! அங்கே இருந்து இருந்து சலித்துப் போனவுடன் அவன் ஊரை நோக்கி நடந்தான்.

அப்பொழுது தமுக்கு அடிப்பவன் கூறியது காதில் விழுந்தது. ''பஞ்சாயத்துத் தலைவர் ஆணைப்படி, பஞ்சாயத்துக்குச் சொந்தமான சில நிலங்கள், ஜனவரி மாதம் நான்காம் தேதி திங்கட்கிழமை ஆபீஸ் கட்டடத்தில் காலை எட்டு மணிக்கு ஏலம் விடப்படும். நிலங்களின் வரைபடங்கள் வாங்குவோர்களுக்காக ஆபீஸில் மாட்டப்பட்டுள்ளன....''

ஜனவரி நான்காம் தேதிக்கு இன்னும் இருபது நாட்கள் இருந்தன. மஹேஷ் பாண்டேயின் மூளையில் மேடைக்கருகில் உள்ள நிலம் சுழல ஆரம்பித்தது. பஞ்சாயத்துக்கு மின்சாரச் செலவுக்காகப் பணம் தேவையாக இருந்தது. அவனுக்குச் சத்திரத்துக்காக அந்த நிலம் தேவையாக இருந்தது.

கோவில் சத்திரம் ஆகிய இரண்டு விஷயங்களையும் வைத்துக் கொண்டு அவன் எல்லாரையும் நெருங்கினான். ''தரும விஷயம். எல்லாரையும்விட அதிகமாகப் பணம் நான் போடுகிறேன். நீங்களும் கொஞ்சம் உதவுங்கள். சத்திரத்தைப் பஞ்சாயத்துக்குக் கொடுத்து விடுவோம். நீங்கள் எல்லாரும் பத்தோ இருபதோ கொடுத்து உதவினால் கூட இந்தக் காரியம் நிறைவேறிவிடும்'' என்று சொன்னான்.

மார்வாடி மில்காரர்கள் ஒரே தவணையில் ஐம்பது ரூபாய் கொடுத்தனர். ஆனால் இந்தப்

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று."



எனும் வள்ளுவத்திற்கேற்ப தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்ந்த செம்மல்.

சுப்பய்யா செட்டியார் என அனைவராலும் அன்புடன் அழைக்கப்பெற்ற எங்கள் இயக்குனர்

திரு அ. சுப்பிரமணியம் செட்டியார்

அவர்கள் தன்னுடைய மறைவினால் சமூகத்தைப் பேரிழப்பில் ஆழ்த்திவிட்டு 16-8-1970 அன்று இயற்கை எய்தினர்கள்.

அவர்களுக்கு எங்களது இறுதி அஞ்சலி செலுத்துகிறோம். அன்னாரின் ஆன்மா சாந்தியடைவதாகுக.

ஊழியர்கள்,

ஆங்கிலோ பிரஞ்ச் டெக்ஸ்டைல்ஸ் லிட்.

26-8-1970 பாண்டிச்சேரி

மூல நோயை

முற்றவிடாமல்

நம்பிக்கையான

ஹெடன்ஸா

உபயோகித்து

நிவாரணம்

அடையுங்கள்;

—ரண

சிகிச்சையையும்

தடுங்கள்

ஆஸ்துமா நிவாரண மூலிகை

ராஜஸ்தான் பிரபல அரசியல் சமூகத் தலைவர் காலஞ்சென்ற ஸ்ரீ சம்பூர்நாத் அவர்களின் பேரன் ஸ்ரீ கேசவ் மோஹன்லால் ஏழைகளுக்கு ஆஸ்துமா நிவாரண மூலிகை வினியோகிக்கிறார். ஸ்ரீ சம்பூர்நாத் அவர்களுக்கு இந்த மூலிகை ஒரு சந்நியாசியால் கொடுக்கப்பட்டு கடந்த 40 ஆண்டுகளாக இலவசமாக வினியோகிக்கப்பட்டது. இத்தன்னலமற்ற சேவைக்கு அரசாங்கம் உபகாரச் சம்பளம் அளித்தது. ஆனால் இந்த நற்பணியை அவர் தன் பேரனிடம் ஒப்படைத்து விட்டு துறவியானார். தற்பொழுது இப்பணியை பேரன் நடத்துவதோடு இதற்கு பண உதவி செய்யுமாறு தனவந்தர்களைக் கேட்டுக் கொள்கிறார். மூன்று டோஸ் மருந்து சாப்பிட்டதுமே ஆஸ்துமாவினால் அவதியுறும் பலர் நிவாரணமடைந்துள்ளனர். ஆஸ்துமாவினால் அவதியுறுபவர்கள் மூலிகைக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு ஆங்கிலத்தில் எழுதவும்:

SRI KESHAV MOHAN LAL

5, Haralaldas Lane, Jorabagan Park, West

CALCUTTA-6 (India)

எங்களுக்கு கிளை ஆபீஸ்கள் இல்லை

மேற்கு வங்காள சங்கங்கள் ரிஜிஸ்டிரேஷன் ஆக்ட் 1961 கீழ் நிறுவப்பட்ட பாபா ஸ்ரீ சம்பூர்நாத் சேவா கேந்திராவினால் வியாதியஸ்தர்கள், டாக்டர்கள், மருந்துவர்கள் அளிக்கும் நன்கொடையின் மூலம் ஆஸ்துமாவினால் அவதியுறுபவர்களின் நலனுக்காக வெளியிடப்பட்டது.

Naa/8/70

பணிக்கெனத் தபால் ஆபீஸில் கணக்குத் தொடங்கி அதில் அந்தப் பணத்தைப் போட்டனர். மஹேஷ் பாண்டேயும் மூவாயிரம் ரூபாயை அதே கணக்கில் போட்டான். அந்த இருபது நாட்களுக்கிடையில் அவன் வீடு வீடாக அலைந்ததில் மேலும் ஓராயிரம் சேர்ந்தது.

மஹேஷ் பாண்டேயின் மதிப்பும் கௌரவமும் எல்லோருடைய பார்வையிலும் திடீரென்று உயர்ந்து விட்டன. இப்பொழுது அவன் தலையில் காவி நிறத் தலைப்பாகை கட்டத் தொடங்கினான். கையில் தடியை எடுத்துக் கொண்டு நடந்தான். அவன் உடம்பு சிறிது தளர்ந்து போயிருந்தது.

அந்தத் தளர்ந்த உடலுடனேயே, அவன் பஞ்சாயத்து அலுவலகம் சென்று வரைபடத்தையும் பார்த்து வந்தான். ஏலம் வரும் நாள் நெருங்கிக் கொண்டிருந்தது. அது நெருங்க நெருங்க மஹேஷ் பாண்டேயின் வாட்டம் அதிகரித்துக் கொண்டே வந்தது.

இதற்கிடையில் ஏரியில் வேட்டையாடப் பல மனிதர்கள் கூட்டம் கூட்டமாக வந்து போனார்கள். மஹேஷ் பாண்டே வீட்டிலிருந்தாலும் ஊரில் சுற்றித் திரிந்தாலும் பறவைகளின் கூக்குரலையே கேட்டான். அதோடு வேட்டைக்காரர்கள், மென்மையான இறக்கைகளை உடைய பறவைகளைத் தொங்கவிட்டுக் கொண்டு எடுத்துச் செல்வதையும் கண்டான். அப்பொழுதெல்லாம் அவனுக்குப் பார்வதியின் நினைவு வந்தது. அவனுடைய நிலையும் அந்த ஜோடிக் கொக்குகளின் நிலைபோலத்தானே இருந்தது!

வீட்டில் படுத்திருந்த போது பறக்கின்ற பறவைகளின் மெல்லிய இறக்கைகளின் சரசரப்பைக் கேட்டால் பார்வதி சரசரக்கும் புத்தாடை அணிந்து கண்ணுக்குத் தெரியாமல் சென்று கொண்டிருந்தது போன்ற உணர்வு அவனுக்கு ஏற்படும்.

அன்று காலையில் எழுந்தபோது அவன் மனம் சரியாகவே இல்லை. அமைதியைப் பெற அவன் ஏரியை நோக்கிச் சென்றான்.

ஏரியை அடைந்து தனது தடியால் பாசியை விலக்கிக் கொண்டிருந்தான். நீருள் இருந்த செடியைச் சுழற்றி வெளியே இழுத்தான். சிறிய சிறிய விதைகளை எடுத்து வாயில் போட்டுக் கொண்டான். பின்பு ஜலமஞ்சரிப் பூக்கள் மலர்ந்திருந்த இடத்துக்குச் சென்றான். அதன் பக்கத்திலிருந்து தான் சேறு ஆரம்பமாகியது. ஒரு கொடி நீருள் கம்பி விரித்தாற் போன்று படர்ந்திருந்தது. அதன் முடிச்சுக்களின் அருகில் சிறுசிறு நத்தைகள் ஒட்டிக் கொண்டிருந்தன. நூல்போன்ற சிறிய வேர்கள் மீனின் வெள்ளைச் சிறகைப் போல மெல்ல மெல்ல ஆடிக் கொண்டிருந்தன. சேற்றில் இறங்கி, அவன் ஜலமஞ்சரிப் பூக்களைப் பறித்தான். அவற்றை ஒரு கொத்தாகக் கட்டிக் கொண்டு திரும்பினான்.

விருந்தினப் பறவை இனங்கள் இரவு முழுவதும் இரை தின்றுவிட்டு இப்பொழுது பறந்து செல்ல இருந்தன. அப்பொழுது ஒரு துப்பாக்கிக் குண்டு அக்கரையிலிருந்து சுடப்பட்டது. பறந்து சென்று கொண்டிருந்த பறவைக் கூட்டங்களிலிருந்து ஒரு பறவை வலியால் கதறிக் கொண்டு திடீரென ஏரியின் நடுவில் விழுந்தது. தங்கம் போன்ற அதன் இறகுகள் நீரில் உதிர்ந்தன. நீல ஏரியில் அமைதியான தண்ணீரில் ஒரு சலசலப்பு ஏற்பட்டது. கண நேரத்துக்குப்பின் செவ்விரத்தத்தின் ஒரு மெல்லிய கோடு நீரில் தோன்றிற்று. அப்பறவை நீந்திக் கொண்டே மறு கரைக்குப் போக முயன்று கொண்டிருந்தது. அதனுடைய மெல்லிய இறக்கைகள் படபடத்தன. தண்ணீரில் இரத்தக் கோடு அதைத் தொடர்ந்து சென்றது.

புதரிலிருந்து வேட்டைக்காரர்கள் வெளியே வந்தனர். அவர்கள் பறவையைத் தேடிப் பார்த்தனர். ஆனால் அந்தப் பறவை நீந்திச் சென்று கரைஏறிப் புதருள் மறைந்து மௌனமாக அமர்ந்தது. அவர்கள் மிகவும் தேடினார்கள். ஆனாலும் அப்பறவை அவர்களுக்குக் கிடைக்கவில்லை. ஏரியில் மறைந்து கொண்டிருந்த கோடுகளுக்கிடையில் ஒருசில இறகுகள் கிடந்தன.

மஹேஷ் பாண்டேயின் மனம் மிகவும் வருந்தியது. ஜலமஞ்சரிப் பூக்களை அங்கேயே எறிந்துவிட்டு வீடு திரும்பினான்.

பார்வதியின் நினைவு அவனுக்கு மீண்டும் வந்தது. பஞ்சாயத்து ஏலத்தன்று அவன் மூவாயிரம் ரூபாய்க்கு ஏலம் கேட்டு, மேடைக்கு அருகிலிருந்த நிலத்தை வாங்காமல் சேறுடன் கூடிய நீல ஏரியை வாங்கினான். ஜனங்கள் ஆச்சரியத்தால் அகல விழித்தார்கள், இவனுடைய புத்தி பேதலித்து விட்டதோ என்று!

''கோவிலின் பெயரைச் சொல்லி இவன் ஏமாற்றி விட்டான். பணத்தை ஏப்பம் விட்டு விட்டான்'' என்று பேசிக் கொண்டார்கள். ஆனால் அவன் யாருக்கும் எந்த பதிலும் சொல்ல வில்லை. அவனால் இனி பார்வதிக்கும் பதில் சொல்ல முடியாதுபோல் தோன்றியது. என்ன பதில் சொல்வான் அவன்?

பங்குனி மாதம் வந்ததும் விருந்தாளிகளாக வந்த பறவைகள் பறந்து போய்விட்டன. அன்னங்கள் சென்று விட்டன. வெள்ளைச் சக்கர வாகங்கள் தங்கள் பழைய வீடுகளுக்குத் திரும்பி விட்டன. ஆம், வந்திருந்த அத்தனை பறவைகளுமே சென்று விட்டன. ஏரி மிகவும் வெறிச்சோடிக் கிடந்தது. ஆனால் அவை மறுபடியும் வழக்கம் போல் கூட்டம் கூட்டமாகக் கார்த்திகை மார்கழி மாதங்களில் திரும்பி வரும் என்று மஹேஷ் பாண்டே நம்பினான்.

மஹேஷ் பாண்டேக்கு எழுதப் படிக்கத் தெரியாதுதான். ஆனால் ஏரிக்குப் போகும் பாதையில் உள்ள முதல் மரத்தில் அவன் ஓர் அறிவிப்புப் பலகையை மாட்டினான். அதில், ''இங்கு வேட்டையாடக் கூடாது'' என்று எழுதி வைத்திருந்தான். அதற்குக் கீழே உள்ள வரியில் ''கையொப்பம்: நீல ஏரியின் உரிமையாளர் — மஹேஷ் பாண்டே'' என்று இருந்தது.

தமிழாக்கம்: **இ. வேங்கட கிருஷ்ணய்யங்கார்**

பிஞ்சு மனத்திடம் கொஞ்சியவர்

ஆகஸ்டு 31ந் தேதி மாண்டிஸோரி அம்மையாரின் நூறுவது பிறந்த தினம். அதையொட்டி இந்திய அரசாங்கம் தபால் தலை வெளியிடுகிறது.

"குழந்தைப் பருவம் அற்புதமானது. அளவற்ற அறிவுப் பசியை உடையது. அந்தப் பருவத்தில் கல்வியை விளையாட்டாகவே கற்றுக் கொள்ளும் திறமை குழந்தைக்கு இருக்கிறது. ஆனால் ஐந்து வயதுக்குப் பின் தான் குழந்தைக்குக் கல்வி புகட்ட ஆரம்பிக்கிறோம். இரண்டரை வயதிலேயே கல்வி போதிக்கத் தொடங்கலாம்." இது மாண்டிஸோரி அம்மையாரே வெளியிட்ட கருத்து.

குழந்தைகள் கல்வி விஷயமாக இவருக்கு எப்படி அக்கறை ஏற்பட்டது?


"இத்தாலியில் தொழிலாளர் தங்கள் குழந்தைகளை விட்டு விட்டுப் பகல் முழுதும் உழைக்கப் போய்விடுவார்கள். அக் குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளும் பல நிலையங்கள் இத்தாலியில் உண்டு. அங்கு அக்குழந்தைகள் நாம் கஷ்டம் என்று நினைப்பவற்றை மிக எளிதில் புரிந்து கொள்வதைக் கண்டேன். அது முதல் புது ஆராய்ச்சியில் நான் இறங்கினேன்" என்று மாண்டிசோரி கூறியிருக்கிறார்.

"குழந்தைகளின் இயற்கை அறிவை மலரச் செய்ய வேண்டும். யார் யாரிடம் எந்த சக்தி மறைந்து கிடக்கிறதோ அதை வெளிக் கொண்டு வர வேண்டும். அதற்கு அவர்கள் போக்கிலேயே விட வேண்டும். அறிவுக்குச் சுதந்திரம் வேண்டும். அந்தச் சுதந்திர முயற்சியில் உண்டாகும் விளைவுகள் ஆச்சரியம் அளிப்பவையாக இருக்கும்."

மாண்டிஸோரி அம்மையார் இத்தாலியிலேயே தம் இக் கருத்தை வெளியிட்டபோது போதிய ஆதரவு கிடைக்கவில்லை. அடையாற்றில் இவர் முறை வெற்றி கண்டபின் தான் பிற நாட்டினரும் இந்தக் கல்வி முறையில் சிரத்தை கொள்ள ஆரம்பித்தனர். இதற்கு உதவியவர்கள் அருண்டேலும் அவர் மனைவி ருக்மிணிதேவியும்.

மாண்டிஸோரி கல்வி முறைப்படி குழந்தைகள் எப்போது பிரியப்படுகின்றனவோ அப்போது பள்ளிக்கு வரலாம். எப்போது





இஷ்டப்படுகின்றனவோ, அப்போது வீட்டுக்குப் போகலாம்.


சிறியதும் பெரியதுமாகப் பல உருவங்களில் வர்ணம் தீட்டிய கட்டைத் துண்டுகள், மணிகள், கணக்கு அட்டைகள், இன்னும் பலவித விளையாட்டுக் கருவிகளுடன் குழந்தைகள் உரிமையுடன் விளையாடி அறிவைப் பெற வேண்டும்.

குழந்தைகளுக்குத் தூக்கம் வந்துவிட்டால் பள்ளியிலேயே தாராளமாகத் தூங்க அனுமதிக்க வேண்டும்.

மாண்டிஸோரி முறைக் கல்விப் பள்ளிகளில் கல்வி போதிப்பவருக்கு ஆசிரியர் என்று பெயர் இல்லை. இயக்குனர் என்றே பெயர். அவர்கள் உளநூலில் தேர்ச்சி பெற்றவர்களாக இருக்க வேண்டும்.

இந்தக் கல்வித் திட்டத்தில் வகுப்புகள் கிடையாது. ஒவ்வொரு குழந்தையுமே ஒரு வகுப்பு!

— ரஜன்



கடைத் தெருவிலிருந்து திரும்பி வந்த விருபாட்சன் கூறினான்:

''அரிசி விலை கிலோ இரண்டரை ரூபாய் ஆகிவிட்டது. ஏழை எளியவர்கள் என்ன செய்வார்கள்? காசு உள்ளவர்கள் வாங்குகிறார்கள். இன்று ஐம்பது ரூபாய் கிடைத்தது.''

கூறிய கையோடு சுநந்தனுக்கெதிரே நோட்டுக்களையும் சில்லறைகளையும் எண்ணி வைத்து, ''எனக்குப் பணம் வேண்டாம். அரிசியாகவே கொடுத்து விடு !'' என்று முடித்தான்.

சுநந்தன் சிரித்தவண்ணம், ''வீட்டிலே உடல் நலம் இல்லை. மகள் மாகனியிடம் சொல்லி நாலு வேளைக்குவேண்டிய அரிசியை வாங்கிப் போ. ஆனால் ஒன்று நினைவு வைத்துக்கொள். இந்தத் தடவை உன்னை நம்பித்தான் சாகுபடியே நடந்தாகணும். என் உடல்நிலைதான் உனக்குத் தெரிந்திருக்கிறதே!'' என்றான்.

''நான் இருக்கிறவரை நீ கவலைப்படாதே. ஆனால் ஆனந்தனின் மனசு சாகுபடி விஷயத்தில் செல்வதே இல்லை. உன் பிள்ளைகளில் பிரதீபன் ஒருத்தன்தான் பிற்காலத்திலே முன்னுக்கு வரக்கூடியவனாகத் தோன்றுகிறான். அவனையும் இந்த விவசாயத்திலே போடு.''

''ஆமாமாம். அப்படித்தான் நானும் நினைக்கிறேன். ஆண் பிள்ளைகள் எப்படியாவது பிழைத்துக் கொள்வார்கள். ஆனால் இந்தப் பெண்ணை என்ன செய்கிறது? கருகருவென்று நல்ல பயிர் மாதிரி எப்படி வளர்ந்து வருகிறாள், பார்த்தாயா ?''

விருபாட்சனின் முகத்திலே கம்பீரம் படர்ந்தது. ''தலைமை ஆசிரியர் மகனுக்கும் இவளுக்கும் முடி போட்டுவிட்டால் என்ன?'' என்று கேட்டான்.

''ஊஹூம். உதவாக்கரைப் பிள்ளையல்லவா அவன் ! அது போகட்டும். மணியக்காரர் பிள்ளையைப் பற்றி என்ன சொல்கிறாய் ? இந்தத் தடவை அவன் பஞ்சாயத்துத் தலைவனாகக்கூட ஆகியிருக்கிறான். அவன் தந்தைக்கு நம் சம்பந்தத்திலே ஆசையிருக்கிறது!'' சுநந்தன் இடுப்பை நெட்டி முறித்துக் கொண்டே கேட்டான்

''மெய்தான். அப்பாவின் செல்வாக்கிலே பிள்ளையும் பெயர் எடுத்திருக்கிறான். தவறில்லை; நல்ல இடம்தான். இன்று அந்தப் பையன்கூட உன்னிடம் வரக் கூடும். தொன்றுநல் அதிகாரிகள் வரப் போவதாகக் கேள்வி!'' என்றான் விருபாட்சன்.

சுநந்தனுக்குக் கோபம் கொதித்து வந்தது. ''அந்த பிசிநாறிப் பசங்கள் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்? இது அவர்கள் வீட்டு நெல்லா ? நான் உழைத்துப் பயிரிட்டிருக்கிறேன். அவர்கள் என்ன செய்வார்கள்? பதினேழு ரூபாய்க்கு லெவி நெல் பிடித்துக் கொண்டு போவார்கள்! என்ன அநியாயம்?'' என்று சீறினான்.

விருபாட்சன் ஒரு கோப்பைத் தேநீர் தருமாறு மாகனியிடம் சொல்லி, சுநந்தனின் அறையில் போட்டிருந்த ஆசனப் பலகையில் அமர்ந்து கொண்டு கூறினான்: ''கடைத் தெருவிலே அநியாயம் நடக்கிறது. அரிசி விலை அறுபது ரூபாயாக ஏறி விட்டது. வாங்குகிறவர்கள் வாங்குகிறார்கள். விற்கிறவர்கள் விற்கிறார்கள். ஏழைகள் பாடுதான் திண்டாட்டம். சாகாமல் செத்துக் கொண்டிருக்கிறார்கள். கண்டி நேற்று 'பார்ட்டி'யோடு மாவட்ட அதிகாரியிடம் போயிருக்கிறான்!''

''யாரோடு?'' என்று கேட்டான் சுநந்தன்.

''சுதாகரோடு. அப்பன் செத்த பிறகு அவனைக் கண்டு பேசவே முடியவில்லை. தேர்தல் நடந்து நான்கு ஆண்டுகள் ஓடிவிட்டன. ஒரு தடவை இந்தப் பக்கம் எட்டிப் பார்த்தானா? நாம் என்னவோ வோட்டுப் போட்டோம். வெற்றி கிடைக்கவில்லையென்றால் அதற்கு யார் பிணை ?''

இதே சமயம் மாகனி முகத்தில் முறுவல் ஆட விருபாட்சனுக்குத் தேநீர் கொண்டு வந்து தந்தாள். தந்தையைப் பார்த்து, ''நீங்களும் தேநீர் குடிக்கிறீர்களா, அப்பா?'' என்று கேட்டாள்.

''கொண்டு வா. அம்மாவுக்கும் கொடு !'' என்று கூறிய சுநந்தன், ''அப்படியே ஒரு கின்னப் புகையிலையும், வெற்றிலை பாக்கும் விருபாட்சனுக்குக் கொண்டுவா !'' என்றான்.

''நீ சொல்லவில்லை, நான் கொடுக்கவில்லை என்றாலும் இவர் கேட்டு வாங்கிக் கொள்வார்!'' என்றாள் மாகனி.

விருபாட்சன் தேநீரைப் பருகியவாறே, ''ஏனம்மா! எத்தனை நாட்களுக்கு நீ கொடுக்கப் போகிறாய்? நாளைக்கு நீ ஒருவன் பின்னாலே போய் விட்டால், அப்புறம் உன்னையா கேட்கப்போகிறேன்!'' என்றான். மாகனி சிரித்துக் கொண்டே சமையலறைக்குள் ஓடி விட்டாள். ''பெண் கெட்டிக்காரப் பெண். நீங்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்'' என்று முடித்தான் விருபாட்சன்.

இருவருமே பேச்சை மறைத்து மாற்றிக் கொண்டார்கள். நான்கு ஆண்டுகளுக்கு முன்பு இருந்த சுதாகரனைப் பற்றிப் பேச்சு எடுப்பதை யாருமே விரும்பவில்லை.

இந்த நான்கு ஆண்டுகளில் சுதாகரன் குறைந்தது பத்துத் தடவையாவது கிராமத்துக்கு வந்திருப்பான். ஆனால் தப்பித் தவறிக்கூட அவன் சுநந்தனின் வீட்டுப் படி ஏறி வந்ததில்லை. தந்தை இறந்த பொழுதுகூட அவன் அவனைப் பார்க்காமலேயே போய்விட்டான். இதனால் கண்டிக்கு மனத்தில் சற்று வருத்தம்தான். இருந்தாலும் நாளடைவில் அதை மறந்துவிட்டான். அரசாங்கம் நெல்லுக்கு விலை நிர்ணயித்து, லெவி முறையில் பிடித்துக் கொண்டு வெளியூருக்கு எடுத்துப் போனதால், உள்ளூர் மக்களின் மனத்தில் பொருத்த அதிருப்தி நிலவியது. அதைக் காட்டிக் கொள்ளக் கண்டி முதலானவர்கள் ஊர்வலம் சென்றார்கள். நான்கைந்து முறை நகரத்துக்குத் தூதுக் குழு அனுப்பினார்கள். இப்படி மக்கள் நலனுக்காகப் பாடுபட நேர்ந்த பொழுது கண்டி - சுதாகரன் இருவரும் மீண்டும் கூடிவிட்டார்கள்.

''மணியக்காரரின் மகன் தந்தையின் அன்பைப் பெற்றவன். அதனால் அங்கே சௌகரியமாக வாழ முடியும்!'' என்றான் விருபாட்சன், விட்ட இடத்தைப் பிடித்துக் கொண்டு.

அதே நேரம், மாகனி வெற்றிலை, பாக்கு புகையிலை கொண்டு வந்தாள். ''சித்தப்பா! அரிசி சாதந்திரம்தான் தர முடியும். அங்கே பாடம் நடக்கிறது பிள்ளைகளுக்கு. இங்கேயோ அம்மா உடம்பு சரியில்லாமல் இருக்கிறாள். அதனால் நெல் குத்தவே இல்லை. இன்று இரவுச் சாப்பாட்டை இங்கேயே வைத்துக் கொள்ளச் சொன்னார்கள் அம்மா! வயலுக்குப் பக்கத்தில் இருக்கும் குட்டையிலே ஒரு வேளைக்கு மீன் கிடைக்குமானால் பிடித்து வாருங்கள்!'' என்றாள்.

விருபாட்சன் வாயெல்லாம் பல்லாக, ''நன்றாகச் சோறு படைக்கணும். அப்பொழுதுதான் மணியக்காரர் பிள்ளையை உனக்கு மணமகனாக்குவேன்!'' என்றான்.

மாகனி பிரமித்து விட்டாள். அந்தப் பிரமிப்பில் அவளுக்குக் கோபமும் வந்தது. ''அப்படியானால் நான் சமைத்துப் போட முடியாது, தெரியுமா?'' என்று கூறிவிட்டு விடுவிடென்று நடந்தாள்.

விருபாட்சனுக்குச் சிரிப்பு வந்தது. வெற்றிலை — புகையிலையை வாயில் அடக்கிக் கொண்டு, ஏர் கலப்பை, கொட்டாங்கச்சி அகப்பை (லாஹ்லி) எடுத்து வர உள்ளே சென்

■

அஸ்ஸாமைச் சேர்ந்த ஸ்ரீ வீரேந்திரகுமார் பட்டாச்சார்யா 1-3-1924ம் ஆண்டு பிறந்தவர். கௌஹாத்தி காட்டன் கல்லூரியில் பயின்றவர். அஸ்ஸாமிய மொழிப் பத்திரிகைகளான 'பான்ஜீ', 'ஜனதா' முதலியவற்றில் ஆசிரியர் குழுவில் பணியாற்றித் தற்பொழுது 'நவயுக்' கின் ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார். சாகித்ய அகாதெமியின் பரிசு பெற்ற இவர் உள்ளத்தைத் தொடும் சில நாவல்களும் பல சிறு கதைகளும் எழுதியுள்ளார். 'பிளாஸ்டிக் பூ'வையும் இவர் மணக்க வைத்திருக்கும் அழகைப் பாருங்கள்.





றான். அப்போது அம்மாவும் பெண்ணும் ஏதோ காதைக் கடித்துக் கொண்டிருந்தார்கள். வயல் வேலைக்கு வேண்டியவற்றைத் தேடி எடுத்துக் கொண்டு புறப்பட்டான் விருபாட்சன்.

அதற்கு ஒரு மணி நேரம் கழித்து மணியக்காரரின் மகன் சோபனோடு கொள்முதல் அதிகாரியும் போலீஸ்காரர்களும் சுநந்தனைக் காண வந்தனர். உடல்நலமற்றிருந்த பொழுதிலும் செய்தி அறிந்ததும் சுநந்தன் படுக்கையிலிருந்து எழுந்து வெளியே வந்தான். எல்லோரையும் மரியாதையாக வரவேற்று உட்கார வைத்தான். தன் மகள் மாதவியைக் கூப்பிட்டுத் தேநீர் கலந்து வருமாறு கூறினான்.

அதிகாரி அதிகப்படி நெல்லுக்கான கணக்கைக் காட்டி, ''இந்த நெல் எங்களுக்கு வேண்டும்'' என்றார்.

''அவ்வளவு என்றால் அளக்க முடியாது. அளந்தால் நாங்கள் பட்டினி கிடந்து மடிய வேண்டியதுதான் !'' என்றான் சுநந்தன்.

''முப்பது ஏக்கர் நிலம் உங்களுக்கு. குறைந்தது முந்நூற்று அறுபது மணங்கு நெல் கண்டு முதல் செய்திருப்பீர்கள் நீங்கள். முந்நூறை வைத்துக் கொண்டு அறுபதை எங்களுக்குக் கொடுத்து விடுங்கள்!''

''எங்கள் உடலை மண்ணாக்கி, இரத்தத்தை வியர்வையாக்கிப் பாடுபட்டு நாங்கள் பயிர் செய்கிறோம். ஆபத்து — சம்பத்துக்கு எங்கள் கிராமத்தாருக்கு உதவுகிறோம். எங்கள் கிராமத்தைத் தவிர இந்தப் பக்கத்தில் இருக்கும் மற்ற சகோதரர்களுக்கும் விவசாய விஷயத்தில் உதவ வேண்டிய கடமை எங்களுக்கு இருக்கிறது. நாங்கள் எங்கள் உடை- உணவு, நாள், கிழமை — மருந்து — மாயம் என்று எல்லாச் செலவுக்கும் எங்கள் பயிரையேதான் நம்ப வேண்டியிருக்கிறது.....!''

குடியானவர்கள், கிராமங்கள் இவற்றின் பொருளாதார நிலையை உணராத அதிகாரி தம் இருக்கையிலிருந்து எழுந்து, ''மாவட்ட ஆணையாளரின் உத்தரவு, எப்படியும் நெல் சேமிக்கும்படி. வாருங்கள், உங்கள் விகிதத்துக்கு நீங்கள் தந்துதான் ஆக வேண்டும்!'' என்றார்.

''இப்படி அச்சுறுத்தி என்னிடமிருந்து ஒரு நெல் மணி பெற முடியாது. உங்களால் ஆனதைப் பார்த்துக் கொள்ளுங்கள்!'' என்றான் சுநந்தன்.

கோபமும் அவமானமும் அவன் முகத்தை இரத்தச் சிவப்பாக்கி விட்டன.

''ஸார், பத்து மணங்கு நெல் மட்டும் பெற்றுக் கொண்டு....'' என்று இழுத்தான் சோபன்.

கொள்முதல் அதிகாரியின் உதடுகளில் குரூரம் சிரித்தது. அவர் சராயின் பையில் கையை விட்டு, ''இதையெல்லாம் மாவட்ட அதிகாரியிடம் சொல்லிக் கொள்ளுங்கள். என்னிடம் சொல்லி என்ன பயன்? நாளைக்கு ஆள் அனுப்பி நான் நெல் எடுத்துப் போகிறேன். நீங்கள் அளக்கும் நெல்லுக்கு ஆயிரத்து இருபது ரூபாய் கிடைக்கும். நகர்ப்புறங்களில் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள்? தேயிலைத் தோட்டங்களில் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள்? அவர்களுக்கெல்லாம் உணவு கிடைக்க வேண்டுமா, வேண்டாமா?'' என்று கேட்டார். பிறகு அரசாங்க தமூனு பாரத்தை எடுத்து நெல் அளப்பதற்கான உத்தரவை எழுதினார். ஒரு போலீஸ்காரரிடம் கொடுத்துக் களஞ்சியத்தின் சுவரில் ஒட்டி விடுமாறு கூறினார்.

சுநந்தனுக்கு எல்லை மீறிய கோபம் வந்தது. ''நாங்கள் இரத்தத்தை வியர்வையாகப் பெருக விட்டு உழைப்பதும், சாகுபடி செய்வதும் நகரத்தில் உள்ள உதவாக்கரைச் சோம்பேறிகளுக்குச் சோறு போடவா? எங்களுக்காக அவர்கள் எல்லாரும் என்ன செய்தார்கள்? எங்களை உறிஞ்சி எடுப்பதைத் தவிர அவர்களுக்கு வேறு ஏது வேலை?'' என்றான்.

சோபனின் முகம் வெளிறிவிட்டது. அவன் அதிகாரியிடம், ''தாங்கள் படிந்து போனால் தான் நாங்களும் ஒத்துழைப்போம்!'' என்றான்.

அதிகாரியின் முகத்திலே அதிருப்தி கோடிட்டது. அவர் மௌனமாகப் போலீசாரை ஓரக் கண்களால் பார்த்தார். போலீசார் களஞ்சியத்தை நோக்கி முன்னேறினர். ''நெல் வசூலிக்க இந்த முறை கையாளப்பட்டால் கிராமமே பொசுங்கிப் போகும்'' என்றான் சோபன்.

சுநந்தனுக்கோ கோபம் கனலாகப் பற்றி எரிந்தது. ''நிலம் என்னுடையது, பொருள் என்னுடையது. அரசாங்கம் பட்டப் பகலில் கொள்ளைபோல் இதைச் சூறையாடுவதென்றால், அது எனக்குக் கட்டோடு பிடிக்காது. உணவு பிறருக்குப் பங்கிட்டுத் தரவேண்டும் என்றால், முதலில் கிராமத்து ஏழைகளுக்குத் தருவோம். நகரத்தில் அமர்ந்து வேலைக்கு நெளிவு எடுக்கும் சோம்பேறிகளுக்கு நாங்கள் ஏன் தரவேண்டும்?'' என்று வீராவேசமாகக் கேடடான்.

அதிகாரி எள்ளி நகையாடியவாறு கேட்டார்: ''நீங்கள் மட்டும் கிலோ இரண்டரை ரூபாய்க்கு விற்றுக் கொள்ளையடிக்கவில்லையா? எங்களுக்குக் கொடுப்பதென்றால் மட்டும் ஏன் இப்படிக் கஷ்டப்படுகிறீர்கள்?''

''அரசாங்கம் நியாய விலை நிர்ணயித்திருக்கிறதா? ஒரு மணங்கு தானிய உற்பத்திச் செலவே இருபது ரூபாய் ஆகிறது. அதோடு, கண்காணிப்பு, செய்நேர்த்தி என்று இன்னும் என்ன என்னவோ செலவுகள் இருக்கின்றனவே!'' என்றான் சுநந்தன்.

அதிகாரி பழையபடி நகைத்துக்கொண்டே, ''விலையைப் பற்றி நான் ஒன்றும் சொல்வதற்கில்லை. அதற்கு நீங்கள் அரசாங்கத்தோடு பேச்சு நடத்த வேண்டும். நாங்களோ வெறும் அரசாங்க ஊழியர்கள். உங்கள் நெல்லை எடுத்துப் போக நான் நாளை ஆள் அனுப்புகிறேன்'' என்று கூறிவிட்டுப் பூட்ஸ்கள் ஒலி யெழுப்ப விடுவிடென்று அங்கிருந்து சென்றுவிட்டார்.

''வந்து எடுத்துப் போவதைத்தான் பார்த்து விடுவோமே!'' என்று முணு முணுத்துக்கொண்டான் சுநந்தன் ஆவேசத்தோடு.

''இவர்களைத் தடுக்க எனக்கு ஒரு வழியும் தோன்றவில்லையே!'' என்றான் சோபன்.

''நீங்கள் உங்கள் நெல்லை என்ன செய்தீர்கள்?'' என்று கேட்டான் சுநந்தன்.

''நாங்கள் பெரும்பாலும் விற்றுவிட்டோம். எங்களிடம் இவர்கள் இன்னும் வர



மக்களின் கலாசார நிகழ்ச்சி

கலாசார நிகழ்ச்சி நிரல்கள் வாழ்வுக்கு அழகும் அளிக்க உதவு கின்றன. பணவசதி படைத்தவர்கள் மட்டுமே இவற்றின் பயனைப்பெற முடியும் என்பதல்ல. ஜம்ஷெட் பூரைப் பொறுத்தவரையாவது இது உண்மை. ஏனென்றால் அங்கு குறைந்த வருவாய் உள்ளவர்கள் வசிக்கும் பகுதிகளில் சமுதாய நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இந் நிலையங்களில் தங்களுடைய திறமையை வெளிக்காட்டவும், நிகழ்ச்சி நிரல்களை பார்த்து ரசிக்கவும் மக்களுக்கு வாய்ப்பு கிடைக்கிறது. தையல் வேலை மற்றும் பின்னல் வேலை கற்பிக்கும் வகுப்புகள், குழந்தைகளுக்கான கிண்டர்கார்ட்டன் பள்ளிகள், சங்கீதம் மற்றும் நாட்டியம் கற்பிக்கும் வகுப்புகள் முதலிய வைகளும் இந்த நிலையங்களில் ஏற்படுத்தப் பட்டுள்ளன. இந்த சமுதாய அபிவிருத்தித் திட்டங்களின் பெரும் வெற்றிக்கு இரண்டு காரணங்கள் உள்ளன. முதலாவது இந்தத் திட்டங்களில் பங்கு கொள்ளும் மக்களின் உற்சாகமும் ஆர்வமும். இரண்டாவது, ஜம்ஷெட்பூர் மக்களின் க்ஷேம நலத்தில் ஸ்டீல் கம்பெனி கொண்டுள்ள ஆழ்ந்த அக்கறை.

டாடா ஸ்டீல்

வில்லை. அப்பா ஒரு பட்டறையை மட்டும் திருமணத்துக்காக வைத்துக் கொண்டிருக்கிறார்!'' என்று விடையளித்தான் சோபன்.

சுநந்தன் பேச்சுத் திரும்பும் வாக்கில் கேள்வியைப் போட்டான்: ''யாருக்கும் திருமணம்?''

வெட்கத்தினால் சோபனின் முகம் இலேசாகச் சிவந்தது. ''இந்த வைகாசியில் அப்பா எனக்குத் திருமணம் செய்து விடுவதாக இருக்கிறார்!'' என்றான்.

''பெண்...?'' சுநந்தனின் முகத்தில் ஆவல் தொனித்தது.

'எத்தனையோ பெண்கள் பார்த்திருக்கிறோம். இருந்தாலும் உள்ளூராக இருந்தால் நலம் என்று யோசிக்கிறோம்!'' என்றான் சோபன்.

சுநந்தனுக்குக் கேட்க ஆறுதலாக இருந்தது. ''உன் அப்பாவின் யோசனை நியாயமானதுதான். உள்ளூர்ப் பெண்ணைச் செய்து கொள்வதில் எவ்வளவோ சௌகரியம் உண்டு'' என்று கூறிக் கொண்டிருந்தபொழுது மாகனி தேநீர்க் கோப்பைகளை எடுத்துப் போக அங்கே வந்தாள்.

சோபன் மாகனியை முன்பும் பலதடவை பார்த்திருந்தான். ஆனால் இந்தத் தடவை பார்த்தவன் மனத்தைப் பறி கொடுத்து விட்டான். முதிர்ந்த நெல் மணி போன்று பொன்னிற மேனி. வல்லிக் கொடி போன்ற எழில் மிகு உடல் அமைப்பு. அவன் பார்வையைக் கொண்டே மனத்தைப் புரிந்துகொண்டான் சுநந்தன். உள்ளத்திலே அவனையறியாத ஒரு கிளுகிளுப்பு. ''என் உடல் நிலை தான் வரவரச் சீர்கெடுகிறது. இந்தப் பெண்ணை ஒருத்தன் கையில் பிடித்துக் கொடுத்து விட்டால், என் கவலை தீர்ந்து விடும்!'' என்றான்.

சோபன் புன்முறுவலுடன் ''நான் போய் வருகிறேன், மாமா!'' என்று கூறி விடை பெற்றான்.

மாலையில் விருபாக்ஷன் வந்ததும் சோபனைப் பற்றிச் சுநந்தன் கூறினான். ''அப்படியானால் நாளைக்கே நான் மணியக்காரரிடம் போய் வருகிறேன்'' என்றான் விருபாட்சன்.

''அவ்வளவு அவசரம் தேவையில்லை. நாளைக்கு, கண்டி இன்னும் இரண்டு மூன்று பேர்களை அழைத்து வா. எப்படியும் நெல்லைக் காப்பாற்றியாக வேண்டும்!'' என்றான் சுநந்தன்.

''சரி!'' என்றான் அவன்.

உடல் நலிவுற்றிருந்தபோதிலும் மாகனியின் தாயார்தான் மீன் குழம்பு செய்து கொண்டிருந்தாள். மாகனி அம்மியில் மசாலா அரைத்துக்கொண்டிருந்தாள். அவள் கவனம் வேலையில் செல்லவில்லை.

மாகனியின் தாயார் கோபத்துடன் ''இன்று நீ என்ன இப்படி எதையோ பறி கொடுத்து விட்டாற்போல் மாய்ந்து மாய்ந்து போகிறாய்? வேலையில் கவனம் செலுத்தாமல்?'' என்று கடிந்தாள்.

''நீங்கள் எல்லோரும் என் திருமணத்தை ஏன் இவ்வளவு விரைவில் நடத்திவிட விரும்புகிறீர்கள்?''

''பெண்ணாகப் பிறந்து விட்டால் அயலார் வீட்டுக்குப் போய்த்தானே ஆக வேண்டியிருக்கிறது!'' என்று சிரித்தவாறே கூறினாள் மாகனியின் தாயார்.

அதைக் கேட்டு மாகனி கோபித்துக் கொண்டு அங்கிருந்து போய்விட்டாள்.

உணவு அருந்தி முடிந்து, விருபாட்சன் விடைபெற்றுப் போன பின் சுநந்தன் தன் மனைவியிடம் மாகனியின் திருமணத்தைப் பற்றிப் பிரஸ்தாபித்தான். அவள் பெண்ணின் மனத்தைக் கூற முற்பட்டபொழுது, ''உனக்கு அப்படி ஒரு சந்தேகம் ஏற்படுவானேன்?'' என்றான் சுநந்தன்.

''அவள் மூளையைச் சுதாகரன் ஆக்கிரமித்துக் கொண்டு விட்டான்.''

''நடக்காத காரியம். நான்கு வருடங்களாக இதையே யோசித்துக் கொண்டிருக்கிறாளா அவள்?''

''ஆமாம். சிறிது கவனித்தால் உங்களுக்குமே புரியும்.''

சுநந்தன் சிறிது நேரம் யோசித்துவிட்டு, ''உன் பெண்ணுக்கு விவரத்தைச் சொல்லிச் சரிப்படுத்து. நான் அவளைச் சோபன் கையில் தான் ஒப்படைக்கப் போகிறேன்!'' என்றான்.

தூங்கும்பொழுது தாயார் பெண்ணுக்குப் படித்துப் படித்துச் சொல்லி விட்டாள். ''நீ சுதாகரனைப் பற்றி நினைத்துப் புலம்பிப் பயன் இல்லை. அப்படி நடக்க நான் விடமாட்டேன். சின்ன வயதில் அவன் உன்னைக் கெடுத்து விடப் பார்த்தானே பாவி! அறியாப் பெண்ணானதாலே நீ பிழைத்தாய்!'' என்றாள்.

''அப்பொழுது அவரும் அறியாப் பிள்ளை தானே! அவருக்கு என்னிடம் ஆசையில்லையென்றால், என் இதயத்தை அடிமை கொள்வானேன்? நானும் அவரும் மரப்பாச்சி வைத்து விளையாடிய நாட்களில், என் நெற்றியிலே முத்தமிட்டு ஆணையிட்டு அப்படியொரு பாவச் செயலுக்கு ஆளாக்குவானேன்?'' என்றாள் மாகனி.

''அந்தப் பாவம் உன்னைப் பற்றாது. அவனையேதான் பிடிக்கும். அந்த வயதிலே அதைப் பாவம் என்றும் சொல்லி விடுவதற்கில்லை!'' என்றாள் தாயார்.

''அவர் என்னைப் பற்றி அடிக்கடி கண்டியிடம் விசாரிக்கிறாராமே!''

''அதெல்லாம் வெறும் வேஷம். நீ அவனை மறந்துவிடு. உன் அப்பா கூட அவனை மறந்து விடத்தான் சொல்கிறார்!'' என்றாள் தாயார்.

''ஒருவருக்கு உள்ளத்தைக் கொடுத்து விட்டு அப்புறம் அதை மறுப்பது பாவம் இல்லையா?''

''பாவம் இல்லை. உன்னிடம் அப்படி யார் சொன்னது?''

''என் மனம்!'' மாகனி மெதுவாகச் சொன்னாள்.

மாகனியின் தாயார், மனத்துக்கு அப்படி ஒரு மதிப்புக் கொடுக்கத் தயாரா யில்லை.

மறுநாள் பொழுது புலர்வதற்குள்ளாகவே போலீசார் வந்துவிட்டனர். சோபனே முதலில் வந்து சுநந்தனைப் படுக்கையிலிருந்து எழுப்பினான். அவனைத் தனியாக ஒரு மூலைக்கு அழைத்துச் சென்று, ''நீங்கள் அவர்களை நெல் எடுத்துப் போக விடவில்லையென்றால், உங்களைச் சிறைப்படுத்தி விடு

வார்கள். அதனால் அவர்களைத் தடுக்காதீர்கள்!'' என்றான்.

சுந்தரனுக்குக் கோபம் பொங்கி வந்தது. ''நீ சிங்கக் குட்டி. ஆண்பிள்ளைச் சிங்கமாக இருக்க வேண்டியவன். அதற்குப் பதில் எப்படிக் கோழையானாய், நரி போல?'' என்று கேட்டான். ''நான் இந்த உடலில் உயிர் இருக்கும் வரை அவர்களை நெல் எடுத்துப் போக விட மாட்டேன்!'' என்றான். தன் தலையணைக்கடியிலிருந்த தடியை உருவிக் கொண்டு கட்டிலிலிருந்து குதித்தான். நேரே நெல் பட்டறைக்குச் சென்று வாசலில் நின்று விட்டான்.

''நெல்லை எடுத்துப் போக எந்தப் பயலுக்குத் துணிச்சல் உண்டு? ஒரே அடியில் இரண்டாகப் பிளந்து போட்டு விடுவேன்!'' என்றும் கர்ஜித்தான்.

போலிசார் அருகிலேயே நின்றுகொண்டிருந்தனர். சப் இன்ஸ்பெக்டரும் கூட வந்திருந்தார். ''இப்பொழுது நெல்லை எடுத்துப் போக விடுங்கள். அப்புறம் சோபன் உங்கள் காரியத்தைச் சாதித்துத் தருவான். அப்படிச் செய்யாமல் பிறகு என்னைக் குற்றம் கூறுநீர்கள். சொல்லிவிட்டேன்!'' என்றார்.

''பரவாயில்லை. நீங்கள் உங்கள் கடமையைச் செய்யுங்கள். நான் என் கடமையைச் செய்கிறேன்!''

சப் இன்ஸ்பெக்டர் போலிசாரிடம் என்னவோ சொன்னார். போலிசார் சுந்தரனிடம் சென்று அதையே சொன்னார்கள். சுந்தரன் அவர்கள் பேச்சைக் கேட்டு, ''அப்படியானால் வாருங்கள், போவோம்! சற்றுப் பொறுங்கள், நான் என் சட்டையை மாட்டிக் கொண்டு வருகிறேன்!'' என்றான்.

இடுப்பு வலியினால் சுந்தரன் மிகவும் சிரமப்பட்டான். நொண்டி நொண்டி உள்ளே சென்றான், சட்டையை எடுத்து வர. ''உடம்பு சரியில்லாதவர்கள் நீங்கள். உணவும் அருந்திவிட்டு வாருங்கள்!'' என்றார் சப் இன்ஸ்பெக்டர்.

உணவு அருந்திப் பின் மனைவியிடம் விடை பெற்றுக் கொண்டான் சுந்தரன். விருபாட்சனுக்குச் செய்தி சொல்லி வரப் பிரதிபலை அனுப்பினான். செய்தி அறிந்து விருபாட்சன் வருவதற்குள், சுந்தரனும் மற்றவர்களும் வெகுதூரம் போய்விட்டார்கள். வீட்டு வாசலில் சோபன் மட்டும்தான் நின்றுகொண்டிருந்தான். அவனைப் பார்த்த விருபாட்சன், ''பஞ்சாயத்துத் தலைவனாயிருந்தும், என்னப்பா இப்படிச் செய்துவிட்டாயே! அண்ணனை அவர்களோடு ஏன் போகவிட்டாய்? அவருக்குப் பதில் நான் போயிருப்பேனே!'' என்றான்.

விருபாட்சன் சோபனைப் பார்த்து, ''வா, சோபன்! நாமும் நகரத்துக்குப் போவோம்! இருட்டுவதற்கு முன் எப்பாடு பட்டாவது அவரை மீட்டுக் கொண்டு ஊர் திரும்புவோம்!'' என்றான்.

''போகலாம். இருந்தாலும் வீட்டுக்குப் போய் எதற்கும் ஒரு வார்த்தை அப்பாவையும் கலந்து கொள்வோம்!'' என்ற சோபன் வீட்டை நோக்கி நடையைக் கட்டிவிட்டான்.

நடுப்பகல் உணவைத் தயாரித்து முடித்துவிட்டு மாகனியின் தாயார் வழியை எதிர்

1980ம் வருடத்திய செய்தி!



அமெரிக்காவின் புதிய ஜெட் விமானம் நான்கு மணி பதினொரு நிமிடங்களில் உலகை ஒரு முறை சுற்றி வந்தது. பிரயாணிகள் அந்த வியாழக்கிழமை நகருக்குள் வந்துவிடலாம். விமான நிலையத்திலிருந்து காரில் வந்து கொண்டிருக்கிறார்கள்.

முத்து : -லாப்இன்

நோக்கிக் கொண்டிருந்தாள். ஆனால் மத்தியானம் அவர்களுக்குப் பதில் போலிசாரும் தானியக் கொள்முதல் அதிகாரியுமே வந்தார்கள். வந்ததும் வராததுமாக அவர்கள் பட்டறையிலிருந்து நெல்லை அளந்து கட்டலாயினர்.

கண்டிக்குச் செய்தி தெரிய வந்ததும் கிராமத்து மக்களை அவன் ஒன்று கூட்டிக் கொண்டு வந்தான். ''நீங்கள் நெல்லை எடுப்பது பற்றி எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் அதை இந்த ஊரிலேயே விற்க வேண்டும். இல்லாவிட்டால் என்ன நடக்கும் என்று கூற முடியாது!'' என்றார்கள்.

அத்தனை மக்கள் கூடிவிட்டதைக் கண்ட அதிகாரி நெல் எடுப்பதை நிறுத்திவிட்டார். கிட்டங்கியைப் பூட்டிவிட்டுக் காவலுக்குப் போலிஸை நிறுத்திவிட்டு மாவட்ட அதிகாரிக்குச் செய்தி தெரிவிக்க ஓடினார்.

இரவு வெகு நேரம் ஆகியும் நகரத்திலிருந்து யாருமே வரவில்லை. குழந்தைகளுக்கு உணவு அளித்து விட்டுத் தாயார் பட்டினியிருந்தாள். இரவு முழுவதும் யாருடைய கண்களிலும் உறக்கம் கொள்ளவில்லை. இரவு கழிந்ததும், ஆனந்தன் திரும்பி வந்தான். சிறையிலிருந்து தந்தையைப் பற்றிச் செய்தி கொண்டு வந்திருந்தான் அவன்.

''அப்பா திரும்பி வருவார் அல்லவா?'' என்று கேட்டாள் மாகனி.

''கட்டாயம். சுதாகரன் சொன்னான், நாளைக் காலைக்குள் கட்டாயம் வந்துவிடுவாரென்று! அதற்கான முயற்சியை அவன் மேற்கொண்டிருக்கிறான். உன்னைப் பற்றியும் விசாரித்தான்'' என்றான் அவன்.

''என்ன விசாரித்தார்? — ஆமாம். இனி என்ன விசாரித்துத்தான் என்ன பயன்?'' மாகனி அலுப்போடு நெடுமூச்சு விட்டாள்.

''ஏன் மாகனி?''

மாகனியின் கண்களில் நீர் கரந்தது. அவள் எதுவுமே சொல்லவில்லை. அவள் கண்களில் ஏன் நீர் நிறைந்தது என்பதற்குக் காரணம் கண்டுபிடிக்க அவனுக்கு நேரம் பிடிக்கவில்லை. ''சுதாகரன் உனக்கு ஒரு பரிசு அனுப்பியிருக்கிறான். என் பையில் இருக்கிறது. பார்த்துக்கொள்!'' என்றான்.

மாகனி பையைத் திறந்து பார்த்தாள். பிளாஸ்டிக்கால் ஆன அழகிய வண்ண மலர் ஒன்று அதில் இருந்தது.

என்ன பொருள் இதற்கு? பெருந்தனக்காரர்களின் பகட்டில் மயங்காதே என்பது தானே? பொருளைப் புரிந்துகொண்ட அவள் விழிகளில் நீர்ப் பிரவாகம் எடுத்து ஓடியது.

— தமிழாக்கம்: ரா. வீ.

★இக்குறியிட்ட கடிதம் ரூ. 15/– பரிசு பெறுகிறது.



சென்ற 9–8–70ல் வெளியான தங்கள் ''கல்கி'' இதழில் முருக்கனூர் தண்டபாணி எழுதியுள்ள கடிதத்தை வட்டமேஜை பகுதியில் கண்ணுற்று அதிர்ச்சியடைந்தேன்.

எனது நிர்வாகத்தில் உள்ள பள்ளியில் கடிதத்தில் கண்ட கோஷங்கள் ஏதும் யாராலும் எழுப்பப்படவில்லை.

மணலி
11–8–70

எல். அண்ணாமலை
கரஸ்பாண்டெண்ட்
எல்.ஏ.ஆர். உயர்தர ஆரம்பப்பள்ளி

காவல்துறை கண்ட காந்தி, ஒரு மாவீரனின் மரணம் ஆகிய இரு கட்டுரைகளையும் வெளியிட்டு மகத்தான பணியாற்றியிருக்கிறீர்கள். அவற்றைப் படிக்கும்போது மேனி சிலிர்க்கது; நெஞ்சம் பூரித்தது. கண்ணீர் சுரந்தது.

நமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் எத்தகைய நெஞ்சை உருக்கும் நிகழ்ச்சிகள் மறைந்து கிடக்கின்றன ! இஷ்டம் போல் நடப்பதுதான் சுதந்திர வாழ்வு என்று எண்ணி இன்று நாடு போய்க் கொண்டிருக்கும் போக்கும், அரசியல்வாதிகளின் ஆரவாரப் பேச்சும், ஒரு தலைமுறையே விடுதலையின் விலை என்னவென்பதை அறிந்து கொள்ளாமல் தவறான வழிகளில் சென்று தடுமாறும் இழிவும் இதுபோன்ற மகத்தான உண்மைகளை அறிந்த பின்னராவது சீர்ப்படுமா?

தாய்நாட்டை நேசிப்பவன் அதற்குக் கேடு தேட மாட்டான். அதன் பண்புக்குப் பொருந்தாத பாதையில் சென்று தடுமாறமாட்டான். உழைப்பைப் போற்றுவான் — உலக அரங்கில் தன் நாடு உயர்ந்து நிற்க ஓயாது பாடுபடுவான்.

மக்கள் உழைப்பைப் போற்றும்போது வளம் பெருகும் ; வறுமை அகலும்; நாட்டின் பெருமை உயரும்; சிறுமை விலகும்.

எல்லாவற்றுக்கும் அடிப்படை தேச பக்தியேயாகும். அதனை ஊட்டி வளர்க்கும் அரிய பணியைக் கட்டுப்பாடாக எல்லாப் பத்திரிகைகளும், தலைவர்களும் மேற்கொண்டால் நமது பிரச்னைகளில் பெரும்பாலானவை தாமே தீர்ந்துவிடும்.

''இது என்னுடைய நாடு என்று பெருமைப்படாதவன் இருந்தும் இல்லாதவனே! உயிர் இருந்தும் ஆத்மா இல்லாதவன்'' என்ற கவிஞரின் வாக்கு எவ்வளவு பெரிய உண்மை!

தெய்வ பக்தியும் தேசபக்தியும் ஒருவனை வழி நடத்திச் செல்லும் இரு கண்கள். இதனை உணர்ந்து பணியாற்றும் கல்கியின் சேவை பெருகட்டும் !

சென்னை — 17
13–8–70

எஸ். சங்கரன்

டெர்மினஸ்களில்தான் ஓரளவு பஸ்களில் இடம் கிடைக்கின்றதேயொழிய, நடுவழி ஸ்டாப்புகளில் பஸ்கள் நிற்பதேயில்லை ; நின்றாலும், இடம் கிடைப்பதில்லை. காரணம் நமது தமிழக அரசு பஸ் கண்டக்டர்கள் சிலர், 25 பேருக்குமேல் ''நிற்கும் பிரயாணிகளை'' அனுமதிப்பதில்லை என்பதுதான். கண்டக்டர்கள் வைத்ததுதான் சட்டம் என்றநிலைமை இன்று சென்னை நகரில் ஓடும் தமிழக அரசு பஸ்களில் காணப்படுகிறது. இதற்கு ஒரு முடிவு கிடையாதா? அரசியல் சட்டத்துக்குக் கூட அடிக்கடி திருத்தங்கள் கொண்டு வரும் இந்நாளில் ஏன் இந்த நிற்கும் பிரயாணிகளின் எண்ணிக்கையை நிர்ணயிக்கும் விதிக்குத் திருத்தம் கொண்டு வரக் கூடாது? ஒன்று, இது சம்பந்தமான விதியை விரைவில் மாற்றவேண்டும்; அல்லது பஸ்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும். இவை இரண்டும் முடியாவிட்டால், தனியார் துறை பஸ் ஆபரேட்டர்களும் சென்னை நகரில் பஸ்கள் ஓட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

சென்னை — 5
10–8–70

எஸ். வெங்கடராமன்

★''ரஷ்யாவுக்கும், சீனாவுக்கும் இடையே ஏற்படுகின்ற சண்டையெல்லாம் வெறும் நாடகம்தான். மற்ற ஜனநாயக நாடுகளை ஏமாற்றும் வித்தைதான்'' என்று முன்பு ஒரு முறை ராஜாஜி குறிப்பிட்டிருந்தார்.

ரஷ்யா சமீபத்தில் வெளியிட்டுள்ள 'மேப்'பில் நம்முடைய நாட்டைச் சேர்ந்த சில பகுதிகளைச் சீனாவோடு சேர்த்து வெளியிட்டிருக்கிறது. இந்தச் செயலைக் கொண்டு மேலே கூறிய ராஜாஜி அவர்களின் கூற்று எத்தனை உண்மை என்பது தெரிகிறது.

கம்யூனிஸ்டுகளின் உண்மையான நிலை இதுவே. இன்றைய பாரத சமுதாயம் இதை உணர வேண்டும். இது குறித்து நமது சர்க்கார் எழுத்து மூலமாகக்கூட ஆட்சேபனை தெரிவிக்க வில்லை என்பது தெரிந்தபோது நம் உள்ளம் மிகவும் வேதனைப்படுகிறது. தாம் பதவியில் இருக்க வேண்டும் என்பதற்காக கம்யூனிஸ்டுகளின் தயவைப் பெற இந்திரா காந்தி இப்படி நாட்டின் தன்மானத்தையே விட்டுக் கொடுக்கிறார். அவருக்கு உண்மையான நாட்டுப் பற்று கிடையாதா ?

குளித்தலை
11–8–70

சக்திவேல்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon